
கல்கி




KALKI
4.5.1969
40 காசு



பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரமிளா லால் தமது விசேஷப் பக்குவ முறை ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

ரெக்ஸ் ஜெல்லி க்ரிஸ்டல்ஸ் உபயோகித்து லெமன் ஜெல்லி மோல்டு செய்து பார்த்திருக்கிறீர்களா?

இச்சைக் கினிய புதுமையான பழவகைச் சிற்றுண்டி!



செழிப்பான பழச்சுவை தரும் ரெக்ஸ் ஜெல்லியை சிறியோரும் பெரியோரும் ஒருங்கே விரும்புவார்கள். எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற பல்வேறு வகையான புட்டிங்குகளையும், பழத் தின்பண்டங்களையும் தயாரிக்க அது உதவுகிறது. ரெக்ஸ் ஜெல்லி க்ரிஸ்டல்கள் அருமையான பொருட்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தப்பட்டது. ஜெல்லி க்ரிஸ்டல்களுள் மிகவும் சிறந்தது ரெக்ஸ்

தேர்ந்தெடுக்க 6 இன் சுவைகள்



பக்குவ முறை:

- 1 பாக்கெட் ரெக்ஸ் லெமன் ஜெல்லி க்ரிஸ்டல்ஸ்
- ½ ஆரஞ்சு பழத்தின் தோல், சீவியது
- 1 ஆரஞ்சின் ரசம்
- ¼ லிட்டர் பாலேடு

1. மிகவும் சூடான ¼ லிட்டர் நீரில் ரெக்ஸ் ஜெல்லி க்ரிஸ்டலைை உருக வைக்கவும்.
2. ஆரஞ்சு ரசத்தையும், சீவிய பழத்தோலையும் அதில் போடவும்.
3. அப்படியே ஆற விடவும்.
4. பாலேட்டை கட்டியாகும் வரை கடைந்து, ஜெல்லி கலவையைச் சேர்த்து நன்கு கட வைக்கவும்.
5. சிறிதே உறைந்தபின், மீண்டும் கடையவும்.
6. அச்சிலூள் மாற்றி உறையும் வரை விட்டு வைக்கவும்

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை சேட்டை ஆங்கிலம்/இந்தி/வங்காளம்/தமிழ்/தெலுங்கு/மலையாளம்/ குஜராத்தி/ மராத்தி கன்னடத்தில் இலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர் ....

முகவரி ....

இக் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு பம்பாய்-1. (பிஆர்)

K-7

இது போல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின் வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!


கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பிஆர்)

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:
பாரி & கம்பெனி. டேர் ஹவுஸ், மதராஸ்-1
மற்றும் அவர்களது கிளைகள்

சௌமிய, சித்திரை 22உ — 1969 மே 4உ

கல்கி

பொருளடக்கம்



மேற்கு வங்காளம்
வாலைப் பிடித்தால்
கெட்டியாகப் பிடித்துக்
கொள்பவன்!
சவான்
ஜனநாயகம்
நச்சுப்
பாம்பு
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

மலர் 28 ❁ இதழ் 40

மதுபானக் கடை விஷயம்

சர்க்கார் ஏதாகிலும் ஒரு தீமையைக் கட்டுப்படுத்தப் போவதாகச் சொல்லிக் கொண்டு அதன் நிர்வாகத்தை மேற்கொண்டால் அது எந்த அளவுக்கு உண்மை என்பது புலப்படுவதற்கு அதிக காலம் தேவைப்படுவதில்லை! அத்தீமையைக் குறைக்க அல்லது கட்டுப்படுத்த வரி விதிப்பதாகச் சொல்லிக்கொண்டு தன் கஜானாவுக்கு நிதி சேர்த்துக் கொள்கிறது. அப்படிக் கிடைத்து வரும் வருமானத்தில் ஏதாகிலும் குறைந்தாலோ, நஷ்டம் ஏற்பட்டாலோ உடனே அதன் அந்தரங்கம் புலப்பட்டு விடுகிறது. அத்தீமை குறைவதிலோ, கட்டுப்படுவதிலோ அரசாங்கத்துக்கு அக்கறையில்லை என்பதுடன், வருமானம் குறைந்து போனதில் பெரு வருத்தமே ஏற்பட்டு விடுகிறது.

கேரள அரசாங்கம் கள்ளுக் கடைகளைத் திறந்தால் பெருவாரியாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தது. எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை என்று அது தனது ஏமாற்றத்தை வெளியிட்டிருக்கிறது. தமிழக அரசாங்கமும் லாட்டரிப் பரிசு டிக்கட்டுக்கள் விற்பனை குறைந்துவிட்டது என்பதில் ரொம்பவும் வருத்தமுற்றிருப்பதாகத் தெரிகிறது. இப்படிக் குறைந்து போனதற்கு வறட்சி நிலையின்மீது பழி போடப்படுகிறது. பத்து லட்சத்தில் ஒருவருக்குத்தான் பரிசு கிடைக்கும் என்ற நிலையில் அதில் பணம் போடுவது பேதைமை என்பது மக்களுக்கு இன்னும் தெரியாமலா இருக்கும்! உத்தரப்பிரதேச அரசாங்கம், கள்ளச் சாராயத்தைவிட மலிவான விலையில் மதுபானம் விற்க ஏற்பாடு செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஏகபோக விற்பனை உரிமைக்கும், திருட்டு வியாபாரத்துக்கும் இடையில் போட்டி! யாருக்கு அதிக வியாபாரம் நடக்கிறது என்கிற போட்டிதான்.

மதுவை, உரிமை பெற்று விற்றாலும் கள்ளத்தனமாக விற்றாலும் விளைவு என்னவோ ஒன்றுதான்—குடும்ப நாசம்! போதையிலும் தன்வசம் இழத்தலிலும், முறையாக விற்கப்படும் மதுவிற்கும் கள்ளச் சாராயத்துக்கும் ஒருவித வித்தியாசமும் இருப்பதில்லை!

விஸ்கி அல்லது பிராந்தி, அல்லது வேறு எந்த வகை மதுவையும் விடக் கள்ளில் போதைத்தன்மை குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனால் குடிகாரர்களுக்கு எந்த வித்தியாசமும் இல்லை. போதைத்தன்மை குறைவாக இருந்தால், அதனை **அதிக அளவில்** உட்கொண்டு அக்குறையை நிறைவு செய்து கொள்கிறார்கள். ஒரு பெரிய மொந்தை கள்ளில் இரண்டு சிறு பிராந்திக் கிண்ணங்களிலுள்ள போதை வஸ்து இருக்கிறது.

நாட்டுப் பட்டைச் சாராயம் குடித்து எந்த அளவுக்குப் போதை அடைகிறார்களோ, அந்த அளவுக்குக் கள்ளை நீண்ட காலமாகக் குடித்துப் பழக்கப்பட்டவர்களும், அதிக அளவில் கள்ளைச் சாப்பிட்டே போதை அடைகிறார்கள்.

பாலையோ, அரிசிச் சோற்றையோ, கோதுமைச் சப்பாத்திகளையோ அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டால் ஜீரணக் கோளாறு ஏற்படலாம். குடியோ மூளையைப் பாதிக்கிறது. மனிதனுக்கு அரும் பேறாய்க் கிடைத்திருக்கும் சிந்தனை செய்யும் அங்கம் பாதிக்கப்படுகிறது. குடி பகுத்தறியும் சக்தியைக் கெடுக்கிறது. அரிசியோ வேறு எந்த உணவோ அதிகம் உண்பதால் விளைவிக்காத கெடுதலை இது செய்கிறது. இதுதான் உணவுக்கும் போதைப் பொருளுக்கும் உள்ள பெரிய வித்தியாசம். அதனால்தான் அனாதி காலந்தொட்டுப் பெரியவர்கள் எல்லாம் போதை தரும் பொருட்களைச் சாப்பிடுவதைக் கண்டனம் செய்து வந்திருக்கிறார்கள்.

பொருளாதார ரீதியில் பார்த்தாலும் கூட மக்களின் குடிப் பழக்கத்திலிருந்து திரட்டப்படும் நிதி நல்லதல்ல. குடியில் செலவழிக்காமல் ஒரு மனிதனிடம் விட்டு வைக்கப்படும் பத்து ரூபாய், நாட்டுக்கு எவ்வளவோ பயன்தரத்தக்க உற்பத்திக்கு உபயோகமாகும். ஆனால் அதே பணம் குடி மூலம் பெறப்பட்டால் நாட்

டுக்கு முக்கிய செல்வமான மனிதனையும் அவன் மூளையையும் கெடுத்துவிட்டுச் சர்க்காருக்கு வந்து சேருகிறது.

சிலர் கள்ளில் பி—காம்ப்ளக்ஸ் சத்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள். காய்ச்சிய சாராயத்திலோ பிராந்தியிலோ, விஸ்கியிலோ பி. காம்ப்ளக்ஸ் சத்தோ வேறு எந்த வைட்டமின் சத்தோ கிடையாது. கள்ளிலிருக்கும் பி. காம்ப்ளக்ஸ் நல்லதுதான். ஆனால் அது கெடுதலை விளைவிக்கும் போதைப் பொருளுடன் கலந்தல்லவோ இருக்கிறது. கூனூரில் உள்ள நமது ரசாயன ஆராய்ச்சிச் சாலையின் தலைவராக இருந்த மக் ஹாரிஸன் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எனக்கு மிக உறுதியாகச் சொன்னார்: 'பி. காம்ப்ளக்ஸ் வேண்டுமானால் வேறு பொருள்களில் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் கள்ளிலிருந்து மட்டும் கூடாது. ஏனெனில் மனிதனுக்குத் தீமை விளைவிக்கும் பல பொருள்களுடன் அது கலந்திருக்கிறது' என்று.

கடைசியாக இன்னொரு வாதம். மதுவிலக்குச் சட்டம் இருந்தும் கள்ளச் சாராயம், திருட்டுக் குடி இருந்துதானே வருகிறது. எவ்வளவு திறமையாகப் போலீசார் வேலை செய்தாலும் இதனை நிறுத்த முடியவில்லையே என்கிறார்கள். இந்தக் கள்ளச் சாராய வியாபாரத்தை நிறுத்த முடியவில்லை என்பதற்காக, ஏழை தான் சம்பாதித்த பணத்தை வீட்டிலுள்ள தன் மனைவி மக்களுக்குக் கொண்டு போய்க் கொடுப்பதற்கு முன் வழிப்பறி செய்ய எங்கும் நாம் மதுபானக் கடைகளைத் திறக்க வேண்டுமா என்ன? இந்தக் கொள்கையைக் குற்றத் தடுப்பு விவகாரத்தில் கடைப்பிடிப்பதில்லையே? போலீஸும் நீதி மன்றங்களும் இருந்தும்கூட இன்னமும் நாட்டில் கொலைகளும் களவுகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அதனால் இந்தப் பாதுகாப்புப் படைகளான போலீஸையும் மாஜிஸ்டிரேட்டுகளையும் விட்டு விடவில்லையே! அப்படிச் செய்தால் அதை விட மடமை வேறு என்ன உண்டு?

ஆங்காங்கு கூடா நட்பும் கள்ளப் புணர்ச்சியும் இருப்பதால் விவாக முறையையே ஒதுக்கித் தள்ளி விட முடியுமா?

காமம், சூதாட்டம், போதை தரும் மது பானம் ஆகிய இம் மூன்றையும் தவிர்க்க வேண்டும். இவற்றைச் சர்க்காருக்கு வருமானம் தேடித் தரும் சாதனங்களாகப் பயன்படுத்தக்கூடாது. ஆட்டு மந்தையை ஆட்டிடையன் பாதுகாப்பதைப் போல் மக்களைக் காப்பதே அரசாங்கத்தின் புனிதமான பணி. அரசாங்கம் மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி, அந்தப் பலவீனத்தில் லாப நோக்கம் பார்த்து, கள்ளுக்கடைகளை உயர்ந்த தொகை கூறுபவர்களுக்கு ஏலம் விட்டுத் தனக்கு நிதி வசூல் செய்யத் தொடங்கினால் காக்க வந்த ஆட்டிடையன் விழுங்க வந்த ஓநாயாக மாறின கதையாகும். தமிழிலுள்ள நீதி நூல்கள் எல்லாம் காமம், சூதாட்டம், குடி ஆகிய மூன்று தீமைகளையும் ஒன்று சேர்த்துத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகின்றன. மற்ற எல்லா இந்திய மொழிகளிலும் அவ்வாறே கூறப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது.)

தொழிலாளர் உரிமையா? நாட்டு நலனா?

அர்த்தமற்ற காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தண்டிக்கப்படுவார்கள். தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் சமாதான ஒப்பந்தம் ஆன பிறகும் தொழிலாளர்கள் திருப்தி யடையாமல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வார்களானால் அவர்கள் சம்பளத்தைப் பறிமுதல் செய்தல் முதலான தண்டனைகளை விதிக்க நேரிடும்... இப்படிப் பல அம்சங்கள் கொண்ட மசோதா பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு வந்துள்ளது. இப்படியொரு மசோதாவைத் தயாரித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி வில்ஸனின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரதமராக இருந்து கொண்டு அவர் கொண்டு வந்துள்ள இந்த மசோதா தொழிற் சங்கங்களிடையே பரபரப்பையும், எதிர்ப்பையும் கிளப்பி விட்டிருக்கிறது. தொழிற்கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் கூட வோட் எடுக்கும் சமயத்தில் மசோதாவுக்கு எதிராக வோட் செய்யப் போவதாக மிரட்டி யிருக்கிறார்கள். மசோதா பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நிறைவேறத் தொழிற் கட்சி அங்கத்தினர்கள் முழு ஆதரவு தரவில்லையானால், தாம் பிரதம மந்திரி பதவியை ராஜினாமாச் செய்துவிடவும் தயாராக இருப்பதாக வில்ஸன் பதிலுக்கு மிரட்டியிருக்கிறார்.

இப்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தொழிற் கட்சி அங்கத்தினர்களிடையேயும், தொழிற்சங்கங்களிடையேயும் பெரிய எதிர்ப்பும் பரபரப்பும் கிளப்பியுள்ள மசோதா கூறுவதுதான் என்ன?

சமீப காலத்தில் பிரிட்டிஷ் தொழிற்கூடங்களில் எல்லாம் மிகவும் அற்பக் காரணங்களுக்காகத் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தங்கள் நடத்தி வருகின்றன.

ஒரு தொழிலாளி தலை முடியை நீளமாக வளர்த்துக் கொண்டு வந்தாராம். யந்திரங்களுக்கிடையில் வேலை செய்யும்போது தலை முடி சிக்கி உயிராபத்தான நிலையை உண்டாக்கலாம் என்று தலை முடியை வெட்டிக் கொண்டு வருமாறு தொழிற்கூட அதிகாரி கூறினாராம். உடனே அத்தனை தொழிலாளர்களும் வெளியேறி வேலைநிறுத்தம் தொடங்கி விட்டார்களாம்.

இப்படிக் காரணமில்லாத காரணங்களுக்காகத் திடீர் திடீர் என்று வேலை நிறுத்தங்கள் செய்யப்படுவதால் உற்பத்திப் பெருக்கம் தடைப்பட்டு பிரிட்டிஷ் பொருளாதார நிலை மிகச் சங்கடமான நிலைக்கு வந்திருக்கிறது.

பிரிட்டிஷ் பொருளாதார நிலை சீர்ப்படவேண்டுமென்றால் இந்த முறையற்ற வேலைநிறுத்தங்கள் நிறுத்தப்பட வேண்டும்

என்ற முடிவுக்கு வந்தார்! பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன். தொழிற்சங்க உரிமைகளைவிட, தொழிற் கட்சியின் பிராபல்யத்தைவிட நாட்டின் பொருளாதார நலனே முக்கியம் என்கிறார் வில்ஸன்.

தொழில்துறையில், பொருளாதார நிலையில் பெரிதும் முன்னேறியுள்ள பிரிட்டனிலேயே இப்படி ஒரு மசோதா அவசியம் என்றால், நம் நாட்டுக்கு இது எவ்வளவு அவசியம் என்று சொல்லத் தேவையில்லை. பொழுது விடிந்தால் அற்பக் காரியங்களுக்கெல்லாம் "கேரோ" செய்வதும், வேலை நிறுத்தம் செய்வதும் மலிந்து, பொருளாதார நிலை ஸ்தம்பித்து விட்டுள்ள பாரத நாட்டுக்கு வில்ஸனைப் போன்று தீரத்துடன் செயலாற்றினாலன்றி விமோசனமில்லை.

என்ன சேதி?

கல்கத்தாவுக்குக் கெட்ட பெயர்

ஒரு காலத்தில் தில்லியிலும் சென்னையிலும் பம்பாயிலும் கல்லூரி மாணவர்கள் சிலரும், காலிகளும், பொது இடங்களில் வரும் பெண்களிடம் தகாத முறையில் நடந்து கொள்கிறார்கள் என்ற செய்திகள் வந்த போது, கல்கத்தா நகரத்தை அறிந்தவர்கள் இத்தகைய செயல் கல்கத்தாவில் கனவிலும் கருத முடியாது என்று சொல்வார்கள். கல்கத்தாவாசிகள் பெண்களின் மானத்தைத் தங்களின் உயிரினும் மேலாகக் கருதுபவர்கள். எந்தப் பெண்ணிடமாவது எந்த இளைஞனாவது தவறாக நடந்து கொண்டான் என்று செய்தி வந்தாலோ பார்க்க நேர்ந்தாலோ அந்த இடத்திலேயே அப்படி நடந்து கொண்ட இளைஞனுக்குப் பாடம் கற்பித்து விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்கள் என்று சொல்வார்கள்.

அப்படிப்பட்ட நகரத்துக்கு எவ்வளவு கெட்ட பெயர் ஏப்ரல் 6ந் தேதி சம்பவித்து விட்டது!

ரவீந்திர பவனத்தில் கலா நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மண்டபம் கொள்ளாத ஏராளமான கூட்டம். திடீர் என்று மின்சாரம் நின்று இருள் சூழ்ந்தது. அப்போது காலிகள் சொல்லவும் எழுதவும் கூசும்படியான செயல்களில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்த ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தேசத்துக்கே அவமானகரமான இத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க மேற்கு வங்க கம்யூனிஸ்ட் அரசாங்கம் தைரியமாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பக்தவத்சலம் வாழ்க!

தில்லிக்கு அண்மையிலுள்ள பரீதாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு தொடங்கிய சிறிது நேரத்திலேயே பந்தல் தீப்பற்றிக் கொள்ள பெரும் விபத்து ஏற்பட்டது என்று கேட்டு வருத்தமடைகிறோம். காங்கிரஸ் பிரமுகர்கள் பலர் பல கஷ்டங்களுக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். நம் தமிழக காங்கிரஸ் தலைவரும் முன்னாள் முதன்மந்திரியுமான திரு பக்தவத்ஸலம் அவர்கள் இக்குழப்பத்தில் சிக்கிக் கீழே விழுந்து கை எலும்பை முறித்துக் கொண்டிருக்கிறார் என்று அறிந்து பெரிதும் வருத்தமடைகிறோம். அவரைப் போன்ற அனுபவமும் ஆற்றலும் மிக்க பிராயம் முதிர்ந்த தலைவர்கள் இத்தகைய மகாநாடுகளுக்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. நாட்டு நலனில் அக்கறையுள்ளவர்கள் திரு பக்தவத்ஸலம் அவர்களைத் தேடி வந்து அறிவுரையும் விளக்கமும் பெற்றுச் செல்ல வேண்டும். திரு பக்தவத்ஸலம் அவர்கள் விரைவில் பூரண குணமடைய எல்லாம்வல்ல இறைவனருள்வானாக!

ராஜாஜியின் கருத்துக்கள்

செக்கோஸ்லோவேகியாவின் சுதந்திர இயக்கம் கடைசியில் சோவியத் யூனியன் கொடுமையினால் நசுக்கப்பட்டு விட்டது. இது எதிர்பார்க்கப்பட்டதுதான். அதைவிட கம்யூனிஸ்ட் அரசுகளை எதிர்த்து நிற்கும் வல்லரசுகள், அணுகுண்டுகள் எங்கே உபயோகப்படுத்தப்பட்டு விடுமோ என்ற பயத்தில் சும்மா இருந்துவிட்ட பேடித்தன்மைதான் நிதர்சனமாகி யிருக்கிறது.

★★★

காந்தி நூற்றாண்டு விழா நடக்கும்போது அமெரிக்கப் பேரறிஞர் தோரோ (1817-62) வுக்கும் அவரது ''ஒத்துழையாமை'' என்னும் கட்டுரைக்கும் நமது பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும். சத்தியம், பயமின்மை அகிம்சை ஆகிய கொள்கைகள் ஒருபக்கமிருக்க, உறுதியான ஒத்துழையாமையைப் பற்றிய கருத்து காந்திஜிக்குத் தோரோவிடமிருந்தும் அவர் எழுதிய கட்டுரையிலிருந்தும் தான் கிடைத்தது. ஒரு கொள்கையின் அடிப்படையில் தோரோ வரி செலுத்த மறுத்தார். அதற்காகச் சிறைப்படுத்தப்பட்டார். காந்திஜியின் சத்தியாக்கிரகத்தை தோரோவைப் போல் முன்கூட்டி உணர்ந்தவர் யாரும் கிடையாது. தோரோவின் நடத்தையும் கட்டுரையும் சத்தியாக்கிரகம் நடத்த காந்தி மகானுக்குப் பூரண நம்பிக்கை யளித்தாற்போல் வேறெதுவும் தரவில்லை.

★★★

கடன் கொடுக்கும் நாடுகள், கடன் பட்ட நாடுகளின் ஜனத்தொகையில் கணிசமான பகுதியைக் குடும்பக் கட்டுப்பாடு முறைகளை அனுஷ்டித்துக் குறைக்கும்படி கேட்டுக் கொள்வது ஒரு முக்கியமான அம்சமாகும். நமக்கு உதவி தேவையா யிருக்கையில் உதவி செய்யும் நாடுகளின் யோசனைகளைப் புறக்கணிப்பதற்கில்லை. அத்துடன் கூட இதையும் நினைத்துப் பார்க்க வேண்டும்: சீனா, உலகத்திலேயே ஜனத்தொகை மிகுதியாக உள்ள நாடு என்ற ஸ்தானத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை. அணுகுண்டு ஆயுதங்கள் உலகை வளைத்துள்ள சங்கடமான நிலையில், சீனா தனது ஜனத்தொகையைத்தான் அரும் செல்வமாகக் கருதுகிறது. ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பதில் நமது ஜனத்தொகைச் செல்வத்தைக் குறைப்பது அறிவுடைய செயலாகாது. தைவானில் (சுதந்திர சீனா) உள்ள இளைஞர்களும் யுவதிகளும் கூட அந்த நாட்டின் ஜனத்தொகையைக் குறைப்பதில் நம்பிக்கை கொள்ளவில்லை என்று வெளிநாட்டுப் பத்திரிகைகளிலிருந்து தெரிகிறது.

★★★

ஆர்னால்ட் டோயன் பீ என்ற பிரபல சரித்திர ஆசிரியர் உணவு - ஜனத்தொகை சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஜனத்தொகையைக் குறைப்பதைவிட உணவைப் பெருக்குவதற்குப் பெரும் வாய்ப்பு இருக்கிறது என்று கூறியிருக்கிறார். உலகிலுள்ள மாமிச உணவுப் பழக்கமுள்ள மக்களுக்குத் தரக்கூடிய உணவை உற்பத்தி செய்ய எல்லையற்ற வாய்ப்பு நம்மைச் சூழ்ந்துள்ள கடலிலே யிருக்கிறது என்று கூறுகிறார். பாரத நாட்டிலும் மாமிச உணவு உட்கொள்வோர் பெருந்தொகையாக இருக்கின்றனர். நாமும் நம் நாட்டைச் சூழ்ந்துள்ள கடலைத் திறமையாகப் பயன்படுத்தி அதிக உணவை மகசூல் காண முயற்சிகள் எடுக்க வேண்டும். ஏதோ வலைவீசி கிடைத்த மீன் போதும் என்றிருக்கக்கூடாது. கடல், மக்கள் உண்ணக்கூடிய உணவு வகைகள் என்னவெல்லாம் தருமோ அவற்றையெல்லாம் நல்ல முறையில் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும். நிலத்தில் பயிர் பச்சைகளைச் சிரத்தையோடு சாகுபடி செய்வது போலவும் ஆடு மாடு எருமைகளைப் பண்ணை வைத்துப் போற்றிப் பாதுகாத்து வருவது போலவும் கடல்தரக்கூடிய உணவு வகைகளைத் தக்கபடி பேணிப் பயனடைய எல்லாவித முறைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.



ஆசாரியர் அருள்வாக்கு

பேரி, மிருதங்கம், வீணை, சங்கம் முதலியவற்றில் நம் தூண்டுதலால் சப்தம் கிளம்புகிறது. அதுவே நமக்கு ஆனந்தமளிக்கிறது. அவ்வாறாயின் தானாகவே எழும்பி எங்கும் பரந்த அநாஹத நாதத்தின் ஆனந்தத்தைச் சொல்லவும் வேண்டுமா? பொருள்களில் ஆசையை ஒழித்து, மனத்தை அசையா நிலையில் இருக்கச் செய்தால் இந்த அகண்ட நாதம் அழகான நீண்ட வேணுத்வனிபோல் கேட்கும். அந்த நாதத்திலுள்ள ஜோதியில் மனம் லயித்தால் மறு பிறப்பில்லை. மனத்தை லயப்படுத்த உதவும் பல சாதனங்களில் நாத அநுசந்தானமே அப்போதைக்கப்போது பரமானந்தம் தரும் சிரேஷ்டமான உபாயம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான

திருப்பெருந்துறை ஆளுடையார் கோயில்

திருப்பணித் துவக்க விழா



சைவசமயாச்சாரியர்கள் நால்வருள் சன்மார்க்கம் எனப்படும் ஞானநெறியைச் சிறப்பாக விளக்கியருளியவரும், சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் எட்டாந்திருமுறையாகிய திருவாசகம், திருக்கோவை என்பவற்றை அருளிச் செய்தவரும் ஆகிய ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானைச் சிவபெருமான் குருந்தமர நிழலில் ஞானாசிரியனாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளித் திருவாசகம் பெற்ற தலமும், ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளே திருவருள்வழி நின்று எக்கோயிலும் ஒப்பாதல் இல்லையாம்படி நிர்மாணித்த சிற்பக்கலைச் சிறப்பு வாய்ந்ததுமாகிய திருப்பெருந்துறை ஆளுடையார் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணி, திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 22வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரியசுவாமி அவர்கள், நாளது சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் 16ம் நாள் (28-4-1969) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு, மேற்படி திருக்கோயிலில் உள்ள தியாகராஜா மண்டபத்தில் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் ஏ. இராதாகிருட்டிணன் எம்.ஏ.பி.எல். அவர்கள் தலைமையில் தமிழக அறநிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா பி. ஏ. அவர்கள் துவங்கவும், தொடர்ந்து திருப்பணி செவ்வனே நடைபெறவும் திருவுள்ளம் பற்றியுள்ளார்கள்.

சர்வதேசக் குடும்பம்

ஆயிரத்தோரு 'இரவுகளில் கூறப்பட்ட அராபியக் கதைகளில் இப்படி ஒரு கதையைச் சேர்த்தால் பொருத்தமாகத்தான் இருக்கும்:

கல்தானுடைய மகனுக்குப் பிரமாதமான முறையில் கலியாணம் நடந்தேறியது. திருமண வைபவத்துக்கு வர முடியாத நண்பன் ஒருவன் நாலு நாட்கள் கழித்து வந்து அரச குமாரனை விசாரித்தான்: ''கல்யாணமெல்லாம் விமரிசையாக நடந்தேறியது பற்றித்தான் ஊரெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். மனைவி சௌக்கியமாக இருக்கிறாளா?''


இதைக் கேட்டுவிட்டு அரசகுமாரன் திருதிருவென்று விழித்தான். ''பிரபு! ஏன் மௌனம்?'' என்றான் நண்பன் கவலையுடன்.

''ஒன்றுமில்லை; நீ எந்த மனைவியைப் பற்றிக் கேட்கிறாய் என்று யோசிக்கிறேன்'' என்றான் ராஜகுமாரன்.



பம்பாயில் பிலிப்ஸ் தலைமைக் காரியாலயத்தில் ஓர் உயர் அதிகாரியைச் சந்தித்தபோது ''பிலிப்ஸ் ஸ்தாபனம் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்று நான் கேட்டேன். அதற்கு அவர் மேற் சொன்ன





ராஜகுமாரனைப் போலவே சற்று நேரம் விழித்து விட்டுப் பிறகு கதையையும் கூறினார்.


நான் விடவில்லை. ''பிலிப்ஸின் 'அந்தப்புரம் எவ்வளவு பெரிது என்பதைப் புரிந்து கொண்டேன். எல்லா மனைவிமார்களுடைய க்ஷேம லாபங்களைப் பற்றியுமே சொல்லுங்கள், நிதானமாக'' என்றேன்.

பிலிப்ஸ் கம்பெனிக்கு இன்று எழுபத்தெட்டு வயதாகிறது. நூறு நாடுகளில் இன்று இந்நிறுவனம் இயங்குகிறது. இவற்றில் நாற்பது நாடுகளில் தொழிலகங்கள் உள்ளன. இவற்றில் புதிதாகச் சுதந்திரம் பெற்று முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகள் இருபத்தைந்து என்பது குறிப்பிடத்தக்கது. உலகம் முழுவதும் வியாபித்துள்ள பிலிப்ஸ் குடும்பத்தில் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் அங்கத்தினர்கள்.

இந்த அளவுக்கு வளர்ச்சியுற்றுள்ள இந்த ஸ்தாபனம் ஆரம்பமானது ஒரு வீட்டின் கொல்லைப்புறத்தில்! இங்குதான் கெரார்ட் பிலிப்ஸ் பொறி இயல் துறையில் பட்டம் பெற்ற பிறகு பல்புகள் தயாரிப்பதில் பரிசோதனைகள் செய்யத் தொடங்கினார். 1879ல் தாமஸ் ஆல்வா எடிஸன் மின்சாரத்தினால் சூடேற்றப்பட்டு ஒளிரும் விளக்கைக் கண்டு பிடித்திருந்தார். இதைப் பெருமளவில் தயாரிப்பது எப்படி என்பதே கெரார்டின் பிரச்னை. ஒரு



தொழிலகத்தை ஆரம்பித்து அதில் நாளைக்கு ஆயிரம் விளக்குகளைத் தயாரிப்பதே கெரார்டின் அன்றைய லட்சியம். கெரார்டின் 'தகப்பனார் முதல் போட்டார். கெரார்ட் முதன் முதலாகத் தயாரித்த ஐம்பது பல்புகள் மெழுகு வர்த்திகள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையில் ஒளிபரப்



★ ரேடியோவின் தரம் பரிசோதிக்கப்படுகிறது.

★ டிரான்ஸிஸ்டரில் பொருத்தப்பட வேண்டிய ஒரு சிறு பகுதியைச் செய்து குவிக்கும் இயந்திரமும் அதை இயக்கும் அணங்கும்.


★ பல்புகளுக்கான கண்ணாடிக் குப்பிகள் விரிசலின்றி உள்ளனவா என்று சோதிக்கப்படுகின்றன.

★ பல்பில் பொருத்தப்பட்ட பிறகு மின்சாரத்தினால் சூடேறி ஒளிரும் டங்ஸ்டன் இழைகள் இவைதாம்.

★ குழல் விளக்குகளுக்காகக் கண்ணாடிக் குழல்கள் அடுக்கடுக்காகத் தயாராகின்றன.

★ ரேடியோ தொழிலகத்தின் மற்றொரு தோற்றம்.





பப் பொருத்தப்பட்டன. மெழுகுவர்த்தி சகாப்தம் முடிந்து மின்விளக்கு சகாப்தம் ஆரம்பமாகி விட்டது!

ஆனால் கெரார்டின் தொழிலகம் நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் அடைந்து விற்று விடலாம் என்ற நிலைக்குத் தகப்பனும் மகனும் வந்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் கெரார்டின் சகோதரன் அன்டன் இந்தக் கம்பெனியில் சேர்ந்தார். விளக்குகளைத் தயாரித்தால் மட்டும் போதாது; அவற்றை விற்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டவர் அவர். இந்தப் பொறுப்பை அன்டன் ஏற்றுக் கொண்ட பிறகு பிலிப்ஸ் கம்பெனி புனர் ஜென்மம் அடைந்து தழைத்து வளர்ந்தது.

ஒரு வீட்டின் கொல்லைப்புறத்தில் ஆரம்பித்த நிறுவனம் இன்று உலகமெல்லாம் பரவி யிருக்கிறது. வாழ்வோ சாவோ என்று நிலைதடுமாறிய ஸ்தாப



னத்தின் இன்றையச்சொத்துமதிப்பு இரண்டாயிரத்து நாற்பத்தைந்து கோடியே தொண்ணூறு லட்சம் ரூபாய்! ஒரு நாளைக்கு ஆயிரம் பல்புகள் தயாரிக்க வேண்டும் என்று லட்சியக் கனவு கண்டார் ஜெரார்ட். இன்று பம்பாய் அருகே கால்வாவில் உள்ள பிலிப்ஸ் தொழிற்சாலை மட்டுமே நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பல்புகளைச் செய்து குவிக்கிறது.

இது மட்டுமா? இந்த சர்வதேச ஸ்தாபனம் வகைவகையாகத் தயாரித்து அளிக்கும் பொருள்களின் பட்டியலைப் பார்த்தாலே தலையைச் சுற்றும். கிராமபோன் பெட்டி முதல் கம்ப்யூட்டர்கள் வரை, டேப் ரிகார்டர் முதல் ரேடார் வரை விசிறிகள் முதல் வைட்டமின்கள் வரை எத்தனையோ விதம் விதமான தயாரிப்புகள். மின் விளக்குகளில் மட்டும் பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப நாற்பதாயிரம் வெவ்வேறு விதமான விளக்குகளை பிலிப்ஸ் தயாரிக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

இப்படி ஆயிரக் கணக்கான பிலிப்ஸ் தயாரிப்புக்கள் இருக்க அடியேன் எல்லாவற்றையும் விட்டு விட்டு, ''நான் குழந்தையாக இருந்தபோதிலிருந்தே பிலிப்ஸ் மில்க் ஆஃப் மெக்னீஷியா புகட்டப்பட்டு வளர்ந்தவன் சார்'' என்று பெருமையுடன் சொல்லி வைத்தேன்!

அப்போது என் எதிரே இருந்த பிலிப்ஸ் உயர் அதிகாரிகளின் முகம் போன போக்கு சரியாக இல்லை! என் அசட்டுத்தனம் புரிந்தது. பிலிப்ஸ் மில்க் ஆஃப் மெக்னீஷியா தயாரிப்பது வேறு ஒரு பிலிப்ஸ் ஸ்தாபனம் என்பது விளங்கியது.

நான் அவசரம் அவசரமாகச் சமாதானம் சொல்ல முற்படு முன் ஓர் அதிகாரி ''பரவாயில்லை, இது எங்களுக்குப் பழகிப்போன காரியம்'' என்றார். பெரிய பெரிய அதிகாரிகள், மந்திரிகள், ஏன் பிரதம மந்திரிகள் கூட இத்தவற்றைச் செய்கிறார்கள் என்பதை அறிந்ததும் நான் செய்த தவற்றைப் பற்றி எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது!

பம்பாய்க்கு அருகே கால்வாவிலும் பூனாவுக்கு அருகே லோனியிலும் உள்ள பிலிப்ஸ் தொழிலகங்களைப் பார்க்கும் வாய்ப்பு எனக்கு அண்மையில் கிட்டியது.

கால்வாவில் மின்விளக்குகள் தயாரிக்கும் தொழிலகத்தில் அடியெடுத்து வைத்ததும் எனக்குத் தோன்றிய எண்ணம்: அடடா! அல்னுஷயரை அவிழ்த்து விடவேண்டிய இடமல்லவா இது!

எந்தப் பக்கம் திரும்பினாலும் கண்ணாடி, கண்ணாடி, கண்ணாடி!

என் கற்பனை அழிவுப் பாதையில் சென்று களித்துக் கொண்டிருக்கையில் அங்கே ஆக்க ரீதியில் பல்புகளுக்கான கண்ணாடிக் குப்பிகளும், ட்யூப் லைட்டுகளுக்கான கண்ணாடிக் குழல்களும் உருவாகிக் கொண்டிருந்தன.

ராட்சஸ மின் உலை ஒன்று கண்ணாடித் தயாரிப்புக்கான மூலப்பொருள்களை ஒரு பக்கம் விழுங்கிவிட்டு இன்னொரு பக்கத்தில் முடிவில்லாத கண்ணாடிக் குழலை வழங்கிக் கொண்டிருந்தது. சூட்டோடு சூடாக அதைச் சரியான நீளத்துக்குத் துண்டு போட்டது இன்னொரு யந்திரம்.


இப்படியே குழல் விளக்குக்கான பாகங்கள் பலவும் இயந்திரங்களால் விநாடிக்கு இரண்டு என்ற ரீதியில் செய்து தள்ளப்படுகின்றன. அவை ஒன்றன் பின் ஒன்றாக, வரிசையாக நகரும் 'பெல்டு'கள் மீது பவனி வருகின்றன. அருகில் நிற்கும் மனிதர்களும் இயந்திர கதியில் இயங்கி இணைக்க வேண்டிய பாகங்களைக் கச்சிதமாகப் பொருத்துகிறார்கள். சேர்ந்தாற்போல பத்துப் பதினைந்து குழல் விளக்குகளை எரிய விட்டுப் பரிசோதிக்கிறது ஒரு பெரிய இயந்திரம். சரியானபடி எரிகிறது என்பது நிச்சயமானதும் அந்த விளக்குகளில் பிலிப்ஸ் முத்திரையைப் பதிக்கிறது பக்கத்தில் உள்ள குட்டி இயந்திரம். அடுத்த விநாடி அந்த விளக்குகள் அணைகின்றன. அவை நீக்கப்பட்டதும் அடுத்து வேறு பத்துப் பதினைந்து விளக்குகள் பரிசோதனைக்கு வந்து பளிச்சென்று எரிகின்றன. இப்படியே 'பல்பு'களும் பரிசோதிக்கப்படுகின்றன. ஏதாவது விசேஷக் கொண்டாட்டங்களின்போது விளக்குகள் அணைந்து எரிந்து கண் சிமிட்டுவதைப் பார்த்து ரசித்திருக்கிறோம் நாம். பிலிப்ஸ் தொழிலகத்தில் வருஷம் 365 நாட்களும் விசேஷம்தான்; கொண்டாட்டம்தான்! ஆம், இங்குள்ள கண்ணாடி தயாரிக்கும் உலையின் இயக்கத்தை நிறுத்தி வைப்பதற்கில்லை என்பதால் தொழிலகம் இடைவிடாமல் செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது.

தொழிலகத்தில் சூரியப் பிரகாசத்துடன் ஜொலிக்கும் உலையின் அருகே நின்றாலும் கூட வெப்பம் தெரியவில்லை. தரையிலிருந்து ஜிலுஜிலுவென்ற காற்று கிளம்பிக் கால்களைச் சூழ்ந்து பிறகு தலைக்கும் எட்டுகிறது. விசாரித்தபோது தொழிலாளர்களின் சௌகரியத்தைக் கருதித் தொழிலகத்தை அமைக்கும்போதே அதன் அடிவாரத்தில் ஒரு பெரிய குளத்தைக் கட்டியிருக்கிறார்கள் என்றும் அந்தக் குளத்தின் ஓரங்களில் ராட்சஸ மின் விசிறிகளைப் பொருத்தியிருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது. மின் விசிறிகள் காற்றோட்டத்தை ஏற்படுத்த அந்தக் காற்று நீரினால் குளுமையாக்கப்பட்டு மேலே எழும்புகிறது. தொழிலகத்தின் தரையில் உள்ள துவாரங்கள் வழியே புகுந்து உயர்ந்து சூழ்நிலையைத் தண்ணென்று வைத்திருக்கிறது.

கால்வா தொழிலகத்தில் அடுத்தாற்போல் மிக சுவாரசியமான பகுதி பல்புகளுக்கான டங்ஸ்டன் இழைகள் தயாரிக்கப்படும் இடம்தான். அரை அங்குல விட்டமுள்ள டங்ஸ்டன் கம்பிகளை ஒரு மயிர் இழையினும் மெல்லியதாகப் படிப்படியாக உருமாற்ற இயந்திரங்கள் உள்ளன. மெல்லிய இழையாக இழுக்கப்படும்போது அதன் உடையும் தன்மை அதிகரித்து விடுவதால் மாற்றி மாற்றி அதை உஷ்ணப்படுத்தியும் நீட்டியும் இளக்கச் செய்கிறார்கள். வெறும் பேச்சுக்கு அல்லாமல் உண்மையிலேயே துரும்பாக, தூசாக இளைக்கிறது டங்ஸ்டன் கம்பி.

'காயில்ட் காயில்' என்ற முறையில் டங்ஸ்டன் இழை 'மாலிப்டினம்' கம்பியில் சுற்றப்


திடீரென்று உங்களை
புதுமைப் பெண்ணாகச்
செய்யும் கோயா





படுவதும் பிறகு மாலிப்டினம் ரசாயனக் கலவையில் கரைந்து போக டங்ஸ்டன் இழை மட்டும் சுருண்ட நிலையில் காட்சி யளிப்பதும் 'மைக்ரொஸ்கோப்பு' வழியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை.

இந்த டங்ஸ்டன் இழைகள்தாம் பல்பின் மத்தியில் அமைந்திருந்து மின்சாரம் பாய்வதால் சூடேற்றப்பட்டு ஒளி சிந்துகின்றன.

பூனாவிலிருந்து பதினொரு மைல் தொலைவில் — ராஜ்கபூரின் விவசாயப் பண்ணைக்குப் பக்கத்தில் - எழும்பி யிருக்கிறது பிலிப்ஸ் ஸ்தாபனத்தாரின் ரேடியோ தயாரிப்புத் தொழிலகம்.

அடுத்த தடவை உங்கள் டிரான்ஸிஸ்டர் ரேடியோவில் பாட்டரி மாற்றும்போது ரேடியோவில் எத்தனை எத்தனை தனித்தனிப் பாகங்கள் உள்ளன என்பதைச் சற்றுக் கவனியுங்கள். கால் அங்குல அளவே உள்ள பாகங்கள் முதல் அரை அடி அகலமுள்ள பாகங்கள் வரை பலவித அளவுகளிலும் வடிவத்திலும் நூற்றுக் கணக்கான உறுப்புக்கள் உள்ளதைக் காணலாம். இந்த உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் உருவாக்கத் தனித் தனியாக இயந்திரங்கள் இருக்கின்றன, லோனி தொழிற்சாலையில்.

இந்தப் பல்வேறு பாகங்களையும் இணைத்து முழு ரேடியோ உருவம் தரும் பணியில் நூற்றுக்கணக்கான நபர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். ஒவ்வொரு நபரும் பொருத்துவது ஒரே பாகத்தைத்தான். அடுத்து அரைகுறை ரேடியோ பக்கத்தில் உள்ளவரிடம் 'கன்வேயர் பெல்ட்' மீதாகப் பயணப்பட அவர் மேலும் ஒரு பாகத்தை அதில் பொருத்தி அனுப்புகிறார். இப்படியே ரேடியோ ஒவ்வொரு பாகமாக ஏற்றுக் கொண்டு தொடர்ந்து பயணம் செய்து முடிவுக் கட்டத்தில் முழுமை பெற்றுத் திகழ்கிறது.

நமது திட்டக் கமிஷன் போட்ட திட்டங்கள் பலப்பல தொடக்கத்திலேயே பிசுபிசுத்துப் போகின்றன. வேறு சில அரைகுறையாகவே நிறைவேறுகின்றன. ஆனால் ரேடியோ தயாரிப்பில் மட்டும் நம் நாடு திட்டக் கமிஷனின் இலக்கை எட்டிப் பிடித்து விட்டது! லோனியில் உள்ள பிலிப்ஸ் தொழிலகத்தில் மட்டுமே அரை நிமிஷத்துக்கு ஒரு ரேடியோ தயாராகிறது என்றால் லட்சியத்தை எட்டிப் பிடிக்கக் கேட்பானேன்!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ரகசியத்தையும் இங்கே அம்பலமாக்கி விடுகிறேன். ரேடியோ வாங்குவதற்கு முன்னால் இந்த ரேடியோ நல்லதா அந்த ரேடியோ நல்லதா என்ற வாதப் பிரதிவாதங்களில் பலமாக ஈடுபட்டுக் கடைசியில் குறிப்பிட்ட ஒரு ரேடியோவைத் தேர்ந்தெடுத்து வாங்கி வருகிறார் குடும்பத் தலைவர். அவர் வாங்கி வந்த ரேடியோ பிலிப்ஸ் ரேடியோ அல்ல என்றாலும் அநேகமாக அதில் பெரும்பாலான பாகங்கள் பிலிப்ஸ் கம்பெனியாரால் லோனி தொழிலகத்தில் தயாரிக்கப்பட்டதாக இருக்கும்! அதே போலத்தான் பல்புகள், குழல் விளக்குகள் விஷயத்திலும்! ஏனெனில் பிலிப்ஸ் ஸ்தாபனம் ரேடியோக்களையும் விளக்குகளையும் தயாரிப்பதுடன் இதர தயாரிப்பாளர்களுக்குத் தனித் தனிப் பாகங்களை விற்கவும் செய்கிறது!

மேனாட்டில் புதிய மாடலில் ஒரு பிலிப்ஸ் ரேடியோ தயாரானதும் அதை அப்படியே காப்பியடித்து இங்கே லோனி தொழிலகத்தில் அந்த மாடல் ரேடியோவை உற்பத்தி செய்யத் தொடங்கி விடுவதில்லை. மேனாட்டிலிருந்து வந்த ரேடியோவை இங்குள்ள ஆராய்ச்சி நிலையம் அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துச் சோதனைகள் நிகழ்த்துகிறது. உஷ்ணப் பிரதேசத்துக்கு ஏற்ப அதில் என்ன என்ன மாறுதல்கள் தேவை என்று கண்டுபிடிக்கிறது. கூடவே அயல் நாட்டுப் பாகங்களை எந்த அளவுக்குத் தவிர்க்கலாம் என்றும் பார்க்கிறது. அந்த மாற்றங்களை உள்ளடக்கிய ரேடியோக்கள்தாம் இங்கு தயாராகும். கெரார்ட் பிலிப்ஸ் தம் வீட்டின் கொல்லைப் புறத்தில் தொடங்கிய ஆராய்ச்சி இன்றளவும் பிலிப்ஸ் ஸ்தாபனத்தில் நீடிப்பதால் தான் ரேடியோ தயாரிப்புத் துறையில் மட்டும் நாலு கோடி ரூபாய் வரை ஐந்தாறு ஆண்டுகளில் பாரதத்துக்கு அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த முடிந்திருக்கிறது. இதே போல் மின்விளக்குகள் தயாரிப்புத் தொழிலகமும் ஆண்டொன்றுக்குத் தொண்ணூறு லட்சம் ரூபாய் அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தித் தருகிறது.

இந்தியாவில் பிலிப்ஸ் ஸ்தாபனம் தொடங்கப்பட்டது 1930ம் ஆண்டில். 75 நபர்கள் வேலை பார்த்த இடத்தில் இன்று 4,700 பேர்கள் உள்ளனர். விற்பனை ஆறு லட்சத்திலிருந்து பதின்மூன்றரைக் கோடியாக உயர்ந்திருக்கிறது. 1957ல் பிலிப்ஸ் கம்பெனியில் இந்தியப் பங்குதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சுமார் பதினாலாயிரம் இந்தியர்கள் இன்று பங்குதாரர்களாக விளங்குகின்றனர்.

ஹாலந்தில் தோன்றிய நிறுவனம் என்றாலும் விற்பனையில் 90 சத விகிதம் அந்நாட்டுக்கு வெளியேதான். சொத்தில் 65 சதவீதம் ஏனைய நாடுகளில்தான். தொழிலாளர்களில் 66 சதவீதம் பிற நாட்டவர்தான். ஆகவே இந்த ஸ்தாபனத்தை ஒரு சர்வ தேசக் குடும்பம் என்று வர்ணிப்பது பொருத்தமே அல்லவா?

கண்ணைப் பறிக்கும் அளவுக்குச் சுத்தமாக விளங்கும் பிலிப்ஸ் ரேடியோ தொழிலகத்தை விட்டுப் புறப்படு முன் கடைசியாக ஒரு கேள்வி கேட்டேன்.

''உற்பத்தியை அதிகரித்தால் விசேஷ 'போனஸ்' உண்டு என்று கூறித் தொழிலாளர்களை நீங்கள் ஊக்குவதுண்டா?''

இதற்குக் கிடைத்த பதில்:

''போனஸ் என்ற ஆசை காட்டி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில் தொழிலாளர்கள் அவசரப்படும்போது உற்பத்தியாகும் பொருளின் தரம் குறைந்து போகலாம் என்ற பயம் எங்களுக்கு உண்டு.''

—கி. ராஜேந்திரன்

சபாஷ், சாலியமங்கலம்!

''செய்தாரில் பெரியர் சிறைதயாதவர்'' என்பது மிக அருமையானதொரு முதுமொழி.

பாரத நாட்டிலே எத்தனையோ அருங் கலைகள். அதன் சிறப்பை மேல்நாட்டினர் வந்து சொன்ன பிறகுதான் நாம் உணரத் தலைப்பட்டோம்.

பிரிட்டிஷ் மியூஸியத்திலும், பாரீஸ் மியூஸியத்திலும் நமது அருமையான சிற்பச் செல்வங்களைக் காட்சிப் பொருளாக வைக்க அனுப்பிய பிறகுதான் அவற்றின் பெருமையை நாம் அறிந்தோம்.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, சாலியமங்கலவாசிகள் மிகவும் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள். அவர்கள் பிறர் எடுத்துச் சொல்லாமல் தாங்களாகவே ஓர் அருங் கலையைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்!

தஞ்சாவூரிலிருந்து கிழக்கே பத்து மைல் போனால் சாலியமங்கலம் என்ற கிராமத்தை அடைவீர்கள். அங்கே ஸ்ரீதேவி பூதேவி சமேதராக ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் கொண்டிருக்கிறார். அந்தப் பெருமாளுக்கு ஆண்டுதோறும் ஸ்ரீ நரசிம்ம ஜயந்தியின் போது விசேஷமான முறையில் பாகவத மேளா நாடகங்களை நடத்திக் கொண்டாடி வருகிறார்கள்.

தஞ்சையை ஆண்ட அச்சுத விஜய ராகவேந்திர நாயக்கர் மன்னன் காலத்தில் பரதம் பஞ்சநத பாகவதர் என்பவர் ஸ்ரீ பிரஹலாதா, விப்ர நாராயணு, ருக்மாங்கதா, ருக்மிணி கல்யாணம் ஆகிய நாடகங்களைத் தெலுங்கில் இயற்றி மன்னன் சபையில் அரங்கேற்றியிருக்கிறார். மன்னன் மகிழ்ந்து அவருக்கு மான்யங்கள் அளித்து நாடகங்களை நடத்தி வர ஏற்பாடு செய்தான். அவருடைய சந்ததியினர் அன்றிலிருந்து இன்று வரையில் தொடர்ந்து நடனமும், சங்கீதமும் கலந்து இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பாகவத மேளா நாடகங்களை நடத்தி வருகின்றனர்!

இன்றைய தலைமுறையினர், தேசத்தின் பல பகுதிகளில் சிதறியிருந்தாலும், நரசிம்ம ஜெயந்தி சமயத்துக்குத் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்று தங்கள் பெரியோர்கள் நடத்தி வந்த பாகவதமேளா நாடகங்களை நடத்தி அந்தக் கலையைக் காப்பாற்றி வருகிறார்கள். தென் இந்திய ரயில்வேயில் பணி புரியும் ஸ்ரீ ராகவன் ஹிரண்யகசிபு வேஷமும், கல்பாக்கம் அணுமின் உற்பத்தித் திட்டத்தில் பணிபுரியும் சீனிவாசன் லீலாவதி வேஷமும் தரித்து நடத்தி வருகிறார்கள்.

உத்தியோக நிமித்தம் எங்கெங்கோ சென்று வாழ்ந்தாலும் கலையைக் காக்க ஆண்டுக்கொரு முறையாவது இவர்களை ஒன்றுகூட வைப்பதால் சாலியமங்கலத்துக்கு ஒரு சபாஷ் போடலாம்தானே!

சாலியமங்கலத்தில் வசித்து வரும் ஸ்ரீ பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யர் இங்கு நடைபெறும் நாடகங்கள் எல்லாவற்றிலும் சம்பிரதாயமான தேர்ச்சி பெற்றவர்.


நரசிம்ம ஜயந்தியன்றும் மறுநாளும் பிரஹலாதா, ருக்மிணி கல்யாணம் இரு நாடகங்கள் மட்டும் நடத்தி வருகிறார்கள். நரசிம்ம ஜயந்தியன்று காலை பெருமாளுக்கு வஸந்தமாலை சாத்துகிறார்கள். இரவில் பெருமாளைக் கருட வாகனத்தில் புறப்பாடு செய்து அக்ரஹாரத்தில் போடப்பட்டிருக்கும் பெரிய பந்தலில் எழுந்தருளப் பண்ணுகிறார்கள். அக்ரஹாரத்தில் பரம்பரையாக ஒரு பாகவதர் குடும்பத்தில் ஸ்ரீ ராம லட்சுமண சீதை விக்கிரகங்களும் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம சுவாமியின் முகமும் பூஜையில் வைக்கப்பட்டிருக்கும். அந்த நரஸிம்ம முகத்தை ஜயந்தியன்று காலையில் புதுப்பித்து சாயந்திரம் ஏழு மணியளவில் பிராண பிரதிஷ்டை, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, கண் திறக்கும் தீபாராதனை முதலியன செய்வார்கள். இரவு பத்து மணிக்குப் பிரஹலாத நாடகம் ஆரம்பமாகும். விடியற்காலை ஐந்து மணிக்கு முடியும்!

சாலியமங்கல நாடகங்களுள் விசேஷமான நாடகம் விப்ரநாராயணு. தஞ்சை ஜில்லாவில், மெலட்டூர் வேங்கடராம சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட நாடகங்கள் மெலட்டூர், சூலமங்கலம், தேப்பெருமாள் நல்லூர், ஊத்துக்காடு முதலிய ஊர்களில் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. விப்ரநாராயணு சாலியமங்கலத்தில் மட்டும்தான் நடைபெற்று வருகிறது.

நாட்டில் வேகமாகப் பரவி வரும் டப்பாப் பாட்டு வேகத்தில் இது போன்ற சம்பிரதாயமான பழங் கலைகள் பல மறைந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, ஆங்காங்கே தப்பித் தவறி மிஞ்சியிருக்கும் கலைஞர்களைத் தேடிப் பிடித்து அந்தச் சம்பிரதாயங்களை ஒலிப்பதிவுகளாகவும், திரைப்படங்களாகவும் இப்போதே எடுத்து வைத்துக் கொள்வது எதிர்காலச் சந்ததியாருக்கு அரசினர் புரிய வேண்டிய சேவை; கடமையும்கூட. —எஸ். வி. எஸ்.

இரண்யகசிபு — லீலாவதி





வீட்டிலே பூஜை

அண்ணல் பெயர் பாடும் 'அப்பா'

பரமனையே அனுதினமும் தாமும் பாடிப் பிறரையும் பாடச் செய்து பரவசமுறச் செய்த பாகவதோத்தமர் பலர் வாழ்ந்த பொன்னாடு பாரதம். 'வாழ்ந்த' என்று மட்டுமின்றி 'வாழ்கிற' பொன்னாடு என்றும் இந்தக் கொடுங் கலி காலத்தில் சொல்வதற்கு நமக்குப் பாக்கியம் அளித்திருக்கிறார் ஒரு பாகவத சிகாமணி. புரந்தரதாஸரும், ராமதாஸரும், தியாகராஜ ஸ்வாமிகளும் எப்படி வீதி வீதியாக ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்தபடி, மற்றவர்களையும் அந்தக் கீர்த்தன தீர்த்தத்தில் நீராட்டியபடி சஞ்சரித்திருப்பார்கள் என்பதை நம் கண்ணுக்கு மெய்யாகச் செய்து காட்டவே வாழ்ந்து வருபவர் புதுக்கோட்டை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதரவர்கள்.

இவ்வளவு பெரிய பெயரைச் சொல்லி அவரை அழைக்க வேண்டியதில்லை. **அப்பா** என்று சொன்னாலே போதும்; அடியார் கூட்டம் இவர்தான் என்பதைப் புரிந்துகொண்டு விடும். ஹரிநாமத்தில் சிறிதாவது நெஞ்சு நனையத் தெரிந்தவர்களுக்கெல்லாம் தாய்மை நிறைந்த ஒரு தந்தையாக விளங்கி வருபவர் **அப்பா**.

அப்பாவுக்கு இன்று வயது 77. அவர் கடைப்பிடிக்கும் பஜனை சம்பிரதாயத்துக்கோ நூறு நூறு பிராயம். அந்தப் பஜனையின் இலட்சியமான பரமனுக்கோ வயது வகுப்பதே இயலாத காரியம்.

ஆயினும், இந்தக் கிழ அப்பாவிடம் "குழந்தையின் எளிமையே திகழ்கிறது. இவரது பஜனையில் நாமும் குழந்தைகளாகி மாதவன் நாமத்தை வாய்விட்டு அழைக்கிறோம். நூறு நூறாண்டுகளாக வந்த பஜனை மரபு அன்றன்றும் பிறக்கும் நூதன இன்பமாகிறது. பஜனையின் குறிக்கோளான பகவானும் பச்சைக் குழந்தையாக, பாலகோபாலனாக வந்து திவ்விய நாமங்களைக் கேட்டு அருள் புரிகிறான். கோபாலகிருஷ்ணனின் சாந்நித்தியத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து விடுவதே கோபாலகிருஷ்ண பாகவதரது பஜனையின் பெருமை. வரிசை வரிசையாகக் கோத்த ஜாலராக்களைச் சப்தித்தபடி, கால்களில் கட்டிய சலங்கைகள் குலுங்க அப்பா இரவு தொடங்கி விடிய விடிய திவ்விய நாம பஜனை செய்கையில்,

பக்தர்கள் மனது தித்திக்கத்
தித்திக்க
பாதச் சிலம்பொலி சத்திக்கச்
சத்திக்க

பாலகோபாலனும் நடனம் புரிவான்.

இந்த அற்புதம் எவ்விதப் பகட்டும் படாடோபமும் இல்லாமல் ஐம்பதாண்டுகளாக நடந்து வருகிறது. சத்தியத்துக்குப் பகட்டும் படாடோபமும் வேண்டியதில்லை. சூரிய வெளிச்சத்தைக் காண விளக்கின் உதவி எதற்கு?

குழந்தையின் எளிமை





வீதியிலே பஜனை

வாஸ்தவம்தான். ஆனாலும் கதவுகளை யெல்லாம் மூடிக் கொண்டு விட்டால் சூரிய வெளிச்சமும் உள்ளே புகாதல்லவா? எனவே, கதவுகளைத் தட்டித் திறக்கச் செய்கிற முயற்சி அவசியம்தானே? இப்படிப்பட்ட முயற்சியாகவே இவ்வருடம் ஸ்ரீ அப்பா அவர்களின் பஜனை தொடங்கிய பொன் விழா விசேஷ வைபவமாகக் கொண்டாடப் படுகிறது. புதுக்கோட்டையில் புதிதாக நிருமாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம கலியாண மண்டபத்தில், ஸ்ரீ நரசிம்ம ஜயந்தியை ஒட்டி ஏப்ரில் 30லிருந்து மே 8ந் தேதி வரை பொன் விழா நடக்கிறது.

ஸ்ரீ நரசிம்ம ஜயந்தியின்போது அப்பா ஆண்டுதோறும் எங்கிருந்தாலும் புதுக் கோட்டைக்கு வந்து பஜனையும் பூஜையும் புரிவது வழக்கம். அப்பாவின் முகப் போக்கையும் தாடியையும் பார்த்தாலே அவர் நரசிம்மத்துடன் ஸாரூப்பியம் அடைந் திருப்பது தெரியும். நரசிம்மம் என்றால் நடுங்க வேண்டாம். ஹிரண்ய கசிபுவைக் கோரமாக ஹதம் செய்த அந்தப் பெருமான் பாலன் பிரஹலாதனின் மெய்யன்பில் கசிந்துருகிய கருணை வள்ளல் என்பதை மறக்க வேண்டாம்! அப்பாவிடம் பிரஹலாத வரதனின் கனிவைத்தான் காண முடியுமே தவிர ஹிரண்யசம்ஹாரியின் முனிவை அல்ல!

பெயரிலும் புகழிலும் விளம்பரத்திலும் மனத்தை அலைபாய விடாமல், 'தாமுண்டு, தமது சங்கீர்த்தன தர்மமுண்டு' என்று வாழ்ந்து வரும் ஸ்ரீ பாகவதரவர்கள் நரஸிம்ம கலியாண மண்டபம் நிர்மாணித் துப் பெரிதாகத் திறப்பு விழா செய்வதைக் கூட விரும்பவில்லை.

''இத்தனை வருஷங்கள் நடந்தாற்போலவே இனியும் நடந்து விட்டுப் போகட்டுமே! பொன்விழாவுக்கு விசேஷ நிகழ்ச்சி வைக்க வேண்டுமானால் பந்தல் போட்டுக் கொண் டால் போச்சு! இதற்காக என் பெயரைப் போட்டு, நன்கொடை கேட்டுக் கட்டடம் கட்டுவானேன்?'' என்றுதான் சொன்னார், அடக்கமும் நியாயமான லஜ்ஜையும் படைத்த அப்பா. ஆயினும் அவரது அடியார்கள், இந்த நவீன உலகாயத சகாப்தத்தில் ஐம்பதாண்டுகளாக ஒருவர் நிர்மல மனத் துடன் பஜனை புரிந்திருப்பது ஒரு பெரிய சாதனை என்றும், சாதகருக்கு இது பெரி தாகப் படாவிடினும், ஏனையோருக்கு இது பெரிய விஷயமாதலால், உலகின் பார்வையை இந்த ஸத் விஷயத்தில் திருப்புவதற்கு ஒரு ஸ்தூலமான பணி அவசியம் என்றும் வலியுறுத்தியே மண்டபம் எடுப்பித்திருக் கின்றனர்.

உண்மை! எத்தனையோ ஸ்தாபனங் களுக்குப் பொன்விழா கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் இது அவ்விழாக்கள் போன்றதல்ல. பகவந்நாம சக்தி ஒன்று

லேயே, நிஷ்களங்கமான சங்கீத சங்கீர்த்தன சக்தியாலேயே, மாசற்ற ஒரு மனத்தின் சக்தியாலேயே ஐம்பதாண்டுகளாக நடை பெற்றுவரும் நரசிம்ம ஜயந்தி பஜனோத்ஸவத்துக்கு ஒரு ஸ்தூலமான நினைவாலயம் வேண்டியதே. அதில் பகவன் நாமங்களே கற்கள். இசையே அவற்றை இணைக்கும் சாந்து. அன்பு இக்கட்டடத்துக்கு அஸ்திவாரம்.

★

1892ம் வருஷம், ஆனந்தமான நந்தன வருஷம், புரட்டாசி மாதம் ஜனித்தவர் புதுக்கோட்டை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதர். ஆனால் அப்போது அவருக்குப் புதுக்கோட்டை சம்பந்தம் கிடையாது. தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கிக்கு அருகில் உள்ள வல்லவாரியில் பிறந்தவர். தியாகையரைப் போலவே இவரும் தமிழகத்தில் குடியேறிய ஆந்திர அந்தண குலத்தவர். முலகநாடு பிரிவினர். வேங்கட கோபாலகிருஷ்ணன் என்பது இயற்பெயர்.

பால பருவத்திலேயே தந்தையை இழந்தார். ஸ்வர்ணக் காட்டில் தமக்கை புருஷரின் ஆதீனத்தில் இருந்தார். பிறகு புதுக்கோட்டையில் தாய்மாமன் இல்லத்தில் வசித்து நான்கு வகுப்புக்கள் படித்தார். தெய்வ சங்கற்பத்தில் அதோடு படிப்பு முடிந்தது. மீண்டும் ஸ்வர்ணக்காடு திரும்பி, சங்கீதமும் சம்ஸ்கிருதமும் கற்றார். இசையில் இதயமார்ந்த ஈடுபாடு இருந்ததால் மனமனமென்று பிரகாசிக்கலானார். யௌவனப் பருவத்திலேயே ஸ்வர்ணக் காட்டில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மன், ராமன் சந்நிதிகளில் நடைபெற்று வந்த பஜனைகளில் பாகவத கைங்கரியம் புரியலானார். அவருக்கு என்றே விதிக்கப்பட்ட பிரபஞ்சத்தை வந்தடைந்து விட்டார்! பக்தியுடனும், பண்புடனும், அடக்கத்துடனும் பஜனை பத்ததியைக் கற்று அதில் ஊறித் திளைத்தார். தமக்கை புருஷரின் ஆதரவுடன் ஐம்பதாண்டுகளுக்கு முன் தமது குலதெய்வமான ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி ஜயந்தியின்போது பஜனோத்ஸவம் தொடங்கினார்.

★

அவரது உண்மையான பக்தியும், தெளிவான இசையும், எளிய உள்ளமும் உலகின் மதிப்பை அவருக்குப் பெற்றுத் தந்தன. நாடெங்கிலுமிருந்து அவருக்கு அழைப்புக்கள் வந்தன. பல இடங்களுக்குச் சென்று பஜனை புரிந்தார். ஹரிகதைகளும் செய்தார்.

அப்பா பஜனை செய்தால் லௌகிகமாகவும் பல நலன்கள் விளைவதை மக்கள் உணர்ந்து அவரைப் போற்றினர்.

உலகத்தின் அழைப்பை ஏற்பதற்கு வசதி தருமுகமாகவே போலும், அவரது இருபத்தொன்பதாம் வயதிலேயே தரும பத்தினி மறைந்து விட்டாள். இரு புதல்வர்களையும் புதுக்கோட்டையில் சகோதரியுடன் இருக்கச் செய்துவிட்டு, அப்பா லோகசஞ்சாரியாக ஹரிநாமத்தை எங்கும் பரப்பி வரலானார். நரசிம்ம ஜயந்தி உத்ஸவத்தை மட்டும் 1933 லிருந்து புதுக்கோட்டையிலேயே நடத்தி வருகிறார். இதனால்தான் அவர், ''புதுக்கோட்டை பாகவதர்'' என வழங்கப்படுகிறார்.

★

புதுக்கோட்டை, பகவந்நாம சாம்ராஜ்யத்துக்கே ஒரு புதிய கோட்டையாக எழும்ப இந்தப் பொன்விழா உதவி புரியட்டும் என ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

சூதுவாது அறியாமல், பகவந்நாமத்தால் நாவையும் மனத்தையும் தேனுக்கிக் கொண்டிருக்கும் அப்பா தாத்தாவாகி, கொள்ளுத் தாத்தாவாகி, எள்ளுத் தாத்தாவாகிப் பலப் பல ஆண்டுகள் தமது திவ்விய கைங்கரியத்தைத் தொடர வேண்டும் என வேணுகான விநோதனான ஸ்ரீ ராதாகிருஷ்ணனைப் பிரார்த்திக்கிறோம்.

அந்த மகானிடம் நமக்குள்ள மதிப்புக்கு அடையாளமாக இவ்விதழ் மேலட்டையில் அந்தப் பரிசுத்த ஆன்மாவின் திருவுருவத்தைப் பிரசுரித்து வணங்குகிறோம்.



ஜப்பானிய உடையில் அண்ணா!

(41ம் பக்கம் பார்க்க)



ஹேமர்மாஸ்டர்
வலுவாக இருப்பதன்
இரகசியம் அதன்
ரீ:பில்
ரீ:பில் நன்றாக இருந்தால்தான் அது பிளாஸ்க். ரீ:பில் முற்றிலுமே ஒற்றைப் பகுதியாக இருக்கும் ஒப்பற்ற சிறப்புடைய ஹேமர்மாஸ்டர் மேலானது. திடம், உறுதி முழுநிறைவாக வேக்வம் அமைப்பு யாவும் பொருந்தியதால், பானங்களை மணிக்கணக்கில் சுடச்சுடவோ குளுமையாகவோ வைத்திருக்கிறது. விதவிதமான அளவுகளோடு, பலதரப்பட்ட ரகங்களிலே தேர்ந்தெடுக்கக் கிடைக்கிறது ஹேமர்மாஸ்டர்.
நல்ல பிளாஸ்க் எனக் கேளுங்கள்—கிடைக்கும்
ஹேமர்மாஸ்டர்



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பூர்வ கதை

சோழர் பழங்குடியில் பிறந்த நாரீமணிகளில் மிகவும் புகழ்பெற்ற இளவரசி குந்தவை பெரிதும் மனக் கலக்கம் அடைந்திருந்தாள். அவளுடைய இளைய சகோதரன் அருள்மொழிவர்மன் இலங்கையிலும் மூத்த சகோதரன் ஆதித்த கரிகாலன் காஞ்சியிலும் இருந்தார்கள். அவளுடைய தந்தை சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் நோய்ப்பட்டிருந்தார். இந்நிலைமையில் இந்த ராஜ குடும்பத்துக்கு விரோதமாக நடந்த ஒரு பெரிய சதியைப் பற்றிக் குந்தவை தெரிந்து கொண்டாள். சுந்தரசோழர் காலமானால் உடனே அவருடைய சிறிய தகப்பனாரின் மகன் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று பழுவேட்டரையர்கள் முதலான சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரகசியமாக முடிவு கட்டியிருந்தார்கள். இதை அறிந்து வந்து சொன்ன வந்தியத்தேவனை இலங்கை சென்று அருள்மொழிவர்மனைக் கூட்டி வருவதற்காகக் குந்தவை அனுப்பினாள்.

பின்னர் அவள் தஞ்சை சென்றாள். அங்கே தன் தந்தை உடல் நோய்ப்பட்டிருந்ததல்லாமல் பெரியதொரு மன நோயினால் பிடிக்கப்பட்டிருப்பதை அறிந்தாள். தந்தையின் இளம் பிராயத்தில் ஒரு வலைஞர் குல ஊமைப் பெண்ணை அவர் காதலித்ததாகவும், அப்பெண் கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சியிலிருந்து கடலில் விழுந்து இறந்ததாகவும், அவளுடைய ஆவி வடிவம் இப்போது நள்ளிரவில் வந்து அவரைத் துன்புறுத்தி வந்ததாகவும் தெரிந்து கொண்டாள். இதன் காரணமாக மனம் நலிந்திருந்த சுந்தரசோழர் தமக்குப் பிறகு இராஜ்யத்தை மதுராந்தகனுக்கே கொடுத்து விட விரும்பினார். மதுராந்தகன் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஆளத் தகுதியற்றவன் என்று குந்தவை கருதினாள். சோழ சாம்ராஜ்யத்தை அந்தக் கதிக்கு உள்ளாகாமல் காப்பாற்றும் பொறுப்பு இப்போது தன் தலையில் சார்ந்திருப்பதாகவும் எண்ணினாள்.

சோழ சாம்ராஜ்யத்தின் தனாதிகாரியான பெரிய பழுவேட்டரையர் தம் முதிய பிராயத்தில் நந்தினி என்னும் பெண்ணை மணந்திருந்தார். நந்தினியின் வாழ்க்கையில் மர்மங்கள் நிறைந்திருந்தன. இப்போதும் அவள் மந்திரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்தாள். சுந்தரசோழரின் மன நோய்க்கு நந்தினி ஏதோ ஒரு வகையில் காரணமாயிருக்கலாம் என்று குந்தவை சந்தேகித்தாள். அதைப் பற்றித் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன் நந்தினியின் அரண்மனைக்குச் சென்றாள். அங்கே சம்புவரையரின் மகன் கந்தமாறன் என்பவன் இருந்தான். முதுகில் குத்தப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தவன், பழுவூர் அரண்மனையில் நந்தினியின் மேற்பார்வையில் நடந்த சிகிச்சையினால் குணமடைந்து வந்தான். கந்தமாறன் தன்னுடைய நண்பனாகிய வந்தியத்தேவன்தான் தன்னை முதுகில் குத்தியிருக்க வேண்டுமென்று ஊகித்தான். அந்த ஊகத்தையே ஊர்ஜிதமாக்கிக் கொண்டு, நடந்ததுடன் நடவாததையும் சேர்த்து ஒரு கற்பனைக் கதையைக் குந்தவையிடம் அவன் சொன்னான். அச்சமயம் ஒரு தாதி ஓடி வந்து, "ஒற்றன் பிடிபட்டான்! வீதியில் கொண்டு வருகிறார்கள்!" என்று கூறினாள்.

இருபதாம் அத்தியாயம்

இரு பெண் புலிகள்

ஒற்றனைப் பிடித்துக் கட்டி வீதியில் கொண்டு வருகிறார்கள் என்ற செய்தியைத் தாதி ஓடி வந்து தெரிவித்ததும், அங்கிருந்த மூவரின் உள்ளங்களும் பரபரப்பை அடைந்தன. குந்தவையின் உள்ளம் அதிகமாகத் தத்தளித்தது.

"தேவி! நாம் போய் அந்தக் கெட்டிக்கார ஒற்றன் முகம் எப்படி இருக்



கிறது என்று பார்க்கலாமா?'' என்றாள் நந்தினி.

குந்தவை தயக்கத்துடன் ''நமக்கென்ன அவனைப் பற்றி?'' என்றாள்.

''அப்படியானால் சரி!'' என்று நந்தினி அசட்டையாய்க் கூறினாள்.

''நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என்று கந்தமாறன் தட்டுத் தடுமாறி எழுந்தான்.

''வேண்டாம்; உம்மால் நடக்க முடியாது; விழுந்து விடுவீர்!'' என்றாள் நந்தினி.

குந்தவை மனத்தை மாற்றிக்கொண்டவள் போல் ''இவருடைய அருமையான சிநேகிதன் எப்படி இருக்கிறான் என்று நாமும் பார்த்துத்தான் வைக்கலாமே! இந்த அரண்மனை மேன் மாடத்திலிருந்து பார்த்தால் தெரியுமல்லவா?'' என்று கேட்டாள்.

''நன்றாய்த் தெரியும்; என்னுடன் வாருங்கள்!'' என்று நந்தினி எழுந்து நடந்தாள்.

கந்தமாறன், ''தேவி! அவன் என் சிநேகிதனு யிருந்தால், மாமாவிடம் சொல்லி, நான் அவனைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்ய வேண்டும்!'' என்று சொன்னான்.

''அவன் உமது சிநேகிதன்தானு என்று எங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் நந்தினி.

''அப்படியானுல் நானும் வந்தே தீருவேன்!'' என்று கந்தமாறன் தட்டுத் தடுமாறி நடந்தான்.

மூவரும் அரண்மனை மேன் மாடத்தின் முகப்புக்குச் சென்றார்கள். சற்றுத் தூரத்தில் ஏழெட்டுக் குதிரைகள் வந்து கொண்டிருந்தன. அவற்றின் மீது வேல் பிடித்த வீரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குதிரைகளுக்கு மத்தியில் ஒரு மனிதன் நடந்து வந்தான். அவன் கைகளை முதுகுடன் சேர்த்துக் கயிற்றினுல் கட்டியிருந்தது. அந்தக் கயிற்றின் இரு முனைகளை இரு பக்கத்திலும் வந்த குதிரை வீரர்கள் பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

வீரர்களுக்குச் சற்றுத் தூரத்தில் வேடிக்கை பார்க்கும் கும்பல் வந்து கொண்டிருந்தது.

அரண்மனை மாடத்திலிருந்து பார்த்தவர்களுக்குக் குதிரைகளுக்கு நடுவில் நடந்து வந்த மனிதனின் முகம் முதலில் தெரியவில்லை.

ஊர்வலம் அருகில் வரும் வரையில் அந்த அரண்மனை மேன் மாடத்தில் மௌனம் குடிகொண்டிருந்தது.

குந்தவையின் ஆவலும் கவலையும் ததும்பிய கண்கள் நெருங்கி வந்த ஊர்வலத்தின் மீது லயித்திருந்தன.

நந்தினியோ வீதியில் எட்டிப் பார்ப்பதும் உடனே குந்தவையின் முகத்தைப் பார்ப்பதுமா யிருந்தாள்.

கந்தமாறன் அங்கே குடிகொண்டிருந்த மோனத்தைக் கலைத்தான்.

''இல்லை; இவன் வந்தியத்தேவன் இல்லை!'' என்றான்.

குந்தவையின் முகம் மலர்ந்தது.

அச்சமயம் அந்த விநோதமான ஊர்வலம் அரண்மனை மாடத்தின் அடிப் பக்கம் வந்திருந்தது.

கயிற்றினால் கட்டுண்டு குதிரை வீரர்களின் மத்தியில் நடந்து வந்தவன் அண்ணாந்து பார்த்தான்.

வைத்தியர் மகன் அவன் என்பதைக் குந்தவை தெரிந்து கொண்டாள்.

அண்ணாந்து பார்த்தவன் ஏதோ சொல்ல எண்ணியவனைப் போல் வாயைத் திறந்தான்.

அதற்குள் அவனை இருபுறமும் பிணைத்திருந்த கயிறு முன்னால் தள்ளிக் கொண்டு போய் விட்டது.

குந்தவை தன் மகிழ்ச்சியை வெளி யிட்டுக் கொள்ளாமல், ''இது என்ன பைத்தியக்காரத்தனம்? இவனை எதற்காகப் பிடித்து இழுத்து வருகிறார்கள்? இவன் பழையாறை வைத்தியர் மகன் அல்லவா?'' என்றாள்.

''ஓ! அப்படியா? என் மைத்துன ரின் ஆட்கள் எப்போதும் இப்படித் தான். உண்மைக் குற்றவாளியை விட்டு விட்டு யாரையாவது பிடித்துக் கொண்டு வந்து தொந்தரவு செய் வார்கள்!'' என்றாள் நந்தினி.

இதற்குள் கந்தமாறன், ''வந்தியத் தேவன் இவர்களிடம் அவ்வளவு இலகுவில் அகப்பட்டுக் கொள்வானா? என் சிநேகிதன் பெரிய இந்திரஜித்த னாயிற்றே? என்னையே ஏமாற்றியவன் இந்த ஆட்களிடமா சிக்கிக் கொள் வான்?'' என்றான்.

''இன்னமும் அவனை உம்முடைய சிநேகிதன் என்று சொல்லிக் கொள் கிறீரே!'' என்றாள் நந்தினி.

''துரோகியாய்ப் போய் விட்டான். ஆனாலும் என் மனத்தில் அவன் பேரில் உள்ள பிரியம் மாறவில்லை!'' என்றான் கந்தமாறன்.

''ஒருவேளை உம்முடைய அழகான சிநேகிதனை இவர்கள் கொன்று போட் டிருக்கலாம். இரண்டு ஒற்றர்களைத் தொடர்ந்து கோடிக்கரைக்கு இந்த வீரர்கள் போனதாகக் கேள்விப்பட் டேன்'' என்று நந்தினி சொல்லிவிட்டுக் குந்தவையின் முகத்தைப் பார்த்தாள். ''கொன்றிருக்கலாம்'' என்ற வார்த்தை குந்தவையைத் துடிதுடிக்கச் செய்தது என்பதை அறிந்து கொண்டாள்.

'அடி கர்வக்காரி! உன்பேரில் பழி வாங்க நல்ல ஆயுதம் கிடைத்தது. அதைப் பூரணமாக உபயோகப்படுத்தா மற் போனால் நான் பழுவூர் இளைய ராணி அல்ல! பொறு! பொறு!'

குந்தவை தன் உள்ளக் கலக்கத்தைக் கோபமாக மாற்றிக் கொண்டு, ''ஒற் றர்களாவது ஒற்றர்கள்! வெறும் அசட் டுத்தனம். வர வர இந்தக் கிழவர் களுக்கு அறிவு மழுங்கிப் போய்விட் டது! யாரைக் கண்டாலும் சந்தேகம்! இந்த வைத்தியர் மகனை நான் அல் லவா கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக அனுப்பியிருந் தேன்? இவனை எதற்காகப் பிடித்து வந்திருக்கிறார்கள்? இப்போதே போய் உங்கள் மைத்துனரைக் கேட்கப் போகி றேன்!'' என்றாள்.

''ஓகோ! தாங்கள் அனுப்பிய ஆளா இவன்? தேவி! சந்தேகம் என்று சொன்னீர்களே? எனக்குக் கூட இப் போது ஒரு சந்தேகம் தோன்றியிருக் கிறது. மூலிகை கொண்டு வருவதற்கு இவனை மட்டும் அனுப்பினீர்களா? இன்னொரு ஆளையும் சேர்த்து அனுப்பி னீர்களா?'' என்று நந்தினி கேட்டாள்.

''இவனோடு இன்னொருவனையும்தான் அனுப்பினேன். இரண்டு பேரில் ஒரு வனை இலங்கைத் தீவுக்குப் போகும் படி சொன்னேன்.''

''ஆகா! இப்போது எனக்கு எல் லாம் புரிந்து விட்டது. நான் சந் தேகித்தபடிதான் நடந்திருக்கிறது!''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன சந்தேகித்தீர்கள்? என்ன நடந் திருக்கிறது?''

''இனிச் சந்தேகமே இல்லை: உறுதி தான் தேவி! தாங்கள் இவனோடு சேர்த்து அனுப்பிய ஆள் ஏற்கனவே உங்களுக்குத் தெரிந்தவனா? புதிய மனிதனா?''

குந்தவை சற்றுத் தயங்கி, ''புது மனிதனாவது? பழைய மனிதனாவது? காஞ்சிபுரத்திலிருந்து ஓலை கொண்டு வந்தவன்; என் தமையனிடமிருந்து வந்தவன்'' என்றாள்.

''அவனேதான்! அவனேதான்!''

''எவனேதான்?''

''அவன்தான் ஒற்றன்! சக்கரவர்த் திக்கு ஓலை கொண்டு வந்ததாகத்தான் இங்கேயும் அவன் சொன்னானாம்...''

''என்ன காரணத்தால் அவனை ஒற்றன் என்று இவர்கள் சந்தேகித்தார்களாம்?''

''எனக்கென்ன தெரியும் அதைப் பற்றி? அதெல்லாம் புருஷர்கள் விஷயம்! பார்க்கப் போனால், அந்த ஒற்றனும் சந் தேகப் படும்படியாகத்தான் நடந்திருக் கிறான். இல்லாவிட்டால், இரகசியமாக இரவுக்கிரவே ஏன் தப்பி ஓட வேண்டும்? இந்தச் சாது மனிதருடைய முதுகிலே எதற்காகக் குத்திவிட்டுப் போக வேண்டும்?''

''இவருடைய முதுகில் அவன்தான் குத்தினான் என்பதையும் நான் நம்ப வில்லை. குத்தியிருந்தால் இவரை மறு

படியும் தூக்கிக் கொண்டு போய் அந்த ஊமையின் வீட்டில் ஏன் சேர்த்து விட்டுப் போகிறான்?''

''கூட இருந்து பார்த்தது போலச் சொல்கிறீர்களே தேவி! என்னமோ அந்த ஒற்றன் பேரில் உங்களுக்கு அவ்வளவு பரிவு தோன்றியிருக்கிறது. அவனிடம் ஏதோ மாய சக்தி இருக்க வேண்டும். இவர் கூட அவனை இன்னும் தம் சிநேகிதன் என்று சொல்லிக் கொள்கிறார் அல்லவா? — எப்படியானால் என்ன? போன உயிர் திரும்பி வரப் போவதில்லை. அவனை இந்த வீரர்கள் கொன்றிருந்தால்...''

குந்தவையின் முகத்தில் வியர்வை துளித்தது. கண்கள் சிவந்தன. தொண்டை அடைத்தது. நெஞ்சு படபட வென்று அடித்துக் கொண்டது. ''அப்படி நடந்திராது! ஒரு நாளும் நடந்திராது'' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

''இவர் சொல்கிறபடி அந்த ஒற்றன் அவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தால்?'' என்றாள்.

''ஆம், இளவரசி! வந்தியத்தேவன் அந்த ஆட்களிடம் ஒரு நாளும் அகப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான்!'' என்றான் கந்தமாறன்.

''இப்போது அகப்பட்டிராவிட்டால் இன்னொரு நாள் அகப்பட்டுக் கொள்கிறான்!'' என்றாள் நந்தினி.

குந்தவை பற்களைக் கடித்துக் கொண்டு, ''நாளை நடக்கப் போவது யாருக்குத் தெரியும்?'' என்றாள்.

பின்னர் ஆத்திரத்துடன், ''சக்கரவர்த்தி நோயாகப் படுத்தாலும் படுத்தார்; இராஜ்யமே தலைகீழாகப் போய் விட்டது! மூலிகை கொண்டு வருவதற்கென்று நான் அனுப்பிய ஆட்களைப் பிடிப்பதற்கு இவர்களுக்கு என்ன அதிகாரம்? இதோ என் தந்தையிடம் போய்க் கேட்டு விட்டு வருகிறேன்'' என்றாள்.

''தேவி! நோயினால் மெலிந்திருக்கும் சக்கரவர்த்தியை இது விஷயமாக ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்? என் மைத்துனரையே கேட்டுவிடலாமே? தங்கள் விருப்பம் ஒருவேளை அவருக்குத் தெரியாமல் இருக்கலாம். தெரிவித்தால் அதன்படி நடந்து கொள்கிறார். இந்தச் சோழ ராஜ்யத்தில் இளைய பிராட்டியின் விருப்பத்துக்கு மாறாக நடக்க யார் துணிவார்கள்?'' என்றாள் நந்தினி.

அந்த இரண்டு பெண் புலிகளுக்கும் அன்று நடந்த போராட்டத்தில் நந்தினியே வெற்றி பெற்றாள். குந்தவையின் நெஞ்சில் பல காயங்கள் ஏற்பட்டன. அவற்றை வெளிக் காட்டாமல் இருக்க இளவரசி பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்தது.

இருபத்தோராம் அத்தியாயம்

பாதாளச் சிறை

உலக வாழ்க்கையைப்போல் அறிய முடியாத விந்தை வேறொன்றுமில்லை. சுகம் எப்படி வருகிறது, துக்கம் எப்படி வருகிறது என்று யாரால் சொல்ல முடியும்? வானம் நெடுங்காலம் களங்கமற்று விளங்கி வருகிறது. திடீரென்று கருமேகங்கள் திரண்டு வந்து எட்டுத் திசைகளும் இருள் சூழ்ந்து இடி இடித்து மின்னல் மின்னி மழை கொட்டு கொட்டு என்று கொட்டுகிறது. உலகிலிருந்து காற்று என்பதே அற்றுப் போய் விட்டதாகச் சில சமயம் தோன்றுகிறது. மரங்களின் இலைகளும் அசையாமல் இருக்கின்றன. திடீரென்று எங்கிருந்தோ ஒரு சூறைக் காற்று வந்து சுழன்று சுழன்று அடிக்கிறது. அதன் வேகத்தில் பெரிய பெரிய மரங்கள் வேருடன் பெயர்ந்து விழுகின்றன. சற்று முன்னால் நேத்ரானந்தமாக வானளாவி நின்று காட்சியளித்த பசுமரச் சோலைகள் இப்போது அனுமார் அழித்த அசோகவனமாக மாறி விடுகின்றன.

குந்தவையின் வாழ்க்கையில் அத்தகைய சூறைக் காற்று இப்போது சுழன்று அடித்துக் கொண்டிருந்தது. சில காலத்துக்கு முன்பு வரையில் அவள் கவலை என்பதையே அறியாதவளாக இருந்தாள். வாழ்க்கை என்பது இடைவிடாத ஓர் ஆனந்த உற்சவமாக இருந்து வந்தது. அன்பும் ஆதரவும் ஆடலும் பாடலும் காவியமும் ஓவியமும் அணிபணியும் அலங்காரமும் உத்தியான வனமும் ஓய்யார ஓடமுமே வாழ்க்கை என்று எண்ணும்படியாக நாட்கள் சென்று கொண்டிருந்தன. தந்தையும் தாய்மார்களும் அண்ணனும் தம்பியும் அமைச்சர்களும் ஆசிரியர்களும் தாதிமார்களும் தோழிமார்களும் இளையபிராட்டியைத் தங்கள் கண்ணின் கருமணியாகப் பாவித்து நடத்தி வந்தார்கள். துயரம்

இன்னது என்பது காவியத்திலும் நாடகத்திலும் உள்ள கற்பனை மூலமாகவே அவளுக்குத் தெரிந்திருந்தது.

அத்தகைய பாக்கியசாலிக்குத் துன்பம் வரத் தொடங்கியபோது ஒன்றன் மேலொன்றாகத் தொடர்ந்து வந்து மோதியது. தந்தையின் நிலை கவலைக்கிடமா யிருந்தது. இராஜ்யத்துக்குப் பெரிய சோதனை ஏற்பட்டிருந்தது. தமையனும் தம்பியும் தூர தேசங்களில் இருந்தார்கள். இன்னதென்று சொல்ல முடியாத ஒரு பெரும் விபத்து சோழர் குலத்துக்கு ஏற்படப் போவதாகச் சோதிடர்களும் நிமித்தக்காரர்களும் மர்மமாகச் சொல்லி வந்தார்கள். நாட்டில் இரகசியச் சதிக் கூட்டங்கள் நடந்து வந்தன. நாட்டில் மக்கள் இனந் தெரியாத பீதியில் ஆழ்ந்திருந்தார்கள்.



வைர நெஞ்சு படைத்த வீரர்கள் வழி வழியாக வந்த குலத்தில் பிறந்த குந்தவை இவ்வளவையும் தீரத்துடன் சமாளிக்கக் கூடிய மனோ தைரியம் பெற்றிருந்தாள். குலத்துக்கும் ராஜ்யத்துக்கும் ஏற்பட்டிருந்த எல்லா அபாயங்களையும் தன் கூரிய மதியின் துணையினால் போக்கி விடலாம் என்ற திடமான நம்பிக்கை அவளுக்கு இருந்தது.

ஆனால், அவளுடைய வாழ்க்கையில் ஒரு சிறிய சம்பவம் — எதிர்பாராத ஒரு சந்திப்பு — அவளுடைய வைர இதயம் இளகவும் மனோதைரியம் குலையவும் காரணமாகி விட்டது.

வந்தியத்தேவனைக் குந்தவை சந்தித்தபோது — அது வரையில் மொட்டாக இருந்த அவளுடைய இருதய தாமரை — மடலவிழ்ந்து மலர்ந்தது.

ஆனால் என்ன துரதிர்ஷ்டம், — அதே சமயத்தில் ஒரு கருவண்டு அந்த மலருக்குள் குடிபுகுந்து, — தன் விஷக் கொடுக்கினால் அதன் மெல்லிய இதழ்களைக் கொட்டத் தொடங்கியது! அம்மம்மா! என்ன வேதனை!

அந்த வாணர் குல வீரன் ஒருவேளை சிறைப்பட்டிருக்கலாம் என்ற எண்ணம் எவ்வளவு வேதனையை அளித்தது? அவன் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கொடிய வார்த்தை எப்படி அவள் நெஞ்சைப் பிளந்தது? அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்க அவள் எவ்வளவு கஷ்டப்படவேண்டி யிருந்தது?

பெற்றவர்கள், உற்றார்கள், உடன் பிறந்தவர்கள், உயிருக் குயிரான தோழிகள் எவ்வளவோ பேர் இருக்க,— எவனோ வழியோடு போகிறவனைப்பற்றி — அகஸ்மாத்தாக இரண்டு மூன்று தடவை சந்தித்தவனைப் பற்றி ஏன் இந்த இதயம் இப்படித் துடிதுடிக்க வேண்டும்?

இவை யெல்லாவற்றையும் யோசிப்பதற்கும், காரண காரியங்களை ஆராய்ந்து முடிவு கட்டுவதற்கும் இப்போது நேரமில்லை. மீன மேஷம் பாராமல், சகுனமும் சகுனத் தடையும் பாராமல், விசாரிக்க வேண்டியதை உடனே விசாரித்து, செய்ய வேண்டியதை உடனே செய்ய வேண்டும்...

ஆகவே அன்று பிற்பகலிலேயே இளைய பிராட்டி சின்னப் பழுவேட்டரையரின் மாளிகைக்கு வருவதாகச் சொல்லி அனுப்பி விட்டுச் சென்றாள். அந்த மாளிகையின் அந்தப்புர மாதர்கள் இளையபிராட்டியை ஆர்வத்தோடு வரவேற்றார்கள். அன்பைச் சொரிந்து உபசரித்தார்கள். இளவரசி அவர்களுடன் அளவளாவிச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பிறகு சித்திர மண்டபத்துக்குச் சென்றாள். அங்கே சின்னப் பழுவேட்டரையர் காத்திருந்து இளைய பிராட்டியை வரவேற்று, மண்டபத்தில் தீட்டியிருந்த சித்திரங்களை விளக்கிக் கூற முற்பட்டார். குந்தவையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் வந்தாள்.

கடைசிச் சித்திரத்தண்டை வந்து நின்றதும், குந்தவை காலாந்தக கண்டரை ஏறிட்டுப் பார்த்து, ''ஐயா! பழுவேட்டரையர்கள் பரம்பரையாகச் சோழ குலத்துக்கு ஒப்பற்ற சேவை புரிந்து வந்திருக்கிறார்கள்!'' என்றாள்.

''அம்மையே! அது எங்கள் பாக்கியம்'' என்றார் காலாந்தக கண்டர்.

''அந்தச் சேவைக்கெல்லாம் ஈடாகக் கூடியது இந்தச் சோழ சாம்ராஜ்யந் தான் என்பதில் சந்தேகமில்லை...''

''தாயே! இது என்ன வார்த்தை?''

''ஆனாலும் சக்கரவர்த்தியின் ஆயுட் காலம் முடிந்து கைலாச பதவியை அடையும் வரையில் தாங்கள் காத் திருக்கலாம் அல்லவா? சாம்ராஜ்ய அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு இவ் வளவு அவசரப்பட வேண்டுமா?''

இந்த வார்த்தைகள் காலாந்தக கண்டரின் இருதயத்தில் கூரிய அம்பு களைப்போல் பாய்ந்தன என்பதை அவ ருடைய முகம் காட்டியது. அவரது நெற்றியில் வியர்வைத் துளிகள் துளித்து நின்றன. மீசை துடிதுடித்தது. கை கால்கள் வெட வெடத்து ஆடின.

காலாந்தக கண்டர் நெற்றி வியர்வை யைத் துடைத்துக் கொண்டு குந்தவை யைப் பார்த்து, ''அம்மையே! இது என்ன இவ்வளவு உக்கிரம்? சொல் லம்பினாலேயே என்னை யமலோகத்துக்கு அனுப்பி விடுவதென்று உத்தேசமா?'' என்றார்.

''ஐயா! அத்தகைய சக்தி என்னிடம் இல்லை என்பது தங்களுக்கே தெரியும். காலாந்தக கண்டரிடம் அணுக யமனே பயப்படுவானே? என்போன்ற பேதைப் பெண்ணால் அது முடியுமா?''

''அம்மணி! இத்தகைய கொடிய வார்த்தைகளைச் சொல்வதைக் காட்டி லும் பழுக்கக் காய்ச்சிய ஈயத்தை என் காதில் தாங்கள் ஊற்றலாம்! தேவி இவ்வளவு மறக் கருணை காட்டும்படி அடியேன் என்ன தவறு செய்தேன்?''

''தங்கள் தவற்றைப் பற்றிச் சொல்ல நான் யார்? என்னுடைய தவறு இன்னது என்பதைத்தான் தாங்கள் சொல்ல வேண்டும். என் தந்தையின் நோயைத் தீர்ப்பதற்கு மூலிகை கொண்டு வருவதற்காக ஆள் அனுப்பி யது என் பேரில் தவறா?''

''இல்லை, அம்மணி, அது ஒரு நாளும் தவறாகாது.''

''பழையாறை வைத்தியர் மகனைக் கோடிக் கரைக்கு மூலிகை கொண்டு வருவதற்காக நான் அனுப்பினேன் என்பது தங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும் அம்மணி!''

''இன்றைய தினம் அந்த வைத்தியர் மகனைக் கயிற்றால் கட்டி வீதியில் உம் குதிரை வீரர்கள் இழுத்துக் கொண்டு வந்ததைப் பார்த்தேன். கட்டளை யிட்டது தாங்கள்தானே? அவனை அனுப்பியவள் நான் என்று தெரிந்து தானே இந்த ஏற்பாடுகள் செய்தீர்?''

''ஆம், பிராட்டி! ஆனால் அவன் ஒற்றன் என்பது தெரியாமல் தாங்கள் அனுப்பியிருக்கலாம் அல்லவா?''


''பழையாறை வைத்தியர் மகனா வது? ஒற்றனாவது? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறீரா?''

''தாயே! அவனே ஒப்புக் கொண் டிருந்தால் நம்ப வேண்டியதுதானே?''

இளவரசி சிறிது திடுக்கிட்டு, ''அவனே ஒப்புக் கொண்டானா? அது எப்படி? என்னத்தை ஒப்புக் கொண் டான்?'' என்று கேட்டாள்.

''தன்னோடு வந்த இன்னொருவன் ஒற்றன் என்று இவன் ஒப்புக் கொண் டான். அந்த இன்னொருவன் மூலிகைக் காக உண்மையில் பிரயாணம் புறப்பட வில்லை என்றும், இலங்கையில் யாருக்கோ கடிதம் கொண்டு சென்றதாகவும் இவன் ஒப்புக் கொண்டான்....''

''இவன் பெரிய மூடன்; ஏதாவது உளறியிருப்பான். இவனுடன் சென்ற இன்னொரு ஆளையும் அனுப்பியவள்



நான்தான். அது தங்களுக்குத் தெரி யும் அல்லவா?''

''தெரியும் தாயே! ஆனால் தங்களை அந்த மனிதன் ஏமாற்றி விட்டான் என்பதும் தெரியும். வந்தியத் தேவன் என்னும் பெயருடைய அவ்வாலிபன் உண்மையில் ஓர் ஒற்றன்தான்...''

''இல்லவே இல்லை. அவன் காஞ்சி புரத்திலிருந்து என் தமையன் எழு திய ஓலையைக் கொண்டு வந்தவன்.''

''இளவரசி! அவன் சக்கரவர்த்திக் கும் இளவரசரிடமிருந்து ஓலை கொண்டு வந்தான். அதனாலென்ன? ஒற்றர்கள் இப்படி ஏதாவது ஓர் உபாயத்தைக் கடைப்பிடித்துத்தானே தங்கள் வேலை யைச் செய்ய வேண்டும்?''

''ஐயா! வந்தியத்தேவன் ஒற்றன் என்பதற்கு ருசு என்ன?''

''அவன் ஒற்றன் இல்லா விட்டால் இராஜ பாட்டையில் நடப்பதை விட்டுக் குறுக்கு வழியில் நடப்பானேன்? குடந்தை ஜோதிடரிடம் போய்ச் சக்கர வர்த்தியின் ஜாதகப் பலனைப் பற்றிக் கேட்பானேன்?''


''சக்கரவர்த்தியின் ஜாதகத்தைப் பற்றி நான்கூடக் குடந்தை ஜோதிடரிடம் கேட்டேன். அதனால் என்ன?''

''சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வியாகிய தாங்கள் கேட்பது வேறு. சம்பந்தமில்லாத யாரோ வழிப்போக்கன் கேட்பது வேறு. பகையரசரின் ஒற்றனாயிருந்தால்தான் அப்படி விசாரிக்கத் தோன்றும்.''

''இது தங்கள் ஊகம். வேறு காரணம் உண்டா?''

''பகிரங்கமாக என்னுடைய அநுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டு தஞ்சைக் கோட்டைக்குள் வந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் பழுவூர் முத்திரை மோதிரத்தைக் காட்டி விட்டு ஏன் நுழைய வேண்டும்? பெரிய பழுவேட்டரையர் கொடுத்தார் என்று ஏன் பொய் சொல்ல வேண்டும்?''

''முத்திரை மோதிரம் பின்னே யார் கொடுத்தார்களாம்?''



''அது இன்னும் தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும்.''

''அதைக் கண்டுபிடிக்க முடியாமல் உங்கள் ஆட்கள் என்ன செய்தார்கள்?''

''அம்மணி, என்னுடைய ஆட்கள் மந்திரவாதிகள் அல்ல. ஒற்றனைக் கண்டு பிடித்துத்தானே முத்திரை மோதிரம் எப்படி அவனிடம் வந்தது என்று தெரிந்து கொள்ள முடியும்?''

''அவன் உண்மையைச் சொல்வான் என்பது என்ன நிச்சயம்?''

''உண்மையைச் சொல்லும்படி செய்வதற்கு வழிகள் இருக்கின்றன, தாயே! பாதாளச் சிறை இருக்கவே இருக்கிறது. ஒற்றனுக்கு இதுவும் தெரிந்திருக்கிறது. அதனால்தான் மறுபடியும் தலைமறைவாகி இரவுக்கிரவே கோட்டையிலிருந்து தப்பி ஓடிவிட்டான். சம்புவரையர் மகனையும் முதுகில் குத்தி விட்டு ஓடி விட்டான்!''

''அவன்தான் குத்தியவன் என்பதற்கு என்ன அத்தாட்சி?''

''கந்தமாறன் கூறியதுதான்.''

''அது போதாது! அவன் கந்தமாறனைக் குத்தவில்லை யென்று நான் சொல்லுகிறேன்.''

''தாயே! தாங்கள் அருகிலிருந்து பார்த்தீர்களா?''

''பார்க்கவில்லை. ஆனால் ஒருவன் முகத்தைப் பார்த்து அவன் குற்றவாளியா, இல்லையா என்பதை என்னால் நிர்ணயிக்க முடியும்.''

''அந்தப் பொல்லாத ஒற்றன் பாக்கியசாலி. தங்களுடைய நல்ல அபிப்பிராயத்தை எப்படியோ கவர்ந்துவிட்டான். அந்தப் பாக்கியம் எனக்குக் கிட்டவில்லையே?''

''ஐயா! அவனை மறுபடியும் ஒற்றன் என்று ஏன் சொல்கிறீர்?''

''தாயே! அவன் ஒற்றன் இல்லாவிட்டால் கூத்தாடிகளுடன் சேர்ந்து முகமூடி போட்டுக் கொண்டு ஏன் பழையாறையில் நுழைகிறான்? மாறுவேடம் போட்டுக் கொண்டு ஏன் கோடிக்கரைத் துறைமுகத்துக்குப் பிரயாணமாகிறான்? அவன் ஒற்றன் இல்லாவிட்டால் என் ஆட்களைக் கண்டதும் ஒருநாள் முழுவதும் கோடிக் கரையில் ஒளிந்து திரிவானேன்? இரவானதும் படகில் ஏறி இலங்கைத் தீவுக்குப் போவானேன்?''

''ஓகோ! அவன் படகில் ஏறித் தப்பித்துப் போய் விட்டானா? உங்கள் ஆட்களால் அவனைப் பிடிக்க முடியவில்லையா?'' என்ற குந்தவையின் கேள்விகளில் குதூகலம் தொனித்தது.

''ஆம், தாயே! அந்த மாயாவி ஒற்றன் என் ஆட்களை ஏமாற்றி விட்டுப் போய் விட்டான். இந்த முட்டாள்கள் அவனை விட்டு விட்டு வைத்தியர் மகனைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்....''

''ஐயா! ஒற்றன் எப்படியாவது போகட்டும். வைத்தியர் மகனை நான் அனுப்பி வைத்தேன். அவன் குற்றமற்றவன் என்பது நிச்சயம். அவனை உடனே விடுவித்தே ஆக வேண்டும்.''

''அம்மணி! இவன் ஒற்றனில்லாவிட்டாலும் ஒற்றனுக்கு உடந்தையாயிருந்திருக்கிறான். ஏதேதோ கட்டுக் கதைகளைச் சொல்லி என் ஆட்களை ஏமாற்றியிருக்கிறான். ஒற்றன் ஒளிந்திருப்பதற்கும் தப்பிப் படகிலேறிச் செல்வதற்கும் இவன் உதவி செய்திருக்கிறான்....''

''அதெல்லாம் எப்படி யிருந்தாலும் வைத்தியர் மகனை விடுதலை செய்தேயாக வேண்டும்....''


CINTHOL
அதிக
மணம்,
அதிக
மென்மை
மென்மை, அன்றலர்ந்த மலரின்
புதுமை, நறுமணம்
ஒப்பற்ற கிருமிநாசினியாகிய ஜி-11
(ஹெக்சாகுளோரோஃபின்) கொண்ட
சிந்தால் டாய்லெட் பவுடரின் நீடித்து
நிற்கும் நறுமணமும், பட்டுமென்மையும்
உங்கள் உடலைத் தழுவி, சருமத்திற்கு
நாள்முழுவதும் பாதுகாப்பளிக்கட்டும்.
ஜி-11
கொண்ட
சிந்தாலைப் போல
வேறெந்தப்
பவுடரும்
உங்களைப் பாது
காப்பதில்லை
INTERPUB/OP 17A TAM

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

"அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளச் சித்தமாயில்லை. நாட்டின் நாலுபுறமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின்றன. பகைவர்கள் படையெடுக்கக் காத்திருக்கிறார்கள். வீர பாண்டியனுடைய ஆபத்துதவிச் சேவகர்கள் சோழ குலத்தைக் கருவறுக்கச் சபதம் செய்திருக்கிறார்கள். நாடெங்கும் சதிகள் நடந்து வருகின்றன....."

"ஐயா! சதி செய்பவர்கள் எல்லோரையும் சிறையில் போடுவதாயிருந்தால் சிறையில் இடமே இராது."

"இடம் இருக்கும் வரையில் போடலாம் அல்லவா?"

"உண்மைச் சதியாளரைப் போடுவதற்குக் கொஞ்சம் இடம் மிஞ்சட்டும். ஐயா! வைத்தியர் மகனை உடனே விடுதலை செய்யுங்கள்!"

"அந்தப் பொறுப்பை நான் ஏற்க முடியாது, தாயே!"

"சக்கரவர்த்தியின் கட்டளை வந்தால் செய்வீரா! அதையும் புறக்கணிப்பீரா?"

"அம்மணி! இதற்குச் சக்கரவர்த்தியின் கட்டளை தேவையில்லை. இளைய பிராட்டியின் விருப்பம் எதுவோ, அதுவே சக்கரவர்த்திக்கு வேதக் கட்டளை என்பது உலகமறிந்த செய்தி. இதோ பாதாளச் சிறையின் சாவியைத் தங்கள் கையில் ஒப்புவித்து விடுகிறேன். தாங்களே சென்று கதவைத் திறந்து விடுதலை செய்யுங்கள். இன்னும் யாரையாவது விடுதலை செய்வதாயிருந்தாலும் தாராளமாய்ச் செய்யுங்கள். அதனால் வரும் லாப நஷ்டங்களுக்குப் பொறுப்பு தங்களது!...."

இவ்வாறு சொல்லிக் காலாந்தக கண்டர் ஒரு பெரிய சாவியை எடுத்துக் கொடுத்தார். குந்தவை பொங்கி வந்த தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "ஆகட்டும், ஐயா! லாப நஷ்டங்களுக்குப் பொறுப்பு நானே ஏற்கிறேன்!" என்று சொல்லிச் சாவியைப் பெற்றுக் கொண்டாள்.

"இந்தச் சோழ சாம்ராஜ்யத்துக்கு ஏதாவது பெருந் தீங்கு நேர்ந்தால், அது இரண்டு பெண்களினால்தான் வந்ததாகும்" என்றார் தஞ்சைக் கோட்டைத் தலைவர்.

"நான் ஒருத்தி; அந்த இன்னொரு பெண் யாரோ?"

"பழுவூர் இளையராணி நந்தினி தேவிதான்!"


குந்தவை புன்னகை புரிந்து, "சோழ சாம்ராஜ்யத்தின் சர்வாதிகாரியுடன் என்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறீர்களே? இது காதில் விழுந்தால் பெரிய பழுவேட்டரையர் தங்களைத் தேசப் பிரஷ்டம் செய்து விடுவார்!" என்று சொன்னாள்.

"ரொம்ப நல்லதாய்ப் போய் விடும்! அதற்கு நான் காத்திருக்கிறேன்" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

(தொடரும்)

உஷாராக இருங்கள்!

வெளிநாட்டு ஊடுருவிகள் நமது பொருளாதாரத்தை உறிஞ்ச விடாதீர்கள்!



வாங்குங்கள்

ஸிங்கர்*

தையல் மெஷின் ஊசிகள்...

• அவை நம்பகமானவை • அகில உலக ஸிங்கர் தரத்திற்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப் படுபவை.

வெளிநாட்டு ஊசிகள் கள்ளத்தனமாக இந்தியாவினுள் நுழைந்து நமது பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. இந்தியாவில் தயாராகும் ஊசிகளை வாங்குவதன் மூலம் நீங்கள் இப்பாதிப்பை முறியடிக்க உதவலாம். வாங்குங்கள் ஸிங்கர் தையல் மெஷின் ஊசிகள். மறவாதீர்கள், இது தேசிய அபிமானப் பிரச்சினை மட்டுமல்ல, உங்கள் சொந்த நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயமும் கூட!

ஸிங்கர்-அளிப்பது சிறந்த பொருள்களே.


தயாரிப்பாளர்கள்:
ஸிங்கர் டிவிஸ் லிமிடெட்
மதுரை

SM 91 Tm

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: ஷா தாம்சந்த் பிமாஜி, 13, நாராயண முதலி லேன், சென்னை-1 ○ எஸ். ஓட்டாஜி பிராஞ்ச: கோயமுத்தூர் ○ ஷா நவல்மல் தரம்சந்த், 3, அல்லிமால் தெரு, திருச்சி



ஆண்டு விழாவில் அண்ணல்



திரு ஓ. வி. அழகேசன் பேச எழுந்தார்.

''பேசாதே !'' என்று ஒரு குரல் உரக்க அதட்டியது !

நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

அப்பாடா! நல்ல வேளை! ஓர் உபாத்தியாயினிதான் மாணவிகளைப் பேசாமல் இருந்து திரு அழகேசனின் பேச்சைக் கேட்குமாறு பணித்துக் கொண்டிருந்தார் !

பூந்தமல்லியில் சரோஜினி வரதப்பன் பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவில் பேசிய திரு அழகேசன் கோவையிலும் சென்னையிலும் நிலவும் தண்ணீர்ப் பஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு நல்ல வேளையாக இந்தப் பள்ளியில் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கக் கூடாது என்றுதான் கிணறு எடுத்திருக்கிறார்கள் என்று கூறி நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

திறந்தே இருந்த கிணற்றை அன்று 'திறந்து வைக்க' வந்திருந்தவர் திரு பழனிவேல் ராஜன். அவரும் அழகேசனைப் போலவே தண்ணீர்ப் பஞ்சத்தைக் கண்டு மிரண்டிருந்ததால்தானோ என்னவோ ஒரு கிண்டி அளவே உள்ள செம்பில் புதிய கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்தி இழுத்தார். அதிலும் பாதியை ஞாபகமாகக் கிணற்றுக்குள்ளேயே கொட்டி விட்டார் !

இந்த விழா விசேஷம் பெற்றதற்கு முக்கிய காரணம் காந்தி நூற்றாண்டினையொட்டி மாணவிகள் காந்தி கண்காட்சியை ஏற்படுத்தியிருந்ததுதான். பல படங்களையும் பொம்மைகளையும் சேகரித்தும் தாங்களே பல சித்திரங்கள் வரைந்தும் கண்காட்சியை அழகுற அமைத்திருந்தனர் மாணவிகள். ஒரே அளவினதான இன்ஜெக்ஷன் மருந்து வைக்கும் கண்ணாடிக் குப்பிகளால் உருவாக்கப்பட்டிருந்த காந்தி மண்டபம் கண்ணைக் கவர்ந்தது. கண்காட்சியை ஸ்ரீமதி லக்ஷ்மிதேவதாஸ் காந்தி திறந்து வைத்தார்.

மாணவிகளுக்குப் பரிசு வழங்கியபோது, முதல் பரிசு பெற்ற மாணவியைத் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி ருக்மிணி ஆசார்யா அழைத்ததும் எனக்கு ஆச்சரியம் தாங்கவில்லை! ஏனெனில், பரிசைப்பெற்றுக் கொள்ள ஒரு வக்கீல் மேடைக்கு வந்தார்!

அப்புறம்தான் அம்மாணவியே அடுத்தாற்போல் நிகழவிருக்கும் நாடகத்துக்காக வக்கீல் வேஷம் போட்டிருக்கிறாள் என்பது தெரிந்தது!

தமிழகத்தின் முதலமைச்சராகத் திகழ்ந்த திரு பக்தவத்ஸலம் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது ஏற்படுத்தப்பட்ட 'டிரஸ்டி'ன் ஆதரவில் பூந்தமல்லியில் சரோஜினி வரதப்பன் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நடந்துவருகிறது.

திரு பக்தவத்ஸலத்தின் குமாரி சரோஜினி, அண்ணல் காந்தி அடிகள் சென்னைக்கு விஜயம் செய்த போதுதான் முதன் முதலாகச் சமூக சேவை என்று குறிப்பிடத்தக்க ஒரு சிறிய பணியைச் செய்தார். அன்று ஹிந்தி பிரசார சபையில் 'வாலண்டியர்'களாகப் பணியாற்ற இரு பெண்கள் தேவைப்பட்டனர். காந்தி அடிகளின் முன்னிலையில் அன்று தொடங்கிய சரோஜினியின் சமூகப்பணி இன்று வரையில் நீடித்திருப்பதுடன் எத்தனையோ பல துறைகளில் கிளை விட்டுப் படர்ந்திருக்கிறது.

எத்தனையோ பேருக்கு எவ்வளவோ விதம்விதமான குறைகள் உண்டு. சரோஜினி வரதப்பனின் தாயாருக்கு ஒரு விசித்திரமான குறை ! சரோஜினி சிறுமியாக இருந்தபோதுகூட அவளைத் திட்டவோ அடிக்கவோ தமக்கு ஒரு சந்தர்ப்பம்கூடக்கிடைத்ததில்லையே என்ற குறை அந்தத் தாயாருக்கு நிரம்ப உண்டு !

இப்படிப்பட்ட சரோஜினி வரதப்பனை ஸ்தாபகராகக் கொண்ட இந்தப் பள்ளி மேன்மேலும் சிறப்புறவும் அதில் படிக்கும் மாணவிகள் மேன்மையுறவும் கேட்பானேன்?

— குட்டி கிருஷ்ணன்

முதல் படம்: காந்தி கண்காட்சி. இரண்டாவது : ஆண்டு விழாவில் இடமிருந்து வலமாக பட்டம்மாள் அழகேசன், லக்ஷ்மி தேவதாஸ் காந்தி, ஓ. வி. அழகேசன், சரோஜினி வரதப்பன்.

ராமாயணம்

ராஜாஜி



6. வசிஷ்டர் வாயால்

கோபத்திலும் சாபத்திலும் தம் தபோ பலம் செலவழிந்து போனதைக் கண்டு விசுவாமித்திரர் மறுபடியும் கோரமான தவஞ் செய்வதற்காக மேற்கே புஷ்கர தீர்த்தத்துக்குச் சென்றார்.

அவ்விடத்திலும், பல ஆண்டுகள் செய்த தவம் நன்றாக முற்றிப் பயன் தரும் சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்து, மறுபடியும் கோபத்தால் சம நிலை இழந்து விட்டார். தம் புத்திரர்களையே சபித்து விட்டார். அதன் பின், இனிக் கோபத்துக்கு இடம் தரக் கூடாது என்று சங்கற்பம் செய்து கொண்டு மறுபடியும் தவஞ் செய்ய ஆரம்பித்தார். பல்லாண்டுகளுக்குப் பின் பிரம்மனும் தேவர்களும் அவருக்குத் தரிசனம் தந்தார்கள்.

''கௌசிகரே! நீர் செய்த தவம் பலித்தது. நீர் இனி அரசர் கணக்கில் இல்லை. பூரண ரிஷியாகி விட்டீர்'' என்று சொல்லிக் கௌரவித்துவிட்டு நான்முகன் திரும்பினான்.

அதனால் விசுவாமித்திரர் எப்படித் திருப்தி அடைவார்? பரமசிவனிடம் பெற்றது அஸ்திரங்கள். இப்போது பெற்றது ரிஷி பதவி. அவர் விரும்பியதோ வசிஷ்டருக்குச் சமமான சக்தி. ஆனபடியால் இன்னும் பல்லாண்டு கடுந் தவஞ் செய்ய நிச்சயித்தார்.

தேவர்களுக்கு இது பிடிக்கவில்லை. இதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று புஷ்கர தீர்த்தத்துக்கு மேனகையை அனுப்பினார்கள். புஷ்கர தீர்த்தத்தில் அந்த அப்ஸர ஸ்திரீ ஸ்நானம் செய்ய வந்தாள். அவளுடைய அழகினால் விசுவாமித்திரர் வஞ்சிக்கப்பட்டார். தம் தவத்தை நிறுத்தி விட்டு, சுகமாகப் பத்து ஆண்டுகள் கழித்தார். பத்து ஆண்டுகளும் ஒரு பகல் ஓர் இரவு போல் கழிந்து விட்டன.

பிறகு விழித்துக் கொண்டார். ''ஐயோ, இப்படியாயிற்றே?'' என்று வருந்தித் துக்கப்பட்டார்.

மேனகைக்கு நடுக்கம். சாபத்துக்குத் தயாராகக் கை கூப்பி நின்றாள். முனிவர் தம் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''இது என்னுடைய மடமை; உன் குற்றமல்ல!'' என்று மதுரமாகப் பேசி அனுப்பிவிட்டு, இமாலயம் சென்றார். மறுபடியும் ஆயிரம் வருஷங்கள் இந்திரியங்களை அடக்கி உக்கிர தபசு செய்தார்.

தேவர்கள் சூழ நான்முகன் பிரசன்னமாகி, ''விசுவாமித்திரரே! நீர் மேனகையைச் சபிக்காமல் பொறுத்து மறுபடியும் கடுந்தவம் ஆரம்பித்து முடித்தீர். நீர் மகரிஷி பதவியை அடைந்து விட்டீர்'' என்று ஆசிர்வதித்தான்.

விசுவாமித்திரர் மகிழ்ந்தார். ஆயினும் அவருடைய எண்ணம் அப்போது நிறைவேறவில்லை. மறுபடியும் அற்புதமானதும் அது வரை யாருமே செய்யாததுமான தவம் ஆரம்பித்தார். ஆயிரம் வருஷங்கள் செய்தார்.

தேவர்கள் மிகவும் கவலை கொண்டார்கள். மறுபடியும் ஓர் அப்ஸரஸ்திரீயை அனுப்பி வைத்தார்கள்.

''ரம்பையே! உன்னுடைய தயவு வேண்டும். நீ எப்படியாவது விசுவாமித்திர ரிஷியை ஏமாற்றி அவருடைய தவத்தை நிறுத்த வேண்டும்'' என்று இந்திரன் கேட்டுக் கொண்டான். அவள் பயப்பட்டாள். ஆயினும் இந்திரனுடைய ஏவலை ஒப்புக் கொண்டு போய் விசுவாமித்திரருடைய மனத்தைக் கலைத்தாள். கிளம்பிய காமத்தை அடக்கிக் கொண்டவராயினும் இப்படி மோசம் செய்ய வந்தாளே என்று கோபங் கொண்டு, ''நீ கல்லாகப் போவாய்'' என்று சாபமிட்டார். ரிஷிகளுடைய சாபம் அவர்களுடைய மனத்தில் எழும் கோபமே. எண்ணிய எண்ணம் தபோ பலத்தால் உடனே சாபமாகி நிறைவேறி விடுகிறது. தவம் நஷ்டமாகி விடுகிறது.

மறுபடியும் உறுதியான தீர்மானம் செய்து கொண்டு அன்ன பானம், பேச்சு மூச்சு எல்லாம் அடக்கிவிட்டு, அதுவரையில் ஒருவரும் செய்யாத மகா தபஸை ஆரம்பித்து முடித்தார்.

இதுவும் ஆயிரம் வருடங்கள் நடந்தது. தேவர்கள் பலவித இடையூறுகள் செய்து பார்த்தார்கள்; தவத்தைக் கலைக்க முடியவில்லை. விசுவாமித்திரருடைய உடல் ஒரு மரக்கட்டைபோல் ஆயிற்று. இந்திரியச் செயல்கள் எல்லாம் நின்று போய் உயிர் மட்டும் இருந்தது.

தேவர்கள் அனைவரும் விசுவாமித்திரர் செய்த தவத்தின் உக்கிரத்தால் தவித்தார்கள். அந்த வேதனை தாங்க முடியாமல் அவர்கள் பிரம்மனிடம் சென்று கைகூப்பி, ''நாதனே! எங்களால் கௌசிக மகரிஷியினுடைய தவத்தை இனிப் பொறுக்க முடியாது. இடையூறு செய்ய நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஒன்றும் பயன்படவில்லை. அவருடைய தவத்தின் வெப்பத்தால் நாம் அழிந்து போவோம் போலிருக்கிறது. அவர் விரும்பிய வரத்தைத் தந்து விட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்படியே தேவர்கள் சூழ நான்முகன் விசுவாமித்திரரிடம் சென்று தரிசனம் தந்து, ''நீர் பிரம்மரிஷியாகி விட்டீர். உமக்கு எல்லா மங்களமும் ஆகுக'' என்று ஆசீர்வதித்தான். விசுவாமித்திரர் மகிழ்ந்தார்.

ஆயினும், ''இந்தப் பதவி வசிஷ்டர் வாயால் வந்தால் அல்லவோ நான் பூரண திருப்தி அடையலாம்?'' என்று மிக வினயமாகச் சொன்னார்.

வசிஷ்டரும் பழைய சண்டையை நினைத்துப் புன்னகை செய்து, ''நீர் செய்த கடுந் தவங்களின் பயனை நீர் அடைந்தீர். நீர் பிரம்மரிஷி என்பதைப் பற்றி ஒரு சந்தேகமுமில்லை'' என்றார். எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

இவ்வாறு அற்புதத் தவங்கள் அற்புத முறையில் விடாமுயற்சியுடன் செய்து வெற்றி பெற்ற மாமுனிவர், தசரதன் சபைக்கு எதிர் பாராமல் திடீர் என்று வந்தார்.



இந்திரனுடைய சபைக்கு நான்முகன் வந்தால் தேவராஜன் எவ்வாறு வரவேற்பானோ அது போல் தசரதன் எழுந்து முனிவரை வரவேற்று, முனிவருடைய பாதங்களைத் தொழுது, ''இன்றே என் வினைத்தொடர்பு தீர்ந்து விட்டது. இது என் முன்னோர் செய்த தவப் பயனே. இரவு தீர்ந்து சூரியோதயமானதுபோல் தங்களுடைய திருமுகம் கண்டேன், இனி எனக்கென்ன குறை? அரசனாக ராஜ்யத்தை ஆண்டு, தவத்தினால் பிரம்மரிஷியான தாங்கள் என்னைத் தேடி வந்தீர்களே! என்னால் என்ன காரியம் ஆக வேண்டும்? சொல்லி அருள வேண்டும்! அதைச் செய்யக்

கடமைப்பட்டவன் நான். எதை விரும்புகிறீரோ அதைச் செய்வேன்'' என்றான்.

தசரதன் சொன்ன சொல்லைக் கேட்டு விசுவாமித்திரர் மிக மகிழ்ந்தார். அவருடைய தேஜசு இன்னும் அதிகமாகப் பிரகாசித்தது.

''அரசனே! உம்முடைய பொன்மொழிகள் உமக்கே தகும். உம்மைத் தவிர வேறு யார் இப்படிப் பேசுவார்கள்? நீர் பிறந்த குலம் இக்ஷ்வாகு குலம். நீர் அடைந்திருக்கும் குருவோ வசிஷ்ட முனிவர். வேறு எவ்வாறு நீர் பேசுவீர்? நான் கேளாமலேயே நீர் வாக்குத் தந்து விட்டீர். அது என் இதயத்தைத் திருப்தி செய்து விட்டது. நான் வந்த காரியத்தைப் பூர்த்தி செய்து தருவீராக'' என்று கூறித் தாம் வந்த காரியத்தை உடனே சொல்ல ஆரம்பித்தார்.

7 ராமனைத் தருவீர்!

''நான் நியமம் பூண்டு ஒரு வேள்வி நடத்துகிறேன். ஆரம்பித்து முடியும் தறுவாயில் மாரீசன், சுபாஹு என்ற இரண்டு அரக்கர்கள் அதைக் கெடுத்து வருகிறார்கள். அவர்கள் தேக பலமும் வீரியமும் யுத்தப் பயிற்சியும் பெற்ற அரக்கர்கள். சாபமிட்டு அவர்களை நானும் மற்ற ரிஷிகளும் அடக்க முடியும். ஆனால், நியமமும் தவமும் கெடாமல் நடந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. இந்தச் சங்கடத்தில் நானும் மற்ற ரிஷிகளும் கஷ்டப்படுகிறோம். மாமிசமும் ரத்தமும் யாக வேதிகை பேரில் எறிந்து வேள்வி நடைபெறாமல் செய்து வருகிறார்கள். உம்முடைய வீர குமாரர்களில் மூத்தவனை ராமனை என்னுடன் அனுப்பினீரானால் எங்களுடைய கஷ்டம் நீங்கும். என் பாதுகாப்பில் அவனுடைய வீரமும் திவ்விய பலமும் வளர்ந்து இந்த அரக்கர்களை எதிர்த்து வெற்றியோடு பெரும் புகழ் அடைவான். இது நிச்சயம். ராஜகுமாரனைச் சில நாட்களுக்கு என்னிடம் ஒப்புவிப்பீராக. நான் கேட்டதை மறுக்க வேண்டாம். நான் கேட்பதற்கு முன்பே நீர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவீராக. குமாரனுடைய க்ஷேமத்தைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம். இந்தக் காரியத்தை நீர் செய்தால் மூவுலகத்திலும் என்றென்றைக்கும் புகழுடைவீர். வசிஷ்டரும் மந்திரிகளும் நான் சொல்வதை அங்கீகரிப்பார்கள்'' என்றார் விசுவாமித்திரர்.

முனிவர் சபைக்கு வந்தபொழுது பெருமகிழ்ச்சி அடைந்த அரசன் இதைக் கேட்டதும் சொல்லொணாத பயமும் கவலையும் உண்டாகி நடுங்கினான். எவ்வளவோ ஆசைப்பட்டுப் பெற்ற அருமைப் புத்திரனை அரக்கர்களுக்குப் பலி கொடுக்க வேண்டியதாயிற்றே. இல்லையெனில், விசுவாமித்திரருடைய பெருங் கோபத்துக்கு ஆளாக வேண்டுமே, இதற்கென்ன செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் திகைத்தான். கொஞ்ச நேரம் கழித்துத் திகைப்பிலிருந்து புத்தியைச் சுவாதீனப் படுத்திக் கொண்டு சொன்னான்:

''பதினாறு வயது பூர்த்தியாகாத ராமனுக்கு ராக்ஷசர்களோடு யுத்தம் செய்யும் தகுதியை நான் காணவில்லையே! அவனை அனுப்பச் சொல்லுகிறீரே, இது என்ன பயன் தரும்? யுத்தங்களிலுள்ள மோசடிகள் ஒன்றைப் பற்றியும் அவனுக்குத் தெரியாதே? ராக்ஷசர்கள் எப்போதும் மோச யுத்தம்தானே செய்வார்கள்? அந்த அரக்கர்களை எதிர்ப்பதற்குச் சின்னஞ் சிறுவனை அனுப்புவது சரியான யோசனை அல்ல; நான் இருக்கிறேன்; என்னுடைய சதுரங்க சேனை இருக்கிறது. அதையெல்லாம் விட்டு விட்டுக் குழந்தையைக் கேட்கிறீரே; அரக்கர்கள் எங்கே, இவன் எங்கே? இவனா அவர்களை எதிர்த்து உம்முடைய வேள்வியைக் காக்கப் போகிறான்? எனக்கு உம்முடைய எதிரிகளைப் பற்றி எல்லா விஷயமும் சொல்லுவீர். நான் உம்முடன் என் சேனையைக் கூட்டிக் கொண்டு சென்று வேண்டியதையெல்லாம் செய்வேன். அது இருக்கட்டும். அந்த அரக்கர்களைப் பற்றியும் அவர்கள் பலத்தைப் பற்றியும் விவரமாகச் சொல்லவும்'' என்று பேச்சை மாற்றுவதற்காகக் கேட்டான்.

விசுவாமித்திரர் மாரீசனைப் பற்றியும் சுபாஹுவைப் பற்றியும் அவர்களுடைய எஜமானன் ராவணனைப் பற்றியும் விவரமாகச் சொல்லி ராமனை அனுப்ப வேண்டும் என்று மறுபடியும் வற்புறுத்தினார்.

''தவமிருந்து பெற்ற என் அருமை ராமனை விட்டுப் பிரிந்தால் என் உயிர் போய்விடும். வேண்டுமானால் நான் சேனையுடன் வருவேன். நீர் சொல்வதைப் பார்த்தால் என்னாலுங்கூட இந்த வேலையை முடிப்பது கடினமாக இருக்கும் போல் தோன்றுகிறது! அப்படியிருக்க என் மகனை அனுப்பவாவது! முடியாது!'' என்றான்.

திடீர் என்று ஏற்பட்ட திகைப்பினால் முன்னுக்கும் பின்னுக்கும் முரணாகப் பலவிதமாகப் பேச ஆரம்பித்

தான் தசரதன். அப்படி அவன் பேசி, ராமனை அனுப்ப மறுத்ததைக் கண்டு விசுவாமித்திரருக்குக் கோபம் நெய் விட்ட வேள்வித் தீ போல் பொங்கிற்று.

விசுவாமித்திரர் சொன்னார்: "முதலில் கேட்டதையெல்லாம் தருகிறேன் என்று தாராளமாகச் சொல்லி விட்டு இப்போது அதைப் பொய்யாக்கினீர். இந்த நடவடிக்கை இக்ஷ்வாகு குலத்துக்குத் தகுந்ததல்ல. நீர் பிறந்த சிறந்த வம்சத்துக்குத் துரோகம் செய்கிறீர். இதுவே உம்முடைய முடிவாயின் நான் வந்த வழி திரும்புகிறேன். சத்தியம் தவறிப் பந்துமித்திரர்களுடன் சுகமாக இருப்பீராக....."

முனிவருடைய கோபத்தால் பூதேவி நடுங்கினாள். தேவர்களும் பயந்தார்கள். வசிஷ்டர் அரசனை நோக்கி மெதுவாகச் சொன்னார்:

"தருமமே மானிட உருவம் எடுத்தது போல் இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்துப் புகழும் திருவும் பெற்ற நீர் சத்தியத்தினின்று பிறழ்தல் தகாது. உம்முடைய வாயினின்று 'செய்கிறேன்' என்று ஒரு தடவை வார்த்தை வெளியானபின் அதைப் பிறகு செய்யாமலிருத்தல் தகாது. உம்முடைய தான தரும வேள்விகளையெல்லாம் ஒரேயடியாக அது அழித்து விடும். ராமனை முனிவருடன் அனுப்புவீராக. லக்ஷ்மணனையும் சேர்த்து அனுப்புவீராக. யுத்தப் பயிற்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். குசிக புத்திரருடைய பாதுகாப்பிலுள்ள, உம் குமாரர்களை ராக்ஷசர்கள் தீண்ட முடியாது. அமிருதத்தை அக்னி சக்கரம் காப்பது போல் இவர் ராமனைக் காப்பார். இவருடைய பூரண மகிமை உமக்குத் தெரியவில்லை. தவமே உடல் கொண்டு நிற்கிறவர். வீரர்களுள் வீரர். அறிவுக்கும் தவத்துக்கும் இவரே எல்லை. இவருக்குத் தெரியாத அஸ்திரமில்லை. அந்த விஷயத்தில் மூன்று உலகங்களிலும் இவருக்குச் சமமானவன் ஒருவன் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை. இவர் அரசனாக இருந்த காலத்தில் எல்லா அஸ்திர வித்தைகளையும் வரமாகப் பெற்றிருக்கிறார். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் இவர் அறியாதது இந்த உலகத்தில் ஒன்றுமில்லை. இத்தகைய மகா வீரமும் தேஜசும் பொருந்திய விசுவாமித்திர முனிவருடன் உம் குமாரன் ராமனை அனுப்புவதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். முனிவருடைய காரியத்தை முனிவரே பார்த்துக் கொள்வதற்கு வேண்டிய சக்தி அவருக்கு உண்டு. உம்முடைய குமாரனுடைய நன்மைக்காகவே அல்லவோ அவர் இங்கே வந்து உம்மைக் கேட்கிறார்! தயங்காமல் உம் குமாரனை அவர் கேட்கிறபடி அவருடன் அனுப்புவீராக."

இவ்வாறு மகாஞானி வசிஷ்டர் சொன்னதைக் கேட்டதும் அரசனுடைய புத்தி தெளிந்தது. ராம லக்ஷ்மணர்கள் இருவரையும் அனுப்புவதென்று நிச்சயம் செய்தான்.

ராம லக்ஷ்மணர்கள் முனிவர் முன் வந்து நின்றார்கள். அரசனும் தாய்மார்களும் வசிஷ்டரும் மங்கள மந்திரம் சொல்லியானபின் உச்சி மோந்து, "முனிவருடன் செல்லுங்கள்" என்று வழி அனுப்பி வைத்தார்கள்.

அச்சமயம் சுகமாகக் காற்று வீசிற்று. ஆகாயத்தினின்று பூமாரி பொழிந்தது. அசரீரி ஒலித்தது. கையில் வில் பிடித்து இரு யுவர்களும் முனிவருடன் கம்பீரமாகச் சென்றார்கள்.

ரிஷி உலகத்துக்கே சிகரமாக விளங்கிய விசுவாமித்திரரும், அழகே தேகம் எடுத்தாற் போன்ற ராஜகுமாரர்களும் தசரதனிடம் விடைபெற்றுக் கொண்டு போகும் மங்களக் காட்சியை வால்மீகியும் கம்பரும் மிகவும் அனுபவித்துப் பாடியிருக்கிறார்கள்.

தம்முடைய தவ வலிமையால் ஒரு புது உலகத்தையே சிருஷ்டிக்கும் சக்தி வாய்ந்த உபாத்தியாயர்; அரக்கர்களை ஒழித்துக் கட்டவே அவதரித்தவர்கள் மாணவர்கள் — இத்தகைய குரு சிஷ்யச் சேர்க்கையின் அழகை வால்மீகி முனிவர் கம்பீர நாதம் பொருந்திய எட்டுச் சுலோகங்களில் வர்ணிக்கிறார். வெற்றி வாள் இடுப்பில் தொங்க, குன்றைப் போன்ற தோள்களின் மேல் ஒரு பக்கம் வில்லும், ஒரு பக்கம் தூணியும், மத்தியில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் தலையுமாக முத்தலை நாகங்கள் படமெடுத்துச் செல்வது போல் ராஜ குமாரர்கள் காட்சி தந்தார்கள்.

கம்பர் தமக்கே உரிய பாணியில் பாடுகிறார்:

வென்றி வாள்புடை விசித்து மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுறாத் தூணி யாத்திரு
குன்ற போன்றுயர் தோளிற் கொற்றவில்
ஒன்ற தாங்கினன் உலகந் தாங்கினன்

அன்னதம்பியும் தானும் ஐயனும்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலெனச்
சொன்ன மாதவன் தொடர்ந்த சாயைபோல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினன்.

(தொடரும்)

□ மோதிலால் நேருவின் 108வது பிறந்த நாளையொட்டி இக்கட்டுரையை வெளியிடுகிறோம்.—ஆசிரியர்

முத்தும் வைரமும்

இளமைப் பருவம்

மோதி என்றால் முத்து. அவருக்குப் பிறந்ததோ வைரமாக ஜொலித்த ஜவாஹர். ஆக்ராவில் 1861, மே 7ந் தேதி பிறந்து வளர்ந்து கல்வி பயின்ற மோதிலால் நேரு, அலஹாபாத்தில் குடியேறி, மாதம் ஆயிரக் கணக்காகச் சம்பாதித்து, ஒரு சிற்றரசரைப் போல வாழ்ந்து, நாட்டுப் பணிக்கு ஆயிரக் கணக்காக வழங்கியதுடன், தலைசிறந்த புதல்வன் ஜவாஹர்லாலையும் தந்தார். பண்டித மோதிலால் ராஜ போகத்துடன் வாழ்ந்த காலத்தில் காந்திஜியின் அழைப்பை ஏற்றுத் தேசப் பணியில் ஈடுபட்டார். லண்டனில் தயாரித்த உடைகளையும், பாரிஸில் கிடைக்கும் சொகுசுப் பொருள்களையும் வரவழைத்து அனுபவித்து, ''ஆனந்த பவன்'' என்ற மாளிகையில் வாழ்ந்த அந்த மேதை, ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டதும், அன்னிய உடைகளை உதறிவிட்டு முரட்டுக் கதர் அணிந்தார்.





பெற்றோருடன் ஜவாஹர்லால்

மோதிலால் நேரு, இளமைப் பருவத்தில் குஸ்தி, சிலம்பம் முதலியவற்றில் பயிற்சி பெற்று உடல் கட்டுப் பெற்றவர். தன்மானமும், தன்னம்பிக்கையும் நெஞ்சுறுதியும் கொண்டவர். இளமைப் பருவத்தில் உருது, பாரசீக மொழிகள் கற்றுத் தேர்ச்சி பெற்றார். பி.ஏ. இறுதி வகுப்புப் பரீட்சையில் முதல் நாளன்று அதிக மதிப்பெண்கள் வாங்கக் கூடிய முறையில் விடைத் தாளை எழுதவில்லை என்ற ஐயம் தோன்றியதால் மற்றப் பரீட்சைகளை எழுதாமல் வீட்டுக்குத் திரும்பினார். அடுத்த ஆண்டுப் பரீட்சையில், தம்மைவிட வயதில் சிறியவர்களுடன் அமர்ந்து பரீட்சை எழுத அவருடைய தன்மானம் இடம் தராததால், கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, அலஹாபாத் உயர்நீதி மன்ற வழக்கறிஞர் தேர்வுக்கு அமர்ந்து தேறினார். தொழில் நடத்தத் தொடங்கியதும், சமூகத்தில் உயர்மட்ட நிலையில் இருப்பவர்களைப் போல் வாழ்க்கையைச் சொகுசாக அமைத்துக் கொண்டார். ஒரு சமயம் கமிஷனர் பயணம் செய்யும் முதல் வகுப்புப் பெட்டியில் மோதிலால் நேருவும் பயணம் செய்தார். மாலை உணவுக்குப் பிறகு மோதிலால் நேரு, தம்முடைய உயர்ந்த ரகப் படுக்கையை விரித்துப் போட்டுக் கொண்டதைப் பார்த்ததும் கமிஷனர் வியப்புற்று, தம்முடைய படுக்கையை விரிக்கவும் கூச்சப்பட்டு உட்கார்ந்து கொண்டே இரவைக் கழித்தார். ''அவருடைய படுக்கையைப் பார்த்த பிறகு, என்னுடைய படுக்கை மிக எளிமையாகத் தோன்றியது. அதை விரித்துப் படுப்பதற்கு வெட்கப்பட்டு உட்கார்ந்து கொண்டே தூங்கினேன்'' என்று, கமிஷனர் சில நாட்களுக்குப் பிறகு தம்முடைய நண்பர் ஒருவரிடம் கூறினாராம்.

சிறையில்

ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியதும், மோதிலால் நேரு, அந்நிய நாட்டிலிருந்து வரவழைத்த உடைகளை ஒதுக்கிவிட்டு முரட்டுக் கதர் அணியலானார். 1922ல் அவரும் ஜவாஹர்லாலும், இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டு சிறை சென்றார்கள். மோதிலால் நேருவின் சிறை வாசம் முடியுமுன்னரே வெளிவந்த ஜவாஹர்லால், அந்நியத் துணி மறியலில் தீவிரமாக ஈடுபட்டார்.

'மோதிலால் நேரு சிறையிலிருந்தபோது, அவருக்கு விதித்த அபராதத் தொகையை வசூலிப்பதற்காக ஆனந்த பவனிலுள்ள சாமான்களை 'ஜப்தி' செய்ய அரசாங்கக் கட்டளை பிறந்தது. இதை யறிந்த மோதிலால், ஆனந்த பவனத்துக்கு வரும் அதிகாரிகளை மரியாதையுடன் வரவேற்று, அவர்கள்

விரும்பும் பொருள்களை எடுத்துச் செல்ல உதவுமாறு, தம்முடைய பணியாட்களுக்குக் கடிதம் எழுதினர். ஒரு நாள் அதிகாரிகள், ஆனந்த பவனத்துக்கு வந்து, இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்த மேஜை நாற்காலி, சோபா முதலியவற்றையும் மோதிலால் நேருவின் விலையுயர்ந்த வேட்டைத் துப்பாக்கிகளையும் — ஒரு வண்டி நிரம்ப — எடுத்துச் சென்றனர்கள். வேட்டைத் துப்பாக்கிகளை இழந்ததற்காக மோதிலால் நேரு சிறிது வருந்தினர் என்றாலும், மற்றப் பொருள்களை இழந்ததற்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடவில்லை!

சிறையிலும் செல்வாக்கு

மோதிலால் நேரு சிறையில் இருக்கும்போது, ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிப்பதில் கண்டிப்புடன் இருந்து கஷ்டங்களை அனுபவித்தாலும் செல்வாக்குடன் இருந்தார். அன்றாடம் சத்தியாக்கிரகிகள் சிறைக்கு வந்து கொண்டே இருந்ததால் சிறை அதிகாரிகள் இட நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் தவித்தார்கள். சத்தியாக்கிரகிகளில் சிலர் கண்டித்தனம் செய்ததால், ஒழுங்கு முறையைக் காப்பதிலும் சிரமம் ஏற்பட்டது. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு மோதிலால் நேருவின் உதவியைச் சிறை அதிகாரிகள் அவ்வப்போது கோருவதுண்டு. சத்யாக்கிரகிகளைச் சமாளிக்க முடியாமல் ஐரோப்பிய சிறை அதிகாரி, ஒரு நாள் மோதிலால் நேருவிடம் வந்தபோது, "பண்டிட்ஜி, சிறை நிர்வாகமே என் கையிலிருந்து நழுவி விடும் போலிருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறினர். மோதிலால் நேரு சிரித்துக் கொண்டே, "நண்பரே, விரைவில் பாரத நாடே ஆங்கிலேயர்களான உங்களிடமிருந்து நழுவிவிடப் போகிறதே!" என்றார்.

சிறை அதிகாரி பதில் கூற முடியாமல் மௌனமாக இருந்தார்.

தந்தையும் தனயனும்

மோதிலால் இறந்த சமயத்தில் காந்திஜியும் டாக்டர் பி. சி. ராயும் ஆனந்த பவனத்தில் தங்கியிருந்தார்கள். ஒரு சமயம் ராய், காந்திஜியிடம், "மோதிலால் நேருவின் சிறந்த இயல்பும் பற்றுதலும் என்ன?" என்று கேட்டார்.

"ஜவாஹரிடமுள்ள அன்பும் பாசமும் தான்" என்று காந்திஜி விடையளித்தார்.

"நாட்டுப் பற்று அல்லவா?" என்று டாக்டர் ராய் கேட்டதற்கு காந்திஜி சொன்னர்: "ஜவாஹரிடமுள்ள பாசத்திலிருந்துதான் நாட்டுப் பற்று கிளைத்தது. ரத்தினம் போன்ற புதல்வனை ஜவாஹரைப் பாரத தேசத்துக்குத் தந்தவர் என்ற பெருமை அவருக்கு உண்டு."

மோதிலால் நேரு தம்முடைய புதல்வனிடம் அளவுக்கு மீறிப் பாசம் வைத்திருந்தாலும் கண்டிப்பு மிக்கவர். ஜவாஹர்லால் இங்கிலாந்தில் கல்வி பயின்ற சமயத்தில் அவருடைய செலவுக்காக மோதிலால் தாராளமாகப் பணம் அனுப்பி வந்தார். ஒரு சமயம், ஜவாஹர்லால், தம்முடைய பிறந்த தினப் பரிசாக ஒரு மோட்டார் கார் வேண்டுமென்று தந்தைக்குக் கடிதம் எழுதினர். ஆனல், மோதிலால் நேரு கண்டிப்புடன் மறுத்து விட்டார். "உன்னிடம் எனக்குள்ள அன்பு எத்தகையது என்று உனக்குத் தெரியும். ஆயினும் உன்னுடைய கோரிக்கையை மறுப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. உன்னுடைய வசதிக்கு ஒரு மோட்டார் கார் தேவை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனல் மாணவப் பருவத்தில் அதைத் தர முடியாது. மோட்டார் காரை ஓட்டுவதிலும் அதில் நண்பர்களுடன் உல்லாசமாகச் செல்வதிலும் உன்னுடைய நேரத்தில் பெரும் பகுதி கழிந்துவிடும். அதனல் உன்னுடைய உடல் நலமும் கல்வியும் பாதிக்கப்படலாம். இரண்டாவது காரணம் — பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் நீ, மோட்டார் ஓட்டும்போது, விபத்தில் சிக்கிக் கொண்டால் — இதை நினைக்கும்போதே மனம் பதறுகிறது. உனக்கு எந்த நேரத்தில் விபத்து ஏற்படுமோ என்ற அச்சத்துடன் உன் தந்தை உறக்கமின்றித் தவிப்பதை நிச்சயமாக நீ



விரும்ப மாட்டாய். ஆகவே, உனக்கு இப்போது மோட்டார் கார் தேவையில்லை."

ஒரு பௌர்ணமியன்று மோஹன்லால் ஸக்ஸேனவுடன் மோதிலால் நேரு, ஆக்ராவுக்குச் சென்றார். தாஜ்மஹாலில் உயர்ந்த ஸ்தூபியின் மீதிருந்து ஒரு செப்புக் காசை எறிந்தால் அது தரையில் பட்டதும் அது நெளிந்து விடும் என்று ஆக்ராவாசிகள் கூறுவதை ஸக்ஸேனவிடம் அவர் கூறியதுடன், ஸ்தூபியின் உச்சிக்குச் சென்று காசுகளை விட்டெறியும்படி கூறினர். ஸக்ஸேன தயக்கத்துடன், "பண்டிட்ஜி! கீழே விழும் காசுகளை— நிலா வெளிச்சம் இருந்தாலும் — தேடிப் பிடிக்க உங்களால் முடியாதே?" என்றார்.

உடனே மோதிலால் நேரு: "இதுதான் உனக்கும் ஜவாஹருக்குமுள்ள வித்தியாசம். நான் சொன்னதும், ஜவாஹர் சிறிதும் சிந்திக்காமல் மேலே ஏற ஓடியிருப்பான்!" என்றார்.

லாகூர் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஜவாஹர்லால் நேரு குதிரைமீது அமர்ந்து பவனி வந்தார். தந்தையிடமிருந்து தனயன் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதும், தலைவர் குதிரை மீதமர்ந்து பவனி வந்ததும் முதல் தடவையாக நடந்தவை. மோதிலால் நேருவும் அவருடைய

பார்வை

ரயில்வே வாரம் கொண்டாடிய சென்னை இணைப்புப் பெட்டி தொழிற்சாலைக்குப் பத்திரிகை நிருபர்களை அழைத்திருந்தார்கள். தொழிற்சாலைப் பகுதிகளை அவர்கள் பார்வையிட்டு வந்த போது ரயில் பெட்டியின் ஜன்னல்களை இருவர் பொருத்திக்கொண்டிருந்ததைக் கண்டனர். இரும்புச் சட்டங்களை அடுக்கி அவற்றுக்கு ஸ்குரு போட்டு முடுக்கிக் கொண்டிருந்தனர். அவ்விருவரும் பார்வை இழந்தவர்கள்! அவர்கள் அந்த ஜன்னல்களை வெகு இலகுவாகவும் நேர்த்தியாகவும் பொருத்திக் கொண்டிருந்தது பத்திரிகை நிருபர்களை அயர வைத்தது.

''அவர்கள் ஜன்னல் வழியாகப் பார்க்க முடியாது. ஆனால் ரயில் பெட்டிகளில் பிரயாணம் செய்யும் மக்களுக்கு ஜன்னல் வழியே வெளியே பார்க்க வசதி செய்து தருகிறார்கள்!'' என்று விளக்கினார் ஐ. ஸி. எப். தகவல் அதிகாரி.

மனைவி சொரூப ராணியும் அனார்க்கலி கடைத் தெருவில் ஒரு மாடியிலிருந்து பவனியைக் கண்டு களித்தார்கள். ''என்னுடைய மகனைக் காந்திஜியிடம் ஒப்படைத்து விட்டேன்; அவரை ஆசானாகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டு போராட்டத்தில் குதித்துள்ள என் மைந்தன் வெற்றியடைந்து சிறப்புற்றுத் திகழ்வான்'' என்று மோதிலால் நேரு ஆனந்தக் கண்ணீருடன் ஆசி கூறினார்.

ஸ்வராஜ்ய பவனம்

லாகூர் காங்கிரஸுக்குப் பிறகு ஜவாஹர்லால் நேரு காந்திஜியைச் சந்திக்க ஜாம்பஸார் என்ற ஊருக்குச் சென்றார். அங்கு அவரும் சில நண்பர்களும் உரையாடிக் கொண்டிருந்தபோது ஆனந்தபவனம் மாளிகையை காங்கிரஸ் மகாசபைக்குத் தானமாகத் தருவது பற்றிச் சிந்தித்தார்கள். அப்போது ஜவாஹர், ''அந்த மாளிகை என்னுடைய கைக்கு வரும்போது தேசத்துக்கு அளித்து விடுவேன் என்பது உறுதி'' என்று கூறினார். இதைப் பற்றிக் கேள்விப்பட்ட மோதிலால் நேரு காந்திஜியிடம், ''அந்த நாள்வரை காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. நானே தானம் செய்து விடுகிறேன்'' என்று கூறினார். உடனே தான சாசனம் செய்ய ஏற்பாடு செய்தார். உப்புச் சத்தியாக்கிரகம் தொடங்கிய சின்னாட்களில் ஆனந்தபவனம் மாளிகையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. அதனுடைய பெயரை 'ஸ்வராஜ்ய பவன்' என்று மாற்றினார்கள். இன்று அதன் ஒரு பகுதியில் கமலா நேரு நினைவு ஆஸ்பத்திரி இருக்கிறது.

ஹிந்தி

லட்சுமணபுரியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மோதிலால் நேரு ஆங்கிலத்தில் உரையாற்றினார். ''இந்தியில் பேசுங்கள்'' என்று சில இளைஞர்கள் குரல் எழுப்பி, அவரைப் பேச விடாமல் இடையூறு செய்தார்கள். அப்போது மோதிலால் நேரு, ''அன்பார்ந்த இளைஞர்களே, அமைதியாக இருங்கள். தேச விடுதலைக்குப் போராடுவதைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் 'விடுதலை', 'தேசிய மொழி' என்று கூக்குரல் போடுவதுடன் அமைதி யடைந்து விடுவீர்கள். நான் செயலாற்றுவேன்'' என்றார்.

மோதிலால் நேரு இந்துஸ்தானியில் உரையாற்றும்போது பாரசீக மொழியிலிருந்து மேற்கோள்களைக் காட்டுவதுண்டு. இலக்கியச் சிறப்புடைய அவருடைய உரையைச் சில சமயங்களில் அறிஞர்களே சரிவரப் புரிந்து கொள்ளாமல் தவிப்பதுண்டு. தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகு, பாமரர்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய இந்துஸ்தானியில் அவர் பேசுவது வழக்கம்.

ஆங்கில உரையை முடித்ததும், மோதிலால் நேரு இந்துஸ்தானியில் பேசத் தொடங்கினார். கூக்குரலிட்ட இளைஞர்கள் வாயடைத்து நின்றார்கள்.

காந்திஜியும் மோதிலால் நேருவும்

மோதிலால் நேரு, தம்முடைய மீசையை அகற்றிவிட்டு, கதர் உடை அணிந்து கொண்டிருக்கும் கோலத்தில் எடுக்கப்பட்ட புகைப் படத்தைப் பார்க்கும் வாய்ப்பு ஒரு சமயம் காந்திஜிக்குக் கிடைத்தது. மழமழப்பான கன்னங்களும் உறுதி காட்டும் எடுப்பான மோவாயும் பிரகாசமான கண்களும் உள்ள மோதிலால் நேருவின் படத்தை காந்திஜி வியப்புடன் பார்த்துவிட்டு, ''முன்பு மீசையுடன் மோதிலாலைப் பார்த்திருக்கிறேன். முகத் தோற்றத்தை மீசை மறைத்திருந்தது. மீசை இல்லாத இந்த முகத்தைப் பார்த்த பிறகுதான் இவர் பிடிவாதக்காரர் என்று தெரிகிறது'' என்றார்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் மோதிலால், ''உங்களை வருணிக்க நான் கவிஞன் அல்ல. ஆனால் உங்களுடைய பிடிவாதத்தை எதிர்த்து நிற்க எவராலும் முடியாது என்பது நிச்சயம்'' என்ற குறிப்பைக் காந்திஜிக்கு அனுப்பினார்.

மோதிலால் நேரு படுத்த படுக்கையாக இருக்கையில், காந்திஜி அவரைச் சந்தித்தார். ''பாபுஜி! உங்களுடைய போராட்டம் வெற்றி பெறும் என்பது உறுதி. ஆனால் விடுதலை பெற்ற பாரதத்தைக் காணும் வாய்ப்பு எனக்கு இல்லை'' என்று மோதிலால் நேரு கூறினார்.

காந்திஜிக்கு அடுத்தபடியாகச் செல்வாக்குப் பெற்ற தலைவர்களில் மோதிலால் நேருதான் முதன்மையானவர். அவர் மறைந்ததும், சந்தித்த நிருபரிடம், ''இப்போது நான் கைம்பெண் போலாகிவிட்டேன்'' என்று இரத்தினச் சுருக்கமாகத் தம்முடைய நிலைமையைக் கூறினார் காந்திஜி.

—கே. எஸ். ஜே.

ஞானஒளி

கே. சுந்தரம்

காட்சி - 3

(அந்தோணியின் வீடு. இருள் கவியும் நேரம். அந்தோணி லாரன்ஸுடன் தன் வீட்டு வாசலுக்கு வருகிறான். வீட்டின் கதவு இலேசாகத் திறந்திருக்கிறது. உள்ளே இருள்.)

அந்தோணி: என்ன இந்தப் பொண்ணு இன்னும் விளக்கேற்றாமே உட்கார்ந்துக்கிட்டிருக்கே.

(திண்ணையில் இருக்கும் அரிக்கேன் லாந்தர் விளக்கை ஏற்றுகிறான் அந்தோணி. இடக் கையில் அரிவாளும் வலக் கையில் லாந்தருமாகத் தோளினால் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைகிறான்.)

அந்தோணி (லாந்தரை உயரே தூக்கிப் பிடித்து): லாரன்ஸ்! ஜாக்கிரதையா பார்த்து வா! மேரி! இங்கே யாரு வந்திருக்காங்க பார்த்தியா?

(கை லாந்தரை வீட்டின் நடுவே உத்தரத்தில் தொங்கும் கொக்கியில் மாட்டத் தூக்கியவன் கயிற்றுக் கட்டிலில் மேரியும் அவள் காதலனும் தம்மை மறந்த நிலையில் இருப்பதைக் கண்டு திகைத்து நிற்கிறான். தன் தந்தையை அந்த நேரத்தில் எதிர்பார்க்காத மேரியும் அவள் காதலன் பால்கரும் துள்ளி எழுந்து ஆளுக்கொரு பக்கமாகப் போய் நின்று நடுங்குகின்றனர்.)

அந்தோணி: ''மேரி!''

(மிருகமாக மாறி அந்தோணி உறுமுகிறான். அரிவாளை ஓங்கியபடி பேசுகிறான்.)

அந்தோணி: பார்க்கிறியா லாரன்ஸ்! எந்த மகளைப்பற்றி லட்சியக் கனவு கண்டேனோ அந்த மேரியை... இல்லே! அவள் பிணத்தைக்கூட யாரும் காண முடியாமல் செய்து விடுகிறேன், பார்க்கிறியா?



(லாரன்ஸ் குறுக்கிட்டு அந்தோனியைத் தடுக்கிறார்.)

லாரன்ஸ் (அதட்டும் குரலில்) : அந்தோனி...!

அந்தோனி (மேரியிடம் நின்று புலம்புகிறான்): ஏம்மா, நீயா இந்த நிலையிலே நிக்கிறே? சாயந்திரம் அடைக்கலம் சாமி என்கிட்டே உன் கல்யாணத்தைப் பத்திச் சொன்னப்பக்கூட அதை விளையாட்டா நெனைச்சேனே!

நீ தாவணி கிழிஞ்சாக்கூட தைச்சுத்தானே போட்டுக்குவே? இந்தத் தகப்பனோட விருப்பம் புரிஞ்சு நடந்துக்குவியே...! இப்போ மட்டும் ஏன் தவறிட்டே? இதைவிட என்கிட்டே வெளிப்படையா 'அப்பா! எனக்குக் கல்யாண ஆசை வந்திடுச்சு! என்னைப் படிக்க வைக்காதே'ன்னு சொல்லியிருக்கலாமே! மாதா கோயில்லே மணியடிக்கிறவன் மக, பெரிய வக்கீலா வருவேன்னியே! இப்போ ஏன் குற்றவாளியா நிக்கிறே?

வயசுப் பொண்ணு நீ தனியா பள்ளிக் கூடத்துக்குப் போகிறபோது நான் துணைக்கு வரட்டுமான்னு கேட்பேன். அப்போ, 'இந்த அந்தோனி மகள் ஆயிரம் ஆம்பிளைக்குச் சமம்'ன்னு வீராப்பு பேசுவியே! யாரும்மா, இந்த ஆம்பிளைத் துணை? எங்கே போச்சு அந்த வீம்பும், வீராப்பும்? தூ...!

(துப்புகிறான்)

எல்லாரும் என் முகத்திலே துப்புங்க...என் பொண்ணு — கல்லறை வெட்டுகிறவன் பொண்ணு — கலெக்டரா வரணும்னு கனாக்கண்டேனே... அவள் காதலைப் படிச்சுட்டா.

(ஆத்திரத்துடன் அரிவாளை ஓங்கியபடி அவள் மீது பாய்கிறான்)

லாரன்ஸ் (இடையில் புகுந்து துப்பாக்கியை நீட்டி) : டேய் நில்லுடா !

அந்தோனி : என்னைச் சுடப் போறியா.... சுடு! ஆனா தடுக்காதே... வெட்டாமல் விட மாட்டேன்!

லாரன்ஸ்: நீ வெட்டிட்டா அந்த ரத்தத்தில் களங்கத்தைக் கழுவிவிட முடியுமா? ஆத்திரப்பட்டா மட்டும் அவமானம் மறைஞ்சுடுமா?

அந்தோனி : வேறே வழி?

லாரன்ஸ் : கல்யாணம் செய்து வைக்கிறேன். ஊர்ப் பழியாவது வராம இருக்குமே.

அந்தோனி : கல்யாணமா? இவனுக்கா?

லாரன்ஸ்: இப்பவே, இங்கேயே நடக்கும்!

அந்தோனி : அதைச் செய்யவா நான் அரும்பாடு பட்டு அவளைப் படிக்க வைச்சேன்...?



"குனிஞ்ச என் தலையை நான் பெற்ற மகளாலே மேலும் குனிய வைச்சுட்டியே..." ...ஆண்டவனே.!

லாரன்ஸ்: வேறே வழியில்லே... (மேரியின் காதலன் — பயந்து நடுங்கும் பாஸ்கரிடம்) எங்கே, 'பிரேயர்' பண்ணு !

(அவன் விழிக்கிறான்)

லாரன்ஸ் : நீ கிறிஸ்துவன் இல்லே! நான் உன்னைச் சாயந்திரமே சர்ச்சிலே கவனிச்சேன். உன் பேரென்ன?

பாஸ்கர்: பாஸ்கர்.

லாரன்ஸ்: உங்கப்பா யாரு?

பாஸ்கர் (தயங்கி): பக்கத்து ஊரிலே டாக்டரா இருக்காரு!

லாரன்ஸ் : பக்கத்து ஊர்னு? எந்த ஊரு?

பாஸ்கர் : திருக்காட்டுப்பள்ளியிலே டாக்டர் சரவணனுடைய மகன்!

லாரன்ஸ் : எங்கே வேலே செய்யறே?

பாஸ்கர் : வேலே தேடிக்கிட்டிருக்கேன்.

லாரன்ஸ் : இந்த வேலே எத்தனே நாளா? ....ம்... பதில் சொல்லுடா!

பாஸ்கர் : ஆறு மாசமா...!

லாரன்ஸ் : நீ கிறிஸ்துவனு மாறுவதற்கு உங்க வீட்டிலே சம்மதிப்பாங்களா?

(பாஸ்கர் மௌனம் சாதிக்கிறான்)

என்ன பதில் பேசாம நிக்கிறே? யோசிக்க என்ன இருக்கு? உண்டு இல்லேன்னு பதில் சொல்லேன்! ம்... கையை நீட்டு...

(அவன் கையில் மோதிரம் இல்லை என்று தெரிந்ததும் தம் மோதிரத்தை அவனிடம் தருகிறார் லாரன்ஸ்.)

ம்... அவன் கையிலே போடு. மேரி...! உன் மோதிரத்தை அவன் கையிலே போடு.

(மத சம்பிரதாயப்பட்ட திருமணச் சடங்கு மந்திரங்களைத் தாமே சொல்லுகிறார். அந்தத் திருமணத்தை உள்ளம் ஏற்றுக்கொள்ளும் ஒரு கல்யாணமாக நடத்தி வைக்கிறார்.)

லாரன்ஸ் : இங்கே நடக்கக் கூடாதது நடந்ததாலே மேலும் நடக்கக் கூடாதது நடந்துடக் கூடாதே என்கிறதுக்காக நான் மூலம் எல்லாம் சரிவர நிச்சயம் ஆகி நல்லபடியா நாலு பேர் முன்னிலையிலே கணவன் மனைவிங்கிற உங்க உறவு ஊர்ஜிதமாகிற வரைக்கும் இந்தப் பக்கமே நீ தலை காட்டக் கூடாது. போ...!

(பாஸ்கரை அனுப்பும் போது அந்தோணி வைத் துப்பாக்கி முனையில் சமாளிக்கிறார் லாரன்ஸ். பாஸ்கர் போகிறான்.)

லாரன்ஸ் : டேய், அந்தோணி! 'இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரிவாளை அவங்க ரெண்டு பேர் மேலேயும் பிரயோகப்படுத்த மாட்டேன்'னு எனக்குச் சத்தியம் செஞ்சு குடுடா....ம்....!

அந்தோணி : ஏசுநாதர் சத்தியமா இந்த அரிவாளை நான் அவங்க மேலே உபயோகப் படுத்த மாட்டேன்.

(மேரி, "அப்பா!" என்று கதறியபடி அவன் காலில் விழுந்து பாதங்களைப் பற்றிக் கொள்கிறாள். அந்தோணி மிருகம்போல் உறுமி உதறித் தன்னை விடுவித்துக் கொண்டு அப்பால் நகருகிறான்.)



நடத்தக் கூடாத, இங்கே நடக்க முடியாத இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கிறேன். காரணம்... உன்னை நடத்தை கெட்டவன்னு நாலு பேர் சொல்லிவிடக் கூடாதேங்கறதுக்காக!


உன்னைப் பெத்தவன் நெஞ்சு பற்றி எரியுதே. அவன் பழிபாவத்துக்கு ஆளாகக் கூடாதேங்கிறதுக்காக. ஆபத்துக்குப் பாவமில்லே என்பாங்க. இதைத் தவிர வேறு வழியுமில்லே. நம் மனசைத் திருப்திப்படுத்திக்க இப்போ இங்கே நடந்த உன் கல்யாணம் சீக்கிரமே ஊர் அறிய மதச் சடங்குகளோடே நடந்தாகணும். (பாஸ்கரைப் பார்த்து) நாளைக் காலையிலே மேரியோட அப்பா உங்க அப்பாகிட்டே பேச வருவாரு. பெரியவங்க

அந்தோணி : ஆண்டவனே! என்னைப் பெற்ற அப்பனாலே குனிஞ்ச என் தலையை நான் பெற்ற மகளாலே மேலும் குனிய வைச்சுட்டியே... ஆண்டவனே!

மாதாவுக்கு எத்தனை மெழுகுவர்த்தி ஏற்றி வைச்சேன்! எத்தனை தடவை இந்தக் கைகளாலே மணி அடிச்சிருக்கேன்! எல்லாமாச் சேர்ந்து என்னைச் சோதனை பண்ணிடுச்சே.

(அவன் கை அரிவாள் அருகேயிருந்த கயிற்றுக் கட்டிலை வெட்டித் தள்ளுகிறது. தன் கோபத்தையெல்லாம் அதன் மீது காட்ட அது பல துண்டுகளாக உடைகிறது.)

(தொடரும்

ஜப்பானிய உடையில் அண்ணா!

தம் உலகச் சுற்றுப் பயணத்தின் பொழுது அமெரிக்கா சென்று இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் திரு அண்ணா அவர்கள் ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்புக்கிணங்கி, தலைநகரான டோக்கியோவில் வந்து இறங்கினார். அங்கு இரண்டு தினங்கள் இருந்த பிறகு நாங்கள் இருக்கும் 'ஓசாகா'வுக்கு அருகே சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள ஜப்பானின் பண்டைத் தலைநகரான, 'கியோடோ'வுக்கு அவர் வருகை தரும்படி ஏற்பாடாகி யிருந்தது.

டோக்கியோவில் பல தென்னிந்தியர்கள் இருந்த போதிலும் 'ஓசாகா'வில் உள்ள ஒரே தென்னிந்தியத் தமிழர் குடும்பம் என்ற பெருமை எங்களுக்கு உண்டு. எங்களைத் தவிர ஜார்ஜ் ஸாம்யூல் என்ற கிறிஸ்தவரும் தம் குடும்பத்துடன் இங்குள்ளார். பல ஆண்டுகளாக ஜப்பானிலேயே தங்கிவிட்ட போதிலும் மதுரையைச் சேர்ந்த ஸாம்யூல் தம்பதிகளுக்கும் தமிழ் எழுதப் படிக்கத் தெரியும். இக்காரணங்களால், சென்னையில் முதலமைச்சரான அண்ணா 'கியோடோ'வுக்கு வருகிறார் என்ற செய்தி எங்கள் இரு குடும்பத்தினருக்கும் பெருமகிழ்ச்சி யளித்தது.

திரு அண்ணாவின்பால் கொண்ட பற்றுதலால், திரு ஸாம்யூல் அவர்கள் தமக்குத் தெரிந்தவரை தமிழை நினைவிற்கூர்ந்து, அண்ணா அவர்களை வரவேற்க ஒரு சிறு கவிதை இயற்றினார்.

அண்ணா உலகப் பிரசித்தி பெற்ற 'ஹிகாரி' ரயிலில் பிரயாணம் செய்து கியோடோ ரயில் நிலையத்தில் வந்திறங்கினார். அச்சமயம் அவரை வரவேற்க வந்த பலருள் ஒருவராகத் திரு ஸாம்யூல் முதலில் நின்றபடி தாம் இயற்றிய தமிழ்க் கவிதையை அண்ணா அவர்களிடம் அளிக்க முன்வந்தார். அண்ணா அவர்கள் அக்கவிதையை வாங்கி முழுதும் மகிழ்ச்சியுடன் படித்து முடித்து நன்றி தெரிவித்த பிறகே அவ்விடத்தை விட்டகன்றார். திரு ஸாம்யூலுக்குத்தான் எத்தனை பெருமை! பல எழுத்துப் பிழைகளுடன் தாம் எழுதிய சிறு கவிதைக்கு அண்ணா அவர்கள் அளித்த முக்கியத்துவத்தைக் கண்டு அளவில்லா வியப்பில் ஆழ்ந்தார். தமிழுடன் ஒன்று கலந்த அண்ணாவுக்கும் அச்சிறு கவிதை அளித்த பெருமகிழ்ச்சியை அவரது முகத்தில் காண முடிந்தது.


கியோடோவில் மிகப் பெரிய ஹோட்டலான 'மியாகோ' ஹோட்டலில் அண்ணா அவர்கள் தங்க ஏற்பாடாகி யிருந்தது. அன்று மாலை என் கணவர் திரு சந்தானம் அவர்கள் அண்ணாவைச் சந்திக்கச் சென்றார்.

அண்ணாவைக் காண நானும் என் கணவருடன் செல்ல இயலாததற்கு நான் மிகவும் வருந்தினேன். அண்ணா அவர்கள் என் கணவரிடம் என்னைப் பற்றி விசாரித்தபொழுது, 'என் மனைவியும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவள்' என்று இவர் பதிலளிக்க, அச்செய்தி அண்ணாவுக்கு மகிழ்ச்சி யளித்திருக்க வேண்டும். ஏனெனில் பிறகு அவ்வறைக்குள் நுழைந்த திரு அரங்கண்ணல் மற்றும் திரு சொக்கலிங்கத்திடம் ''நம் ஊரில் பெண் எடுத்தவரைச் சந்தியுங்கள்'' என்றே என் கணவரை அவர்களுக்கு அண்ணா அறிமுகப்படுத்தினாராம்.

அண்ணாஅவர்களை எப்படியும் புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற ஆவலுடன் என் கணவர் சென்றிருந்தார். ஜப்பானில் பெண்கள் உடுத்தும் 'கிமோனோவை'ப் போலவே ஆண்களும் ஒருவித கிமோனோ உடை தரிப்பர். அதற்கு 'யுகாதா' என்று பெயர். ஹோட்டல் அறைகளிலும் தங்குபவர்களின் வசதி கருதி யுகாதா வைத்திருப்பார்கள். என் கணவரின் கையிலிருந்த காமிராவைப் பார்த்த அண்ணா, ''நாங்கள் இந்த யுகாதாவை அணிந்து கொள்கிறோம். அதைக் கொஞ்சம் புகைப்படம் எடுத்துக் கொடுங்கள்'' என்று கூறியபோது இவருக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. அண்ணா மற்றும் உடனிருந்த நண்பர்கள் மாரியப்பன், அரங்கண்ணல் முதலியோர் யுகாதா அணிந்து நிற்க அவர்களை என் கணவர் படம் எடுத்தார்.

மறுநாள் காலை அண்ணா ஒசாகா விமான நிலையத்திலிருந்து ஹாங்காங்கிற்குப் பயணமானார். அச்சமயம் நாங்கள் கணவனும்—மனைவியுமாக அண்ணாவை வழியனுப்ப விமான நிலையத்துக்குச் சென்றிருந்தோம்.

—நிர்மலா சந்தானம்



கோபியும் பிரபாகரும் பச்சைக் கிரகப் பயணத்தைத் தொடங்குமுன்னர் சில பரிசோதனைகளை நிகழ்த்தும் பொருட்டு நுண்ணிய விஞ்ஞானக் கருவிகளைக் கொண்ட விண்வெளிக் கப்பலை அனுப்பத் தீர்மானித்தார் டாக்டர் சந்திரசேகர்.
4
அம்புலிக்கு அப்பால்
கதை: புஷ்பா படம்: விஜயா.
சக்தி வாய்ந்த ராக்கெட்டின் முனையில் விண்வெளிக் கப்பல் பொருத்தப்பட்டு நின்றது.
கோபி, நான் கவனிக்க வேண்டிய விஷயம் ஏதாவது இருக்கிறதா?
எல்லாம் ஓகே, ஸார்! பித்தானை நீங்கள் அழுத்த வேண்டியதுதான்.
இந்தப் பரிசோதனைக் கட்டத்திலேயே தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்ட பிரபாகர் சிரித்துக் கொண்டான்.
எல்லாம் ஓ.கே. யாமே! கோபி! இன்றோடு உன் கொட்டம் தீர்ந்தது! நீ இனி புரொபஸரின் செல்லப் பிள்ளையாக இருக்க முடியாதப்பா!
ராக்கெட்டைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளில் ஒரு முக்கிய கட்டத்தில் சில கனெக்ஷன்களைப் பிரபாகர் குளறுபடி செய்திருப்பதை அறியாத சந்திரசேகர் பித்தானை அழுத்தத் தயாரானார்.
டென், நைன், எயிட், ...த்ரீ, டூ, ஒன்......
பூஜ்யம் என்றதும் சந்திரசேகர் பித்தானை அழுத்த ராக்கெட் நெருப்பைக் கக்கியபடி மேலே எழும்பி பறந்து......
அடுத்த கணம்....!
ராக்கெட்டைச் செலுத்தும் விசைகள் அடங்கிய 'கண்ட்ரோல்' அறையில் இருந்த அனைவரும் சிலையானார்கள், சற்று நேரத்துக்கு - பேசும் சக்தியை டாக்டர் சந்திரசேகர் முதலியோர் இழந்தனர்.


கோபி, இந்த அவமானம் எனக்கு எப்படி நேர்ந்தது? உலகமே சிரிக்குமே! உன்னை முழுக்க முழுக்க நம்பிய என்னைக் கைவிட்டு விட்டாயே!
அன்று மாலை....
சார்! என்ன எழுதுகிறீர்கள்?
எனது ராஜினாமாக் கடிதம். அதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை.
அக்கிரமம் நடந்தால் அதை எதிர்த்துப் போராட வேண்டுமே ஒழிய ஒதுங்கி விடுவதில் பலன் என்ன?
அக்கிரமமா? உன்னுடைய அறியாமை என்று சொல்லு!
இல்லை சார்! இதோ பாருங்கள், என் ஃபைலில் கம்ப்யூட்டர் கொடுத்த முடிவுகள் நீக்கப்பட்டு அதற்குப் பதில் வேறு தாள்கள் வைக்கப்பட்டுள்ளன.
இதற்கு அத்தாட்சி? கம்ப்யூட்டரைச் சரியாக நீ இயக்காது போனால் அது தவறான தகவல்களைத்தானே தரும்!
அப்படி மாறி இருப்பது தெரியாமல் நான் அந்தத் தகவல்களை வைத்தே ஆராய்ச்சியைத் தொடர்ந்திருக்கிறேன்.
என்னை நீங்கள் தான் நம்ப வேண்டும். எதையும் என்னால் நிரூபிக்க முடியாது. மேலும்..
தொடரும்...

பின்னியின் பலவித பருத்தி ஸூட்டிங் ரகங்களில் குளுமையும் இயல்பான எழிலும் இணைந்துள்ளன.

டிசைன் வண்ணங்கள் எல்லாம் உங்கள் மனதிற்கு பிடித்தமாதிரி கிடைக்கின்றன.

விலைகளும் அவரவர் வசதிக்கேற்ப உள்ளதெனச் சொல்லத் தேவையில்லை

பின்னி பருத்தி ஸூட்டிங்குகள்



தேர்ந்தெடுக்க:
அம்பாஸிடர் A.7781, U 7791
கான்ஸல் . டபின் ஜீரோ
கே கார்டன் . ஹனுவா . பாம்கோர்ட்
பெடிக்ரீ . பிளெயின்ஸ்மன்
Q 551 . ராயலிஸ்ட்


AUTHORISED STOCKIST OF BINNY FABRICS

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் உள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து வாங்குங்கள்.

பின்னி-துணி உலகிலே புகழ் பெற்ற பெயர்

BY-4974






1. செகந்திராபாத்தில் ஸ்ரீ ராமநவமி கலை விழாவை ஆந்திர கவர்னர் ஸ்ரீ கந்துபாய் தேசாய் தொடங்கி வைத்தார். ஸ்ரீ திருவாழி ராமானுஜ அய்யங்காரது ராமாயண உபன்யாசங்கள் மக்களைக் கவர்ந்தன. ஆரம்ப விழாவில் உபதலைவர் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

2. இந்து தர்ம மன்றம் சார்பில் நடத்தப்பட்ட திருப்பாவை — திருவெம்பாவை போட்டியில் காஞ்சி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் அவர்களால் அளிக்கப்பட்ட தங்கப் பதக்கத்தை வன்னியர் சங்கப் பாடசாலைத் தலைமை ஆசிரியையிடம் அளிக்கிறார் திரு ம. பொ. சி. அவர்கள்.

செய்திப் படங்கள்



3. மயிலாப்பூர் சீனிவாச சாஸ்திரி ஹாலில் தமிழ்நாடு பெற்றோர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சம்ஸ்கிருத மகாநாட்டில் டாக்டர் பி. வி. ராஜமன்னார் உரையாற்றுகிறார்.

4. சமீபத்தில் பாக் ஜலசந்தியை நீந்திக் கடந்து வெற்றி பெற்ற திரு வைத்தியநாதத்தை மக்கள் பாராட்டிக் கௌரவிக்கிறார்கள்.



5. சென்னை புரசைவாக்கம் லேடி எம். ஸிடி.எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளியின் வெள்ளி விழா தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு செ. மாதவன் அவர்கள் தலைமையில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. 25 வீணைகளும், 25 குத்துவிளக்குகளும் காதுக்கும் கண்ணுக்கும் விருந்து அளித்தன. மாணவிகளால் நடத்தப்பட்ட ''வள்ளித் திருமணம்'' நாடகமும், கரக ஆட்டமும், பின்னல் கோலாட்ட நடனமும் சிறப்பு அம்சங்களாக அமைந்தன.



முன் கதை

நடராஜ முதலியாரின் மகன் ரங்கராஜன். அவன் சகோதரி சுந்தரி திருச்சியில் வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். அவளுக்குத் தலைச்சன் குழந்தை ரூபி.

அருணாசல முதலியார், நடராஜ முதலியாரின் சகோதரர். சாத்தூர் அருகே கிராமத்தில் நிலபுலன்களைப் பார்த்துக் கொள்பவர் அருணாசல முதலியாரே. மதுரைக்கு நடராஜ முதலியார் குடும்பத்தைப் பார்க்க அடிக்கடி வந்து போவார். அவர் மகள் தங்கம், சுந்தரிக்குச் சளையில்லாத அழகி. இன்னும் கல்யாணமாகவில்லை.

மதுரை சித்திரைத் திருவிழாவுக்கு வந்திருந்த சகோதரிகள் இருவரும் ரங்கராஜனைக் கேலி செய்கிறார்கள், அவனது கல்யாணப் பேச்சை எடுத்து. அதற்கேற்றாற்போல் மதுரை அரசடி விநாயகர் கோவில் தெருவில் உள்ள விஜயா, கலா என்னும் இரு பெண்கள் ரங்கராஜனின் கவனத்தை ஈர்க்கிறார்கள். விஜயாவோ அவன் அழகில் தன் மனத்தைப் பறி கொடுக்கிறாள்.

ரங்கராஜனின் தாயார் ஜானகி நல்ல அழகி. குணக்குன்று. அவள் அழகை ஆண்டவன் அருளால் அப்படியே வடித்துக் கொண்டிருந்த ரங்கராஜன் குணத்திலும் அவளுக்கு இணையாக விளங்க ஆசைப்பட்டான். இதைப் பார்த்தும் எண்ணியும் சகோதரி தங்கம் மட்டுமல்ல; அதே தெருவில் வசித்து வந்த விஜயாவும் மனம் பூரிக்கிறாள்.

இதே சமயம் பினாங்கிலிருந்து வந்த சுப்பையா காடு கழனிகள் வாங்கிப் போட நினைப்பதாகவும், சாத்தூர் அருகே உள்ள பூர்வீக சொத்தான நிலங்களை விற்றால் என்ன என்றும் கேட்கிறார் அருணாசல முதலியார் நடராஜ முதலியாரை. அவர் ரங்கராஜனை யோசனை கேட்கச் சொல்கிறார்.

தீராத விளையாட்டு

கு. அழகிரிசாமி

நடராஜ முதலியார் மகனோடு பேசுவதில்லை. காரணம், ஒரு மாதிரியான கூச்சம். தோளுக்கு மேல் வளர்ந்த பிறகு அவனோடு தனி இடத்தில் இருக்கவே அவர் சங்கோசப்பட்டார். அவனோடு பேச வேண்டியதை மனைவியிடம் சொல்லி, அப்புறம் அவள் மூலமே அவனுடைய பதிலைத் தெரிந்து கொள்வார்.

அருணாசல முதலியார் அவனைப் பார்த்து, ''நீ என்ன சொல்லறே?'' என்று கேட்டார்.

''நான் என்ன சொல்லறது? எனக்கு என்ன தெரியும்? நான் ஊரைப் பார்த்தே பத்து வருஷமாச்சு. நீங்க தான் சொல்லணும்'' என்றான் அவன்.

''நான் இனிமேல் என்ன சொல்றது? எனக்குப் பிடிக்காத சங்கதின்னா, அங்கேயே முடியாதுன்னு சொல்லிச் சுப்பையாப் பயலே எந்திரிச்சுப் போடான்னு விரட்டி யிருப்பேனே.''

''அப்படின்னா நீங்க நினைக்கிறபடியே செய்யுங்கோ.''

''அது எப்படி? சொத்துக்குடையவன் நீ. நாளைக்கு ஆண்டு அனுபவிக்கப் போறவன் நீயா? நானா?''

''இன்னிக்கு வித்துட்டா, நாளைக்கு எதை ஆண்டுஅநுபவிக்கிறது?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தான்.

''நீ என்ன சிரிக்கிறே? உள்ளதைச் சொல்லிக் கேட்கிறேன். சிரிக்கிறது எதுக்கு?'' என்றார் அருணாசல முதலியார்.

அந்தச் சமயத்தில் சுந்தரியும் தங்கமும் அங்கே வந்தார்கள்.

''பேத்தியை இப்படிக் கொண்டா'' என்று சொல்லி, சுந்தரியின் கையிலிருந்து அருணாசல முதலியார் ரூபியை வாங்கிக் கொண்டார்.

''பார்த்தியாம்மா, உன் மாமன் சிரிக்கிற சிரிப்பை! எல்லாம் அவனுக்கு வேடிக்கையாயிருக்கு. காலா காலத்திலே ஒரு கால் கட்டைப் போட்டிருந்தால் இப்படிச் சிரிப்பானான்னு கேட்டேன்'' என்று ரூபியைப் பார்த்து அவர் பேசினார்.

''அது உங்க தப்புத் தானே அப்பா! ராஜாவா பெண்ணைத் தேடிப் போவானா?'' என்று கேட்டாள் தங்கம்.

''தங்கம்!... தங்கம்!'' என்று உரத்த குரலில் அவர் ஓர் அதட்டுப் போட்டார்.

என்னவோ ஏதோ என்று ரங்கராஜனே பயந்து விட்டான். சுந்தரி விழித்த கண் விழித்தவாக்கில் நின்றாள்.

தங்கம் பதறிப்போய், ''என்னப்பா?'' என்று கேட்டாள்.

''என்னப்பாவாவது, பொன்னப்பாவாவது! இப்படிப் பேசக் கூடாதுன்னு அன்னிக்குத் தானே சொல்லிட்டுப் போனேன். ரொம்பக் காலம் கண்ட கிழவி மாதிரி சின்னவன் பெரியவன் பார்க்காமல் பேசறயே! இப்படிப் பேசப்படாது! தெரிஞ்சுக்கோ.''

அருணாசல முதலியார் மகளைக் கடுமையாகக் கோபித்ததும், அதட்டியதும் இதற்குத்தானா என்று தெரிந்ததும் ரங்கராஜனும் சுந்தரியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். தங்கமும் சேர்ந்து சிரித்தாள்.

இது அருணாசல முதலியாரின் ஆத்திரத்தை இன்னும் அதிகமாகக் கிளறி விட்டது. சட்டென்று எழுந்து மாடியில் இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரையில் நடந்து ஆத்திரத்தையும் அப்படியே உதறிவிட்டுத் திரும்பி வந்து உட்கார்ந்தார்.

''சித்தப்பா ! அம்மாகிட்டே கேட்போம். அப்புறம் ஒரு முடிவு செய்யலாம்'' என்றான் ரங்கராஜன்.


''அப்படித்தான் முடிவு ஆகும். உன்னைக் கேட்டு என்ன ஆகும்? உன்னைக் கேட்டால் கேட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான். நான் ஒண்ணைக் கேட்டால் நீ ஒண்ணைச் சொல்லுவே. இல்லேன்னா கையைத் தட்டிக்கிட்டுச் சிரிப்பே ! உனக்கும் தங்கத்துக்கும் எப்போதான் வயது ஆகுமோ, தெரியல்லே. பொறந்தீங்களே அப்பா, இப்படி ஒரே அச்சிலே வார்த்தெடுத்தாப்போலே'' என்று அருணாசல முதலியார் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பயம் தெளிந்த தங்கம் அப்பாவை மறுத்துப் பேசினாள் :

''அப்பா! ராஜாவும் நானும் ஒரே அச்சிலே வார்த்தெடுத்தாப்போலவேயா இருக்கிறோம்! பௌர்ணமியும் அம்மாசியும் ஒண்ணுன்னு நீங்க பேசறீங்களே!'' என்றாள்.

இதைக் கேட்டு ஒவ்வொருவர் உள்ளமும் மகிழ்ச்சியில் மிதந்தது.

தங்கத்தின் பாராட்டைப் புகழ்வதா, ரங்கராஜனின் பாக்கியத்தைப் புகழ்வதா என்று தெரியவில்லை.

மேற்கொண்டு சிறிது நேரம் பேச்சு நடந்தது. சம்பந்தா சம்பந்தமில்லாமல் பல விஷயங்களைக் குறித்து ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவிப் போய்க் கொண்டிருந்தன சம்பாஷணைகள்.



ரங்கராஜனுக்கு அந்த வருஷமே கல்யாணத்தை நடத்திவிடத் தாம் தீர்மானித்திருப்பதாக அருணாசல முதலியார் பல பேச்சுக்களிடையே தங்கத்துக்குப் பதில் சொன்னதும், பூர்வீக சொத்துக்களை அவசரப்பட்டு விற்று விடக்கூடாது என்று ரங்கராஜன் அவரை நோக்கிச் சொன்னதும்தான் அவர்கள் தூங்கப் போவதற்குள் பேசிய பேச்சுக்களில் முக்கியத்துவம் கொண்டவையாகும்.

அத்தியாயம் 6

சாத்தூருக்கு மேற்கே சிவகாசியை நோக்கிச் செல்லும் சாலைக்குத் தெற்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில் உள்ள சன்னாசிப் புதூர் சரித்திர முக்கியத்துவம் எதுவும் பெறாத ஊர் என்பது மட்டுமல்ல, நாட்டின் இன்றைய வாழ்விலும் கூட எவ்விதச் சிறப்பும் பெறாமல் இருக்கும் ஒரு குக்கிராமம். அந்த ஊரைச் சுற்றிலும் கரிசல் நிலங்கள். விஜயநகர அரசர்களின் பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களுடைய ஆட்சிக் காலத்தில் தான் தமிழகத்தின் கரிசல் மண் பூமியில் ஊர்கள் தோன்றி, மனித வாழ்க்கையும் தொடங்கியது என்று சொல்ல வேண்டும். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னல் தோன்றிய அப்படிப்பட்ட கரிசல் காட்டுக் கிராமங்களிலும், இந்தச் சன்னாசிப் புதூர் பிற்பட்ட காலத்தில் தோன்றிய ஓர் ஊராகவே இருக்க வேண்டும்.


யாரோ ஒரு சந்நியாசி அந்த வழியே நடந்து போனானும். எப்பொழுது? 'எப்பவோ நடந்து போனனும்!' என்று தான் கிராமத்து ஜனங்கள் சொல்வார்கள். சந்நியாசி நடந்துபோகும் போது ஒரு பாறையில் சிவலிங்கம் முளைத்திருப்பதைப் பார்த்தானும். பிரயாணத்தைத் தொடராமல் அங்கேயே தங்கி லிங்கத்துக்கு ஒரு கோவிலும் கட்டி வழிபட்டானும். அதன்பிறகு அங்கே ஓர் ஊரே உண்டாகிவிட்டதாம். ஊருக்கும் சந்நியாசிப் புதூர் என்று பெயர் வைத்து விட்டார்களாம். மக்களின் பேச்சு வழக்கில் சன்னாசிப் புதூர் என்று மருவி வழங்கும் அந்த ஊரில் இப்போது உள்ள நூற்றிருபது வீடுகளில் முப்பதுக்கு மேற்பட்ட வீடுகள் மனித வாசமின்றி, பராமரிப்பாரும் இன்றிப் பாழாகி விட்டன. இன்னும் ஒரு முப்பது வீடுகள் எந்தச் சமயத்திலும் காலியாகக் கூடிய நிலை. அவற்றில் வசித்தவர்கள் அடுத்த ரயிலுக்குக் காத்திருப்பது போல் ஊரை விட்டுக் குடிகிளம்பக் காத்திருந்தார்கள்.

''இப்போ என்ன நிலைமை தெரியுமோ? ரயில் டிக்கட்டுக்குக் காசு உள்ளவன் எல்லாம் ஊரைவிட்டு ஓடி விட்டான். காசில்லாதவன் எல்லாம் ஓடாமல் இருந்துக்கிட்டிருக்கிறான். அவ்வளவுதான் சங்கதி!'' என்று ஹாஸ்ய உணர்ச்சியோடு சொன்னார் அருணாசல முதலியார்.

அவர் சொன்ன வார்த்தைகளில் ரங்கராஜன் ஹாஸ்யத்தைக் காணவில்லை; துயரக் கதையைக் கேட்பது போலவே அவனுக்குத் தோன்றியது.

பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவன் அந்தக் கிராமத்துக்குத் தன் சித்தப்பாவுடன் வந்திருக்கிறான். தன் தந்தையும், தன் மூதாதையரும் வாழ்ந்த அந்த ஊரை இவ்வளவு காலத்துக்குப் பிறகு தூரத்தில் இருந்து பார்க்கும்போதே சிலிர்ப்பும் பரவசமும் ஏற்பட்டன. அந்தப் பகுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் குளத்

''ராட்சஸ வண்டி''




அப்பப்பா! எத்தனை சக்கரங்கள்! ஒன்று, இரண்டு, மூன்று ...... பதின்மூன்று, பதினறு வரிசைகள்! ஒரு வரிசைக்கு நாலு சக்கரங்கள் வீதம் 56 சக்கரங்கள் கொண்ட இந்த டிரெய்லரில் பத்துப் பதினைந்து யானைகளை ஏற்றிப் போகலாம்போல் இருக்கிறதே! இவ்வண்டி பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்டது. கனரகத் தொழிலகங்களுக்காகக் கப்பல்களில் வந்து சேரும் கனமிக்க பொருட்களைக் கொண்டுசெல்லப் பயன்படுகிறது. 328 மெட்ரிக் டன்கள் எடையைச் சர்வசாதாரணமாக இழுத்துச் செல்லும். 'சூபர் ட்ரெய்லர்' என இதனை அழைக்கிறார்கள்.

பிரான்ஸ் தொழிலதிபர்கள் இவ்வண்டியின் உற்பத்திக்குப் பின் கூறிய வார்த்தைகள்: ''நாங்கள் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது! இந்த சூப்பர் டிரெய்லர் ஓர் ஆரம்பக் கட்டம்தான்!''

தகவல்: ஹரம்லா வெங்கடேசன்
ஆதாரம்: பிரஞ்சு டெக்னிக்கல் புல்லட்டின்

உறுதிமிக்கது...
துல்யமான
வேலைப்பாடுடையது...
சிறந்த முறையில்
உருவானது...





ஹெர்குலிஸ்

உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது

ஹெர்குலிஸ் 135 நாடுகளில் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவது. இந்தியாவில் ஏராளமாக விற்பனையாகும் சைக்கிள். உலகின் மாபெரும் சைக்கிள் தயாரிப்பாளர்களான டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட், யு.கே. நிறுவனத்தின் நவீன தொழில் நுட்ப முறையைப் பின்பற்றி தென் கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய, வசதிமிக்க சைக்கிள் தொழிற்சாலையில் அதி நுட்பமாக தயாரிக்கப்பட்டது.

சைக்கிள் ஒரு சிறந்த முதலீடு. ஹெர்குலிஸைத் தேர்ந்தெடுங்கள். அது மிதமான விலையில் கிடைக்கும் உன்னதமான சைக்கிள்.

TI ஹெர்குலிஸ்®

வெறும் சைக்கிள் மட்டுமன்று —
வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை

இந்தியாவில் தயாரிப்போர்:
டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப்
இந்தியா லிமிடெட், சென்னை 1 பதிவுபெற்று உபயோகிப்போர்.
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே
அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்

TIC/H/4832

யோ குட்டையையோ சூழ்ந்திருக்கும் மரக் கூட்டம் இரண்டு மைல்களுக்கு அப்பாலிருந்து பார்க்கும் போதே தென்படும். ''இது இந்த ஊர்த் தோப்பு; அது அந்த ஊர்த் தோப்பு'' என்று ஒவ்வொரு கிராமத்தையும் சுட்டிக் காட்டுவார்கள். ரங்கராஜன் சன்னுசிப்புதூர்த் தோப்பைப் பார்த்ததும், சிதம்பரம் கோபுரத்தைப் பார்த்து மெய்சிலிர்த்த நந்தனைப்போல் ஆகிவிட்டான்.

சாத்தூர் — சிவகாசிச் சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கிராமப் பாதையில்—அகலமான வண்டிப் பாதை — ஒவ்வொரு மரத்தையும், ஒவ்வொரு செடியையும், ஆங்காங்கே குத்துக் குத்தாக வளர்ந்துள்ள புல்பூண்டுகளையும் பார்த்து, 'இது என்ன செடி?' 'அந்தச் செடியின் பெயர் என்ன?' என்றெல்லாம் கேட்டுக் கொண்டே நடந்தான் ரங்கராஜன்.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் பதின்மூன்று வயதுப் பையனாக ஒரு கல்யாணத்துக்காகப் பெற்றோர்களுடனும் சுந்தரியுடனும் வந்த ரங்கராஜன் அந்தப் பட்டிக்காட்டில் ஒரு நாள் தங்கியிருக்கக்கூடக் கஷ்டப்பட்டான். இப்போது, இந்த இருபத்தைந்து வயது வாலிபத்தில், பிறந்த நாளிலிருந்து கால் நூற்றாண்டுக் காலம் நகரவாசம் செய்திருந்தும்கூட, கிராமத்தினிடம் அளவிறந்த பற்றும் பாசமும் கொண்டு ஒவ்வொன்றையும் விசாரித்துக் கொண்டிருந்தான். அதற்கு முக்கிய காரணம், அவனுடைய பெற்றோர் திருமணம் செய்து கொண்ட ஊர் அது. 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த' ஊர் இந்த ஊர்தான் என்று நினைக்கும்போதெல்லாம் ஒரு புண்ணிய ஸ்தலத்துக்கு யாத்திரை வருவது போலவே அவனுக்குத் தோன்றியது.

'' ராஜா ! ஒண்ணும் யோசனை பண்ணாதே. இது ஒரு நல்ல சமயம். இப்போ விக்கலேன்னா, இந்த விலையைப் பின்னாலே ஒருத்தன் குடுக்க மாட்டான். இந்தச் சப்பையாப் பயல் மாதிரி ரூபா நோட்டைப் பறக்க விடுறதுக்கு இனி ஒருத்தன் இந்த ஊரிலே பிறப்பான்னு நான் நினைக்கல்லே. அதனாலே....''

''சித்தப்பா ! ஊருக்குப் போய் யோசிப்போம். எனக்கு என்னவோ, இந்த ஊரை அடியோட விட்டுட்டுப் போறது, பெத்த தாயை விட்டுட்டுப் போறமாதிரி இருக்கு !''

''சரியாய்ப் போச்சு போ ! இந்தக் குபேரப் பட்டணத்திலே அப்படி என்ன புதையல் இருக்கு? நீ இங்கே வந்தால் ஒரு நாள் இருக்க மாட்டே! ஊரிலே பாதிப் பேருக்கு மேலே அரைப் பட்டினிக் காரங்க. அஞ்சைக் குடு, பத்தைக் குடுன்னு பிடுங்கித் தின்னுடுவாங்க. அதுக்குப் பயந்தே, இந்த ஊரிலே உள்ள ரெண்டொரு பணக்காரங்க, வருசத்திலே பாதி நாள் சாத்தூரிலேயே சுத்திக்கிட்டிருக்கிறாங்க, தெரியுமா ?''

ரங்கராஜனுக்கு அந்த ஊருக்கு வந்து வாழ வேண்டும் என்ற நோக்கம் எப்பொழுதுமே இருந்தது கிடையாது. ஆனால், குடும்பத்தின் முன்னோர் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த ஊரில் சகல ஒட்டுப் பற்றுக்களும் இல்லாமல் செய்து, ஊரையே மறந்து விடுவதற்கு அவன் மனம் ஒப்பவில்லை. அப்படி ஒப்ப முடியாமல் இருப்பதற்குப் பலமான காரணமும் அவனால் சொல்ல முடியவில்லை.

வண்டிப் பாதையில் நடந்து செல்லும்போதே வலது புறம் திரும்பி சந்நியாசி கட்டிய சிவன்கோயிலையும் அதை ஒட்டி இருந்த ஒரு பெரிய ஆலமரத்தையும் பார்த்தான். அப்பொழுது அந்தக் கோவில் தோன்றிய வரலாற்றை ரத்தினச் சுருக்கமாக அவனுக்குச் சொன்னார் முதலியார்.

ஒரே ஓர் அறையுடன் கட்டப்பட்ட அந்தச் சிறு கோவிலின் சுவரைக்கூட இந்தப் பரந்த உலகத்தில் விட்டு வைக்காமல், அரசியல் கட்சிக் கோஷங்களும், வோட்டு விண்ணப்பங்களும் கரித் துண்டினால் தப்பும் தவறுமாக எழுதப்பட்டிருந்ததுடன், சினிமாப் போஸ்டர்கள் இரண்டும் காட்சி தந்தன.

''சிவகாசி விஜயலட்சுமியில்....'' ஒரு தமிழ்ப் படம் தினமும் மூன்று காட்சிகள் நடைபெறுவதை அறிவித்த அந்தப் போஸ்டரைப் பார்த்த ரங்கராஜனுக்கு, 'விஜயலட்சுமி' என்ற தியேட்டரின் பெயர், மதுரையில் தினம் தினமும் வாசலில் வந்து நின்று தன்னைப் பார்த்து, கண்களாலேயே



''நேற்று எங்கள் வீட்டிலே ஒரு திருடன் நுழைந்து ஒரு தவலையைத் திருடிண்டு போய்விட்டான் சார்!''

''அடப் பாவமே!''

''அதோடு போயிருந்தால் பரவாயில்லையே....''

''ஏன், வேறு ஏதாவது திருட்டுப் போய்விட்டதா?''

''தவலை நிறையத் தண்ணீர் வேறு இருந்தது சார்!''

அனவரதமும் தன்னை வழியனுப்பவும் வரவேற்கவுமாக இருக்கும் விஜயாவை நினைவுக்குக் கொண்டு வந்தது. அப்போது தனக்குள்ளேயே, ''இது போன்ற ஓர் இடத்துக்கு அவளை அழைத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும்; நான் சித்தப்பாவை அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன்! இவருக்கு ரூபாய் கணக்கைத் தவிர வேறு என்ன தெரியும்? கற்பனை கவர்ச்சி, கனவு — இவையெல்லாம் இவர் அகராதியிலேயே கிடையாது!'' என்று சொல்லிக் கொண்டான்.

கோவில் சுவரைப் போஸ்டர் ஒட்டியும் கோஷங்கள் எழுதியும் அசிங்கப் படுத்திய விகாரத்தை, 'விஜயலட்சுமி' என்ற சொல் மறைத்துவிட்டது.

ஊரின் மேற்குத் தெருவில் உள்ள வீட்டை நோக்கி இந்த இருவரும் நடந்து போகும் போது தெருவில் நின்றவர்களெல்லாம் திரும்பிப் பார்த்தார்கள். முதலியாரைப் பார்த்து வணங்கி, 'வாருங்கள்' என்று முகமன் சொன்னார்கள். ஏழெட்டு வயதுள்ள குழந்தைகள் — ஆணும் பெண்ணுமாகப் பின்தொடர்ந்து வந்தார்கள்.

அருணாசல முதலியாருக்கும் ரங்கராஜனுடைய தகப்பனாருக்கும் பொதுவான பழைய வீடு தெற்குத் தெருவில் இருந்தது. அந்த வீட்டின் ஒரு பகுதியில் இப்போது அவர்களுடைய தூரத்து உறவினரான ஒருவர் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார். மற்றும் இரு பகுதிகள் ஒரு கிராம சேவகிக்கும், ஒரு வாத்தியாரம்மாளுக்கும் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. அந்த வீட்டை அடுத்துள்ள நாலைந்து வீடுகளும் அவர்களுடைய உறவினர் வீடுகளே. இரண்டொருவர் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்து வந்தார்கள். அதில் ஒருவருடைய வீட்டுக்கே இருவரும் சென்றார்கள்.

''அத்தான் வாருங்க! இது யாரு? பெரிய அத்தான் மகனா? ராசா வந்தாயா? ஐயா வா, ஐயா வா'' என்று அருமை பெருமையோடு உபசரித்தார் அந்த வீட்டுக்காரர்.

இரவில் சொத்துக்களை விற்பது குறித்துப் பேச வேண்டும். பிணுங்கு சுப்பையாவையும் அப்போது வரவழைக்க வேண்டும். அன்றிரவே பேசி முடித்து விட்டு, மறுநாள் சாத்தூருக்குத் திரும்ப வேண்டும். இதுதான் அருணாசல முதலியார் போட்டுக் கொண்டு போன திட்டம்.

ரங்கராஜனை ஒய்வெடுத்துக் கொள்ள ஒருவரும் விடவில்லை. உற்றார் உறவினரெல்லாம் அவனைப் பார்க்க ஓடிவந்தார்கள். ஒரு சிறு பள்ளிக்கூடத்தை நிரப்புவதற்குப் போதுமான குழந்தைகள் வந்து இமையா நாட்டம் பெற்றவர்களைப் போல் அவனைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள். ஒரு பாட்டியம்மாள் அவன் பக்கமாக வந்து, ''ஜானகி மகனே! என்னைத் தெரியுதாடா!'' என்று சொல்லி அவன் கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சி விட்டாள்.

அங்கு கூடியிருந்த அத்தனை பேரும் சிரித்து விட்டார்கள்!

''என்ன கழுதைகளா, சிரிக்கிறீங்க? இவன் தாயாரு என் மக மாதிரி. இவன் என் பேரப் பிள்ளை மாதிரி. இவனை எத்தனை நாள் நான் இடுப்பிலே தூக்கி வச்சிருந்திருக்கிறேன்!...'' என்று சொல்லி விட்டு அவனைப் பார்த்துத் திரும்பி, ''ஜானகி சௌக்கியமா இருக்கிறாளா?'' என்று கேட்பதற்குப் பதிலாக, ''ஜானகி, நல்லா இருக்கிறாளா பேரப் பிள்ளே? வயசிலே அப்படி இருந்தாள்.....'' என்றுதான் விசாரித்தாள்.

''இப்பவும் அப்படியேதான் இருக்கிறா, பாட்டி!'' என்று மகிழ்ச்சி ததும்பச் சொன்னான் ரங்கராஜன்.

கூட்டம் வெகுநேரம் ஆகியும் கலையவில்லை.

மாலை நான்கு மணிக்கெல்லாம் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவன் தலையில் முண்டாசும், இடுப்பில் முழங்கால் துணியுமாக ஓடி வந்தான். வந்ததும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே பாய்ந்தான். ''முதலாளி, வாங்க! முதலாளி வாங்க!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

''யாரு, மாடசாமியா? ஏய், மாடசாமி! நீ என்ன இவ்வளவு கிழவனாயிட்டே!'' என்று வேடிக்கையாகக் கேட்டார் அருணாசல முதலியார்.

'மாடசாமின்னு, எந்த மாடசாமி?' என்பது போல் திகைத்துச் சித்தப்பாவைத் திரும்பிப்பார்த்தான் ரங்கராஜன்.

''ராஜா! தெரியுதா இவனை? இவன் சின்னப் பையனாயிருந்ததிலேயிருந்து நம்ம வீட்டிலே வளர்ந்தவன். இவன்தான் அத்தனை மாடுகளையும் மேய்ச்சவன்.. இவன் கல்யாணத்துக்கு நம்ம வீட்டிலே இருந்துதான் நெல் போச்சு. உங்க அம்மா இவன் பொஞ்சாதிக்கு அருமையான பட்டுச் சேலை ஒண்ணைக் குடுத்து, பத்து ரூபாயும் கையிலே குடுத்தா....'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

மாடசாமியின் கண்கள் பொங்கிப் பிரவகித்தன.

ரங்கராஜனும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

''அந்த மகராசி நல்லா இருக்கிறாங்களா மொதலாளி?'' என்று சொல்லித் தனக்குத் தோன்றிய திசையில் திரும்பித் தலைக்கு மேல் கைகளை உயர்த்தித் தொழுதான் மாடசாமி.

''சௌக்கியமா இருக்கிறாங்க''என்று சொன்ன முதலியார், அவனுடைய க்ஷேம லாபங்களை விசாரித்தார். அப்போது அவன் அழாக் குறையாக, ''தொழுவத்தைப் பார்த்தாலே எனக்குக் கண்ணிலே தண்ணி வருது மொதலாளி! எத்தனை பசு! எத்தனை எருமை! எத்தனை கன்றுக்குட்டி! ஒரு மொத்தமா வித்துட்டுப் போயிட்டீங்களே! நான்அந்தத் தொழுவத்தின் பக்கம் இப்பப் போறதே கிடையாது. ஒவ்வொரு பசுவுக்கும், ஒவ்வொரு கன்றுக்குட்டிக்கும் அம்மா எப்படி எப்படியெல்லாம் பேர் வச்சிருந்தாங்க. ஒரு வெள்ளைக் காளைக்கன்னுக்குப் பலராமன்னு பேரு! எம் பிள்ளைக்கும் அந்தப் பேர் தான் வச்சிருக்கிறேன்...''

ரங்கராஜனுக்கு உணர்ச்சி பொங்கி விட்டது. பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான். தன் தாயாரின் குணநலன்களைக் கேட்கக் கேட்க ஏதோ ஓர் இதிகாசத் தலைவியின் தெய்விக குணங்களைப்பற்றிக் காதால் கேட்பதுபோன்ற உணர்ச்சியும், பக்தியும் ஏற்பட்டு, கண்கள் குளம் கட்டின. அவனைத் தடுத்து நிறுத்தி, ''மாடசாமி! மதுரைக்கு வாருங்களேன். நான் அழைச்சுக்கிட்டுப் போறேன்'' என்றான்.

''ஆமாப்பா! கூட்டிக்கிட்டுப் போய் ஊர்கோலம் பண்ணி அனுப்பு. இவனைப் போல் ஒருத்தனை மதுரையிலே யாரும் பார்த்திருக்க மாட்டாங்க!'' என்று வீட்டுக்கார முதலியாரின் மனைவி பரிகாசம் பண்ணினாள்.

''வரணும் மொதலாளி! வந்து, அந்த மகராசி கையாலே பச்சைத் தண்ணியாவது வாங்கிக் குடிச்சிட்டுத் தான் இந்த மாடசாமியின் உயிர் போகும்'' என்றான்.

''அடப் பாவி! சாகிறதுக்கா அங்கே போகணும் என்கிறே! அந்தச் செலவு வேறே வைக்கிறியா?'' என்றும் அந்த அம்மாள் வேடிக்கையாகச் சொன்னாள்.

எல்லோரும் அப்போது சிரித்தார்கள்.

ரங்கராஜனுக்கு அந்தப் பரிகாசம் பிடிக்கவில்லை. இப்படி உருக்கமான கட்டங்களில் பரிகாசம் பண்ணுவதே வழக்கமாகி விட்ட கிராமிய மரபு அவனுக்குத் தெரியாது.

கடைசியில் கூட்டம் ஒரு வழியாகக் கலைந்தது.

''ரங்கராஜன் விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.''

''ரங்கராஜன் தன் தாயாரையும் அழைத்துக் கொண்டு ஒரு முறை கிராமத்துக்கு வர வேண்டும்''

''ரங்கராஜன் ஒரு வாரமாவது ஊரில் தங்கித் தங்கள் வீட்டுக்கு ஒரு நேரமாவது சாப்பிட வரவேண்டும்.''

இந்த வேண்டுகோள்களுடன் உற்றார் உறவினர் விடைபெற்றுச் சென்றார்கள்.

மாடசாமியும் மறுநாள் வருவதாகச் சொல்லி விட்டுப் போனான்.

ஊரில் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தன் தாயாரின் நினைவு நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணானந்தத்தை அவன் அனுபவித்து அனுபவித்து மகிழ்ந்தான்.

'உங்க அம்மா மட்டும் தடுக்காமல் இருந்தாங்கன்னா, நான் தினம் தினம் அவங்க காலிலே பூப்போட்டுக் கும்பிடுவேன்' என்று தன்னிடம் விஜயா சொன்னதாகத் தங்கம் வந்து தெரிவித்தது அவனுக்கு ஞாபகம் வந்தது.

மதுரைக்குத் திரும்புவதற்குள் கோவிலில் ஒட்டியிருக்கும் அந்தச் சினிமா போஸ்டரை மற்றொரு முறை பார்க்க வேண்டும்; அதில் எழுதியிருப்பதையெல்லாம் மனப்பாடம் பண்ணி என்றாவது ஒரு நாள் விஜயாவிடம் சொல்ல வேண்டும். — இவ்வாறு ரங்கராஜனுக்கு ஓர் ஆசையும் உண்டாயிற்று. (தொடரும்)

ஏட்டிக்குப் போட்டி




கொரியா சமாதானக் கமிஷன் பேச்சு வார்த்தைகள் நடத்த அண்மையில் கூடிய போது எதிரும் புதிருமாய் அமர்ந்திருந்த அமெரிக்க, வடகொரியப் பிரதிநிதிகள் நாலு மணிநேரம் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தார்களாம்.

''அடடா! மனைவியுடன் சண்டை போடுவதை விட சமாதானமாகப் போய் விடுவது மேல் என்பது இப்போதல்லவா புரிகிறது!'' என்கிறார் ஒரு திருகல்தர்.

புனித இதயம் கண்டேன்

''1907—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் முதன் முதலாக காந்திஜியைச் சந்தித்தேன். அவரைப் பற்றிப் பல வதந்திகள் உலாவின. சாத்விக எதிர்ப்பு இயக்கம் பிரபலமடைந்திருந்தது. பலரும் காந்தியைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். தென்னுப்பிரிக்காவுக்கு நான் புதிதல்ல; ஆனால் ஜோஹன்ஸ்பர்க்குக்கு நான் புதிது. பகல் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நண்பர் ஒருவர் ஆசியர்கள் பிரச்னைகள் பற்றிக் குறிப்பிட்டார். இந்தியர்களைப் பற்றி அவர் சொன்னது, நாங்கள் கேள்விப்பட்டிருந்ததைவிட மாறுபாடாக இருந்தது. ஆகவே இந்தியர்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேட்டி காண விரும்பினேன். ரிஸாக்—ஆண்டர்ஸன் தெருக்கள் சந்திக்கும் முனையில் அக்காரியாலயம் இருந்தது. அக்காரியாலயத்தில் எவ்விதப் படாடோபமும் இல்லை. தெருக் கதவை அந்த வழக்கறிஞரின் பெயர்ப் பலகை அலங்கரித்தது. முதல் அறையில் ஒரு பெண் டைப்பிஸ்ட் அமர்ந்திருந்தாள். அதற்கடுத்த அறைதான் அவரது அலுவலக அறை. அந்த அறையின் சுவரில் சில படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அன்னி பெஸன்ட் அம்மையார், நீதிபதி ரானடே, மற்றும் சில இந்தியத் தலைவர்களின் படங்களும் மாட்டப்பட்டிருந்தன. அவைகளுடன் ஏசு கிறிஸ்துவின் அழகிய படம் ஒன்றும் அவ்வறையை அலங்கரித்தது. சில நாற்காலிகளும், சட்டப் புத்தகங்கள் கொண்ட ஷெல்புகளும் இருந்தன.



இவைகளை நான் பிறகுதான் கவனித்தேன். என்னை வரவேற்ற அந்த மனிதரிடத்தில்தான் என் முழு கவனமும் சென்றது. நான் இந்தியாவுக்குப் போயிருக்கிறேன். தென்னுப்பிரிக்காவில் மிகவும் பிரபலமடைந்த அந்த மனிதர் கம்பீரமாகவும் உயரமாகவும் இருப்பார் என்று எதிர்பார்த்தேன். ரொம்ப அகம்பாவத் தோற்றமுடையவராகக் காட்சியளிப்பார் என்றும் எண்ணியிருந்தேன். ஆனால் ஒல்லியாக இருந்த அச் சிறிய மனிதரைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். அவர் மிகவும் அக்கறையாக என்னைக் கூர்ந்து பார்த்தார். அவர் கறுப்பாக இருந்தார். அவரது கண்களும் கறுப்பாக இருந்தன. அவரது புன்னகை ஒளி வீசியது. அவரது அச்சமற்ற பார்வை என்னை ஆட்கொண்டு விட்டது. அவருக்கு அப்பொழுது சுமார் முப்பத்தெட்டு வயது இருக்கலாம். அதுதான் அவரது வயது என்றும் அறிந்து கொண்டேன். கடுமையான உழைப்புக்கு அடையாளமாக அவரது கேசத்தில் அங்குமிங்கும் நரை கண்டிருந்தது. மிகவும் தெளிவாகவும் அழகாகவும் ஆங்கிலத்தில் பேசினார். அவர் சிறந்த பண்பாடு உடையவர்.

பூஜ்யர் டோக்

அவரது பேச்சில் உறுதியிருந்தது. நேர்மை வெளிப்படையாகத் தெரிந்தது. புனிதமான இதயத்தைக் காண முடிந்தது. நாங்கள் நண்பர்களாகப் பிரிந்தோம்.

அவரைப் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் என் மனக் கண் முன்பு இரண்டு காட்சிகள் தோற்றமளிக்கின்றன. கிரிமினல் கோர்ட்டில் வழக்கு விசாரணை நடைபெறுகிறது. கோர்ட்டுக்குள்ளேயும் வெளியிலேயும் ஆசிய மக்கள் ஏராளமாகக் கூடியிருக்கின்றனர். நீதிபதி உயரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். கீழே குதிரை லாடம் போன்ற மேஜையைச் சுற்றி வழக்கறிஞர்கள் வீற்றிருக்கின்றனர். கைதிக் கூண்டிலே காந்தி நிற்கிறார். ''மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு இரண்டு மாத சிறைத் தண்டனை'' என்று தீர்ப்பளிக்கிறார் நீதிபதி. விசாரணைக்குச் சற்று முன்பாக மசூதியில் கூடியிருந்த ஆசிய மக்களிடையே அவர் பேசினார்.


''யார் எது வேண்டுமானாலும் சொல்லட்டும். மத சுதந்திரத்துக்காகவே இப்போராட்டம் நடைபெறுகிறது என்று மறுபடியும் மறுபடியும் எப்பொழுதுமே திருப்பித் திருப்பிக் கூற விரும்புகிறேன். மதம் என்று நான் குறிப்பிடுவது ஏதோ ஒரு மதத்தையோ, நமக்குப் பழக்கமான மதத்தையோ நான் குறிப்பிடவில்லை. எல்லா மதங்களுக்கும் அடிப்படையான மதத்தை, ஆண்டவனை நேருக்கு நேர் சந்திக்க வழிகாட்டும் மதத்தையேதான் நான் குறிப்பிடுகிறேன். நீங்களாகவே எடுத்துக் கொண்ட விரதத்தை மீறினாலும், டிரான்ஸ்வால் நகரில் சௌகரியத்தோடு வாழ்வதற்கு உறுதி மொழிகளைப் புறக்கணித்தாலும், நீங்கள் மனிதத் தன்மையை இழப்பதோடு, ஆண்டவனையும் புறக்கணித்தவர்களாக ஆவீர்கள். இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தைகளை நினைவுபடுத்த விரும்புகிறேன். ''கடவுளைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் இவ்வுலகைப் புறக்கணிக்க வேண்டும் என்கிறார் அவர். எனது தேச மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன், ''உலகைப் புறக்கணியுங்கள் — குழந்தை தனது தாயாரை இறுக்கிப் பிடித்துக் கொள்வதைப் போல், ஆண்டவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று — இவை அச்சமற்ற தைரியமுள்ள வார்த்தைகள் அன்றோ !

மற்றொரு காட்சி; என் மனக் கண் முன்னால் மிகத் தெளிவாகத் தெரிகிறது. மிருக வெறி கொண்ட பட்டாணியர்கள் காந்திஜியைக் கீழே பிடித்துத் தள்ளித் தாக்குகிறார்கள். அவர் மூர்ச்சையடைந்து விட்டார். அருகேயிருந்த அவரது அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். மயக்கம் சற்றுத் தெளிகிறது. அப்பொழுது நான் அங்கு சென்று விட்டேன். டாக்டர் காயங்களைச் சுத்தம் செய்து மருந்து போட்டுக் கொண்டிருக்கிறார். போலீஸ் அதிகாரிகள் அருகே நின்று கொண்டிருக்கிறார்கள். தன்னைக் கொல்லத் துணிந்த அந்தப் பட்டாணியர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று போலீஸ் அதிகாரிகளிடம் கூறினார். 'தங்களுக்குச் சரி என்று புலப்பட்டதை அவர்கள் செய்தார்கள். அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்' என்று காந்திஜி சொன்னார். இவ்விரு காட்சிகளையும் என்றைக்கும் என்னால் மறக்கவே முடியாது. எத்தன்மை வாய்ந்தவர் இம்மனிதர் என்பதை இந்நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன. மற்றெல்லா மனிதர்களையும்விட உயர்ந்ததோர் கட்டத்தில் அவர் வாழ்கிறார்.

✲

திரு வி. ஆர். ராதாகிருஷ்ணன் தொகுத்துள்ள 'அன்னியர் கண்ட காந்திஜி' என்னும் நூலில் பல அன்னியர்கள் காந்திஜியைப் பற்றி அருமையான கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். அவற்றில் ஒன்றைத்தான் மேலே தந்துள்ளோம். மற்றவற்றையும் படிக்க இதோ முகவரி:

கிடைக்குமிடம்: 'புக்ஸெண்டர்', மவுண்ட்ரோட், சென்னை-2; விலை ரூ. 2-00.



நான் குற்றவாளியே!

எம். எஸ். கல்யாண சுந்தரம்

நான் ஆபீஸிலிருந்து வந்து அப்பொழுது தான் சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தேன். பக்கத்து வீட்டு வாசற்புறத்திலிருந்து ''நில்! நம்பிக்கைத் துரோகி நாயே! வாசற்படியை மிதிக்காதே!'' என்ற கோப முழக்கம் கேட்டது.

வீட்டின் சொந்தக்காரர் மோகன்லால், மாடி அறையில் குடியிருக்கும் சுப்பராமன் மேல் ஆவேசத்துடன் பாய்ந்து கொண்டிருந்தார். எனக்குத் தலைகால் விளங்கவில்லை.

சுப்பராமன் உத்தியோகம் மாற்றலாகி ஜமால்பூருக்குப் புதிதாக வந்தபோது,



அதே காரியாலயத்தில் வேலையா யிருந்த பாபு மோகன்லால்தான் அவரிடம் அதிக நட்புக் காட்டி, தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று, தேநீர் சாப்பிடக் கொடுத்து, மாடியில் அதிக உபயோகமில்லாமல் கிடந்த ஓர் அறையில் குடியிருக்க அனுமதியும் கொடுத்தார். அதுமட்டுமல்ல; முதல் சில மாதங்கள் வாடகை பெற்றுக் கொள்ள மறுத்தும் வந்தார். மோகன்லாலின் மனைவி தயாவதிக்கு அந்த ஏற்பாடு அவ்வளவு உசிதமாகப்படவில்லை. ஆனால் போகப் போக ஓரளவு பழகிப் போய் விட்டது.

சுப்பராமன் மேல் யார்தான்! அசூயை — அதுவும் நீடித்த அசூயை — கொள்ள முடியும்? எக்காரியத்திலும், வேண்டுமானால், நஷ்டத்துக்கும் அசௌகரியத்துக்கும் தாம் ஆளாவாரே தவிர, பிறருக்கு இடைஞ்சல் உண்டாக்க மாட்டார். எது செய்தாலும் நன்மை தீமைகள் தீர ஆராய்ந்து செய்வார். இயற்கையாகவே தம் எல்லை அறிந்து எச்சரிக்கையுடன் நடப்பவர். வயிற்றுப் பிழைப்புக்காக, முக்கியமாகப் பெற்றோருக்கு உதவுவதற்காக ஒரு சர்க்கார் காரியாலயத்தில் கணக்கராக இருந்தாலும், சந்நியாச மனோபாவமுள்ளவர். அவருடைய யோக்கியதையையும் வைராக்கியத்தையும் கண்டு போற்றாதவர் இல்லை. இவ்வாறு, 'லட்சிய மனிதன்' என்று மதிக்கக் கூடிய சுப்பராமனைப் பார்த்து அவருடைய நண்பர் மோஹன்லால் 'நில் நம்பிக்கைத் துரோகி, நாயே! வாசற்படியை மிதிக்காதே!' — என்று கர்ஜித்தது எனக்கு அளவற்ற வியப்பை உண்டாக்கியது. அதில் ஆச்சரியமென்ன? என் வாசற்படியில் நின்றவாறே நான் கவனித்தேன்.

சுப்பராமன் மன அதிர்ச்சியுடன், ''மோஹன்லால்ஜி, என்ன, விபரீதம்! பேசுவது நீங்கள்தானா? நம்ப முடியவில்லையே!'' எனச் சொன்னார்.

''போதும், போதும், உன் தாழ்மையும், சாது வேஷமும்!''

''ஐயா! ஜமால்பூரில் என் ஆதி நண்பராகிய நீங்களா அவ்வாறு பேசுகிறீர்கள்? என்மேல் ஏதாவது பிசகு இருந்தால் எடுத்துச் சொல்லுங்கள். என்னாலான பரிகாரம் செய்கிறேன்.''

''அல்பக் காரியம் செய்வது நீ, அதை விளக்கிச் சொல்வது என் கடமை! அப்படித்தானே?''

''எதற்கும் உள்ளே போய்ப் பேசக் கூடாதா? இப்படி நடுத் தெருவில் நிற்பது லஜ்ஜையாக இருக்கிறது.''





மூன்றாவது பரிசு பெற்ற சமூகச் சிறுகதை

''ஓஹோஹோஹோ! தெருவில் நின்று பேச உனக்கு வெட்கமாக இருக்கிறதா? இதுவும் கலிகால விநோதம்தான்!...மலை விழுங்கி மகாதேவனுக்குப் பாக்கைக் கடித்துப் பல் வலித்ததாம்!''

''ஐயோ, ராமா! ஒன்றும் புரியவில்லையே!''

''புரியவில்லையா? நல்ல வேஷக்காரனையா! நாலு மதராசிகளையும் கூடச் சேர்த்து பஞ்சாயத்து நடத்தி வழக்கு விசாரிக்கச் செய்கிறேன். அவர்கள் தீர்ப்புச் சொல்லும் போது விஷயம் புரியும்... இப்பொழுது வேறிடத்துக்குப் போ; இடம் தெரிந்ததும் வேலையாள் மூலம் பெட்டி படுக்கையைக் கொடுத்து அனுப்புகிறேன்.''

இதற்குள் ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது. விதிக் கோளாறுல் சுப்பராமன் ஏதோ ஒரு வகையில் குற்றம் செய்தவனாகவே இருந்தாலும் கூட இம்மாதிரி தெருவில் நிறுத்தி வைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. மோகன்லால் சாதாரணமாக என் சொல்லுக்குக் கட்டுப்படக் கூடியவர். நான் அவர் அருகில் போய், தாழ்ந்த குரலில் ''என்ன சமாசாரம் மோகன்?'' என்று கேட்டேன்.

''இந்த அநியாயத்தைப் பார் கிஷோர். வீட்டில் நம்பிக்கை பிறப்பித்துக் கொண்டு அக்கிரமமாக நடந்து கொண்டு விட்டான்.''

''சே, சே, சே, நிஜமாகத்தானா?''

''எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து விட்டேன். சந்தேகமே இல்லை. கிஷோர். கேள்—மே மாதத்தில் நான்...''

''அந்த விவரமெல்லாம் வேண்டாம், மோகன். நீ சொன்னால் சரி. ச்சே! என்ன அநியாயம்!... எதற்கும் உள்ளே போய்த் தீரப் பேசுவோமே!''

''என்னத்தைப் பேசக் கிடக்கிறது? ஜாதிக் கூட்டத்தில் எல்லாம் அலசிவிடலாம். சுத்த அயோக்கியத்தனம்.''

''எதற்கும் உள்ளே போகலாம் வா.''

''தச்! எனக்கு ரசிக்கவில்லை.''

''சரி, இருவரும் என் வீட்டுக்காவது வாருங்கள்.''

''அதெல்லாம் எதற்கு, கிஷோர்?''

''சரி, அப்படியானால் நான் போய் வருகிறேன். உங்கள் விவகாரத்தில் அநாவசியமாகத் தலையிட்டதற்கு மன்னிக்கவேண்டும்.''

''சீ, சீ! அப்படி அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது.''

''இதற்கு வேறென்ன அர்த்தம்?''

''சரி, வாருங்கள் உள்ளே.''

''உள்ளே வாரும், மிஸ்டர் சுப்பராமன்'' என்று சொல்லி அவரையும் அழைத்துச் சென்றேன்.

ரேழி அறையில் நாற்காலியில் உட்கார்ந்தோம். ''உங்கள் மனைவி எங்கே இருக்கிறார்கள்?'' என்று மோகன்லாலிடம் ஆங்கிலத்தில் மெல்லிய குரலில் கேட்டேன்.

''அந்த நன்றி கெட்ட பாவி என் முகத்தில் கரியைத் தடவிவிட்டுக் கூடத்தில் அழுது கொண்டிருக்கிறாள்'' என்று அவர் வெறுப்புடன் கத்தினார்.

சிறிது நேரம் மூவரும் மௌனமாயிருந்தோம். பிறகு நான் ஆங்கிலத்திலேயே, ''மிஸ்டர் சுப்பராமன்! வீட்டில் பெண்டுகளுடன் எல்லை கடந்து சிநேகமாய் இருந்து விட்டீர்கள் என்று நம் நண்பர் அபிப்பிராயப் படுகிறார்'' என்று பேச்சைத் தொடங்கினேன்.

சுப்பராமனின் முகம் வெளுத்து நா வறண்டு விட்டது. ''உங்கள் சம்பாஷணையிலிருந்து அவ்வாறே அர்த்தம் செய்து கொண்டேன்.''

நான் – அதைப் பற்றி உம் சார்பில் சொல்லிக்கொள்ள வேண்டியது....?

சுப்பராமன் (தத்தளிக்கும் மெல்லிய குரலில்) — எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. 'இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு விட்டதே' என்று விசனமாக இருக்கிறது.

மோகன் — பாழுங் காரியமும் செய்து விட்டு, தந்திரமான பதிலையும் பார்!

நான் — தயவுசெய்து சற்றுப் பொறும்... மிஸ்டர் சுப்பராமன்! உங்களைப் பற்றி எங்களுக்கெல்லாம் உயரிய அபிப்பிராயம் உண்டு. ஆகையால் இந்த விதமான, அசம்பாவிதமான, கேள்விகள் கேட்பது சங்கடமாயிருக்கிறது. ஆனால் சந்தர்ப்பப் பிசகால் கேட்க வேண்டியே இருக்கிறது. 'நெருப்பு' என்று சொன்னதும் வாய் வெந்துவிடாது. நீங்கள் வீட்டில் பழகிய மாதிரியில் நாலு பேர் சந்தேகப்படும்படி நடவடிக்கை இருந்ததா?

சுப்பராமன் — நான் இங்கே வந்த புதிதில் வீட்டு எஜமானி அவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதுவும் நியாயம்தானே? என் தகப்பனாரே சொல்லி யிருக்கிறார் — 'பிரம்மசரியம் நல்லதுதான். எனக்கே ஆசையாக இருக்கிறது. ஆனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஜனங்கள் சந்தேகிப்பார்கள். அப்பொழுது உன் மனம் நோகக் கூடாது' என்று அவர் பல உதாரணங்களுடன் விவரித்திருக்கிறார். ஆனால் நான் செல்லச் செல்ல இவ் வீட்டில் புதுமையும் சங்கோசமும் குறைந்து குறைந்து, சமீபத்தில் நான் இந்தக் குடும்பத்துமனிதன் போலாகி விட்டேன்.

மோகன் — குழந்தைகளுக்கு விதம் விதமான புது மோஸ்தர் மிட்டாய்கள் வாங்கிக் கொடுத்தும் சினிமா, சர்க்கஸ் என்று அழைத்துச் சென்றும் வந்தீர்கள்!

சுப்ப — ஆம், மெய்தான். எனக்குக் குழந்தைகள் என்றால் பிரியம். அநேகமாய் எல்லாருக்கும் பிரியம்தான்; ஆனால் மேல்வாரியான, அந்த நிமிஷத்துக்கான அன்பு என்று நினைக்கிறேன். தன்னலம் கலந்த அன்பு என்று கூடச் சொல்லத் துணிவேன். என் விஷயத்தில் ஓர் ஆழமான உணர்ச்சியும் உண்டு. குழந்தைகள் சிரித்துப் பேசும்போது, முகமலரைக் கண் பார்க்கிறது. நாவின் தேனைக் காது குடிக்கிறது. அதோடு கூட என் மனம் எதையோ கண்டு மகிழ்கிறது. எதையோ நினைத்துக் கவலைப்படுகிறது. என் ஆத்மா அவர்களுடைய பிற்கால நலனுக்காக ஏங்கிப் பிரார்த்திக்கிறது. அவர்கள் கோபத்துடன் கத்திப் பண்டங்களைப் பாழாக்கும்போது — 'இந்த எரிமலையின் மூலகாரணம் என்ன? அஸ்திவாரத்தின் பிளவுகளில் கல்லும் சாந்தும் வைத்து அடைக்க முடியுமா? அடைப்பது உசிதமா? அதன் ஆவேசம் தீருவதுதான் விரும்பத் தக்கதா? நாம்தான் 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டு — அதன் இயற்கைப் போக்கை அனுசரித்து — போக வேண்டுமா?' என்றெல்லாம் சிந்திப்பேன்.


உறுதிக்கும் உழைப்பிற்கும்
சங்கர்
சிமெண்ட்
இப்பொழுது சுலபமாகக் கிடைக்கிறது.
SANKAR I C BRAND
இந்தியா சிமெண்ட்ஸ்
லிமிடெட்
சென்னை-2
தொழிற்சாலைகள்: சங்கர் நகர், சங்கரி

ஆனால் குழந்தைகளுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? மொத்தத்தில் நல்லவன் என்று நினைத்து அன்புடன் 'சாச்சாஜி' என்று அழைக்கிறார்கள். அந்த அழைப்பு எனக்கு அமிர்தமாய் இருக்கிறது. அவர்கள் தாயோடோ, தங்களுக்குள்ளோ சண்டை யிடும்போது காரிய காரண அடிப்படையில் இரண்டு வார்த்தை புத்திமதி சொல்கிறேன். உடனே அவர்களுடைய போக்கு திருந்தி விடுகிறது. இவ்வாறு குழந்தைகள் மூலம் பஹன்ஜி (சகோதரி) க்கும் என்னிடம் மனம் இளகிற்று. மாலை நேரத்தில் உலாவவோ, விளையாடவோ நான் சிறுவர்களை அழைத்துக் கொண்டு போய்விட்டால் வீட்டு வேலை நிம்மதியாய் நடக்கிறதல்லவா? திரும்பிய பின் குழந்தைகளும் நச்சரிப்பு இல்லாமல் சுமுகமாய் இருக்கிறார்கள். அச்சமயம் உங்கள் வீட்டுக் குழந்தைகளும் எங்களுடன் சேர்ந்து கொள்வதும் உங்களுக்குத் தெரியும். உங்கள் முன்னாதான் அவர்களுக்குத் தலைவன். ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாகப் படுதா விலகி வந்தது. பண்டிகைப் பருவங்களில் நான் ஹோட்டலுக்குப் போகாமல் இவர்களோடுதான் சாப்பிடுவது. மோகன்லால் பாபு 'தம் மேலதிகாரியுடன் சுற்றுப் பிரயாணம் போகும்போது வீட்டில் நான்தான் ஆண் துணை...

மோகன் — பிறகு இங்கிலீஷ் பாடம்... சிரிப்பு கேளிக்கை...?

சுப்ப — அதுவா? தினசரிப் பாடமாக ஒன்றுமில்லை. ஓரளவு விருத்தி யடைந்த பிறகு திடீரென்று கணவன் முன் ஆங்கிலப் பத்திரிகை படித்து அவரை வியக்கச் செய்து அந்த இன்பத்தை அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பஹன்ஜி ஆங்கில வாசகப் புத்தகங்கள் வாங்கி மறைவாக வாசிக்கிறார்கள். சொற்களுக்கு அர்த்தம் தெரியாவிட்டால் அல்லது வாக்கிய அமைப்பு புரியாவிட்டால், என்னிடம் கேட்பார்கள். நல்ல அஸ்திவாரத்துடன் சொல்லுவேன். உச்சரிப்புப் பிழைகள் மலிந்திருக்கும், விநோதமாயிருக்கும், திருத்துவேன், இருவரும் சிரிப்போம். வேறு விதத்திலும் ஹாஸ்ய நிலைகள் ஏற்படுவதுண்டு. ஒரு நாள் ஆபீசுக்குப்போகச் சைக்கிளில் கால் வைத்துக் கொண்டிருந்தபோது, அவசரமாக 'பாகஸாஹிப், மேர் என்றால் அர்த்தமென்ன?' என்று கேட்டார்கள். பெட்டைக் குதிரை என்று அர்த்தம் கூறிவிட்டு என் வழி சென்றேன். அன்று மாலை என்னிடம் காட்டப்பட்ட மொழி பெயர்ப்பில் 'பயங்கர துர் சொப்பனம்' என்பதற்கான 'நைட் மேர்' என்ற வார்த்தை 'இரவின் பெட்டைக் குதிரை' என்று காட்சியளித்தது. அவ்விடத்தில் அது பொருந்தவில்லையே என்பது பஹன்ஜியின் சந்தேகம். நான் சரியான அர்த்



'' மாமியாரைப் பற்றி மட்டமாகப் பேசாதே!''

''நன்னா பிருக்கு! நான் உங்க மாமியாரைப் பற்றி ஏதேனும் சொன்னேனா? நான் என் மாமியாரைப் பற்றின்னா சொல்லிண்டிருக்கேன்!''

தம்சொல்லிப் பக்கென்று சிரித்தேன். சகோதரி கண்களும் முகமும் மலர, பகபகவென்று குழந்தைச் சிரிப்பு சிரித்தாள். தற்செயலாய், பாபுஜி சுற்றுப் பிரயாணம் முடித்துக் கொண்டு டாங்காவில் இருந்து இறங்கினர்: ஆங்கிலப் படிப்பு ரகசியம் வெளியாகிவிட்டது. அவர் மனத்திலும் சம்சயம் என்னும் வித்து அச்சமயம் விழுந்திருக்க வேண்டும்.

மோகன் —பார்த்தீரா, உண்ட வீட்டுக்குத்துரோகம்! வளர்த்த கடா பாய்ந்தது போல்! குடித்த பாலெல்லாம் நஞ்சாக்கிக் கொண்ட நாகம் போல்...

நான் — வருந்தத் தக்க விஷயம்தான். இருந்தாலும் சற்றுப் பொறுங்கள்.... மிஸ்டர் சுப்பராமன், இவ்வளவுதானா, விளக்கவேண்டியது வேறேனும்...?

மோகன் — வேறு ஆக வேண்டிய இழவெல்லாம் ஆகிவிட்டது. அந்த வயிற்றெரிச்சல் இல்லாவிட்டால் இவ்வளவு கூக்குரல் ஏன்?

நான் — என்ன மிஸ்டர்...

சுப்ப (தயக்கத்தின் எல்லையாகி) — நான் என்ன சொல்லட்டும்?

அவர் யோசனையில் ஆழ்ந்து சும்மா இருந்தார். சிறிது நேரம் கழித்து நான், ''இப்படியே நான் முழுதும் உட்கார்ந்திருப்பதா, என்ன? இருள் விலகும்படி ஏதாவது சொன்னால்தான் நல்லது'' என்றேன்.

சுப்பராமன் நன்றியில் தோய்ந்த குரலுடன் பேசினர்: ''நான் சொல்லக் கூடிய வார்த்தைகளைக் காட்டிலும் தங்களுடைய நல்ல ஹிருதயந்தான் இந்த இருள் சிக்கலைப் போக்க முடியும். நான் இப்போது எது சொன்னாலும், விளக்கமானாலும் சரி, அபிப்பிராயமானாலும் சரி, எதிரிடையாகத்தான் வேலை செய்யும். வாயை மூடிக் கொண்டு தற்காலத்துக்குத் தண்டனை ஏற்பதுதான் வழி... ரொம்ப நாளைக்கு முன் நடந்த சம்பவம் ஒன்று:

சென்னப்பட்டணத்தில் நான் குடியிருந்த வீட்டில் ஒரு சிறு பெண் இருந்தாள். எக்காரணத்தாலோ அவளுடைய தாயாரைத் தவிர, மற்றவர்கள் எல்லாரும் அவளிடம் சற்றுக் கடுகடு என்றே இருப்பார்கள். ஒரு சமயம் அவளுடைய பாட்டிக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது. குழந்தையின் தாயார் அதாவது கிழவியின் மாட்டுப் பெண் ஜவ்வரிசிக் கஞ்சி காய்ச்சிப் பெண்ணின் கையில் கொடுத்துப் பாட்டிக்குத் தரச் சொன்னர். பெண் இரண்டு மூன்று தரம் கூப்பிட்டுப் பார்த்துவிட்டு, டம்ளரைப் படுக்கைக்குப் பக்கத்தில் வைத்துவிட்டுப் பள்ளிக்கூடம் போய்விட்டாள். பூனைதான் தள்ளிற்றோ, தூக்கத்தில் பாட்டியின் கைதான் பட்டதோ, கஞ்சி கொட்டிப் போய்விட்டது. கண் விழித்

துப் பார்த்ததும் கிழவி மருமகளைக் கோபமாய்க் கூப்பிட்டு, கஞ்சியைக் கொண்டு வந்தது யார் என்று விசாரித்தறிந்து, 'அவள் இப்படித்தான் செய்வாள். எனக்குத் தெரியுமே! எடுத்து வந்தவள் —'பாட்டி'— என்று ஒரு குரல் கூப்பிட்டால்தான் என்ன? வாயிலிருக்கும் முத்து உதிர்ந்தா போய் விடும்? நான் தூங்கவே இல்லை. வெறுமனே தான் படுத்துக் கிடந்தேன். எனக்குத் தூக்கம் எங்கே வருகிறது? பூனைபோல் வந்து வைத்திருக்கிறாள். கை தவறி டம்ளரைக் கவிழ்த்து விட்டாள். உடனே இரண்டாம் பேர்வழிக்குத் தெரியாமல் பள்ளிக்கூடம் போய்விட்டாள். பள்ளிக்கூடத்தில் இவர்களுக்கு இந்தக் கர்வமும் அலட்சியமும்தான் கற்பிக்கிறார்களா?...இன்னொரு தடவையா? வேண்டாம் வேண்டாம். எனக்குப் பசியே இல்லை. பசிக்கிறபோது கேட்கிறேன்.... ஃப்ளாஸ்கா? அய்யே! ஃப்ளாஸ்கில் ஊற்றி வைத்த பண்டத்தில் என்னவோ வாடை அடிக்கிறது.' என்று ஒரு தரப்பு (எக்ஸ்-பார்ட்டி) தீர்மானங்கள் சொல்லி விட்டு, சுவர்ப் பக்கம் திரும்பிப் படுத்தாள்.

சாயங்காலம் கோமு பள்ளியிலிருந்து வந்ததும் — பெண்ணின் பெயர் கோமதி — ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் அவளைத் தாக்கிக் கண்டித்தார்கள். விஷயம் புரியும்வரையில் அவள் சற்றுப் பிரமித்து நின்று விட்டு, பிறகு தலை குனிந்து கொண்டு சும்மா இருந்தாள். இரவு படுத்துக் கொண்ட பின் தாயார் மெல்லிய குரலில், 'ஏண்டி கோமு, இப்படி அசட்டுக் காரியம் செய்து விட்டு வசவு வாங்கிக் கட்டிக் கொள்கிறாய்?' என்று கேட்டாள். பெண் தன் மேல் பிசகில்லை என்பதை எடுத்துக் காட்டினாள்.

'நிஜமாகவா, சும்மா சொல்கிறாயா?' என்று தாயார் கேட்டாள். திண்ணையில் ஜன்னலண்டை படுத்திருந்த எனக்கு எல்லாம் காதில் விழுந்தது.

'நிஜமாத்தான் அம்மா' என்று அவள் சற்று எரிச்சலுடன் சொன்னதும், 'பின்னே இத்தனை நேரம் அசடு போல் ஏன் சும்மா இருந்தாய்? குற்றம் செய்யாமலே ஏன் குற்றவாளிப் பட்டம் வாங்கிக் கொள்ள வேண்டும்? எனக்கு எவ்வளவு ரோசமா யிருந்தது தெரியுமா?' என்று பரிவுடன் கேட்டாள்.

'நான் சொன்னவுடன் நம்பி விடுவார்களா அம்மா? இப்போது வார்த்தையுடன் நின்று விட்டது. அப்போது ரெண்டு அடியும் விழும். ஏம்மா, நீகூட....இப்போ.. 'நிஜமாகவா?' என்று கேட்டாயே! அவர்களா நம்பப் போகிறார்கள்?' என்று பெண் பதில் சொன்னாள்.

தாயார் பெருமூச்சு விட்டுச் சும்மா இருந்தாள். தூக்கம் வர வெகு நேரம் பிடித்திருக்க வேண்டும். தலையணை கண்ணீரால் தெப்பலாய் நனைந்திருக்க வேண்டும். அந்தச் சம்பவம்தான் இப்பொழுது எனக்கு நினைவுக்கு வருகிறது'' என்று சொல்லி முடித்தார் சுப்பராமன்.

மோகன்லால் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கப்பல் கவிழ்ந்து விட்டது போல் அமர்ந்திருந்தார்.

நான் — அப்படியா! ஒரு ரேகை ஒளி தெரிவது போலிருக்கிறது. நீங்கள் நிச்சயமாய்ச் சொன்னால் சம்பந்தப்பட்ட மற்றவர்களிடம் கேட்க வேண்டிய முறையில் விசாரித்து...

சுப்ப-சிவசிவ! கெட்ட காரியம் செய்தவளாயிருந்தாலும் கூட ஒரு ஸ்திரீயிடம் போய்... வேண்டவே வேண்டாம்...என்னையே அபராதியாகக் கருதித் தக்க தண்டனை கொடுங்கள். ...ஹிதோபதேசக் கதைகள் வாழ்க்கையை எவ்வளவு அனுசரித்து இருக்கின்றன. காக்கை புறாவின் மேல் பழி சுமத்தின கதை உங்களுக்கு நினைவிருக்கலாம். ஒரு வழிப் போக்கன் அலுத்துப் போய் மர நிழலைத் தேடினான். இலைகளெல்லாம் உதிர்ந்து குச்சி குச்சியாய் நிற்கும் ஒரு மரம்தான் அவன் அருகில் இருந்தது. கிடைத்தவரை லாபம் என்று அவன் அதன் கீழ் படுத்துக் கொண்டான். அந்தப் பக்கம் பறந்து சென்ற ஒரு புறா ஐயோ, பாவம் என்று நினைத்து மரக்கிளையில் உட்கார்ந்து சிறகுகளை விரித்து அவன் தலைமேல் நிழல் படும்படி செய்தது. அற்பப் புத்தியுள்ள ஒரு காகம் அவன் மேல் எச்சமிட்டுவிட்டுப் பறந்து போய்விட்டது. கோபத்துடன் விழித்துக் கொண்ட வழிப்போக்கன் அந்தப் புறாவின் மேல் தன் தடியை வீசி அதைக் கொன்று விட்டான். ரசாயன முறையில் தக்க ஆராய்ச்சிகள் செய்திருந்தால் மலம் புறாவினுடையது அல்ல என்று ருசுப்படுத்தியிருக்கலாம். ஆனால் அது உலக வழக்கமல்ல. இவ்விஷயத்திலும் சற்றுப் பொறுத்துப் பார்த்தால் உண்மை வெளியாகும். ஆனால் நான் சம்பந்தப்பட்ட வரை அது தேவையில்லை; நான் என்னைப் பாவம் செய்தவனாகவே பாவித்துக் கொள்கிறேன்.

மோகன்லால் விறைத்துப் பார்த்தார். 'கதைகள் பேசித் தந்திரம் செய்கிறான். ஓர் அம்பாரக் கரியைக் கொட்டி, காற்று நுழைய வழியில்லாமல் செய்து, தீயை அணைக்கப் பார்க்கிறான்' என்று நினைத்தார் போலும். ஆனால் விவகாரத்தை அவ்வாறு முடிக்க எனக்கு விருப்பமில்லை.


நான் கேட்டேன் — ''மிஸ்டர் சுப்பராமன், உங்கள் நடத்தை எனக்கு விந்தையாக இருக்கிறது. நீங்கள் நிரபராதி என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அப்படியிருக்கும்போது இந்த மகா அருவருப்பான குற்றத்தை வீணாய் நீர் — அதிலும் நீர் — ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?''

சுப்ப — இந்தக் கேள்விக்குப் பதில் அளிப்பது மிகவும் சிரமம். தனக்குத் தானே ஆபரேஷன் செய்து கொண்டு ஹிருதயத்தையும் ஈரலையும் எடுத்துக் காட்டுவது போல...

நான் — உங்களைக் கட்டாயப் படுத்த எனக்கு உரிமை இல்லை. நம் நண்பரும் பொறுமை இழந்து கொண்டிருக்கிறார். எனக்காகச் சும்மா இருக்கிறார். அந்த ஆபரேஷன் செய்ய முயற்சி செய்தால் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

சுப்ப — என்னைப் பற்றித் தங்கள் நல்ல அபிப்பிராயம் அளவு கடந்தது என்று தெரிகிறது. நான் என்ன பாக்கியம் செய்தேனோ, மிஸ்டர் கிஷோர், உங்கள் வார்த்தையை எப்படித் தட்டுவது? இருந்தாலும் கிஷோர் பாபு, எனக்குத் தெளிவாய் விளங்காத ஒரு நுட்பமான உணர்ச்சியை — உருவற்ற ஒரு

டிவிஎஸ்
வினியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை



டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகளை உற்பத்தி செய்வோரில் பெரும்பாலோர் தங்கள் தங்கள் துறைகளில் தலைசிறந்தவர். அவை நீண்ட நாள் உழைக்கும் என்பதில் ஐயமில்லை.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்-திருவனந்தபுரம்

TVS

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்; செகந்திராபாத் விசாகபட்டினம்

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

TVS

பாவத்தை — பிறருக்கு எப்படித் தெளிவு படுத்துவேன்? ஆயிரம் பேருக்கு டான்ஸில் ஆபரேஷன் செய்து அனுபவம் பெற்றிருந்தால், கண்ணாடி முன் நின்று ஒரு நர்ஸ் உதவியுடன் அழுகிப் போன என் தொண்டைச் சதையை நீக்க முயலலாம். ஆனால் பிறர் பாபச் செயல்களை நான் ஆராய்ந்ததில்லை. ஆகையால் வெகு தயக்கத்தோடும் கூச்சத்தோடும் இக்காரியத்தில் இறங்குகிறேன். தப்பாக — அகம்பாவம் பிடித்தவன் — என்று அர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. உண்மை என்னவென்றால், 'இவன் இந்த அருவருப்பான பாபச் செயல் செய்யக் கூடியவன்' என்று என் அருமை நண்பர் நினைத்ததே என் மனத்தில் என்னைக் குற்றவாளியாக்கி விட்டது. நான் விரும்பும் அளவுக்கு நான் நாணயஸ்தனாக இருந்தால் இவர் மனத்தில் இந்தச் சந்தேகம் உதித்தே இருக்காது. பிறர் விதை போட்டுத் தண்ணீர் ஊற்றியிருந்தாலும் முளை கிளம்பியிருக்காது. என்னிடம் சிறிதளவேனும் ஏதோ குறை இருப்பதால்தானே விஷயம் இந்த அளவுக்கு வளர்ந்து விட்டது? குறைகளுக்கென்ன, நிறைய இருக்கத்தான் இருக்கின்றன...., சற்று யோசித்துப் பாருங்கள்.— சமையலுக்காக வாங்கி வைத்திருக்கும் மாமிசத் துண்டு ஒன்று காணமற் போனால் வீட்டு ஜனங்கள் இன்னமும் கண் திறவாத பூனைக் குட்டியையாவது சந்தேகிப்பார்களே தவிர, அவ்வழி சென்ற பசு மாட்டைச் சந்தேகிக்கவே மாட்டார்கள். பசு தன் இறைச்சியை உணவாக அளிக்குமே தவிர மாமிசம் தின்னாது. இறைச்சியும் பசுவும் எப்படியோ, அவ்வாறே இவ்விஷயத்தில் நான் ஏன் இருக்கக்கூடாது என்ற ஏக்கம் உள்ளத்தைக் குடைகிறது....

முன் அறையில் இந்தச் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கையில் உள்ளே கூடத்திலிருந்து வரும் அழுகை, விம்மல், மூக்கு சிந்துதல், உறிஞ்சுதல், காகிதத்தின் சலசலப்பு முதலிய ஓசைகள் என் புத்தியில் ஒரு மூலையில் பதிவடைந்து கொண்டே யிருந்தன. இப்போது ஒரு கதவு ஜாக்கிரதையாய்த் திறந்து, மெள்ள மூடப்படுவது தெரிந்தது. என்னையறியாமலே நான் மனத்துக்குள் வேகமாக ஒரு தீர்மானத்துக்கு வந்து, ''மோகன்!'' என்று வீறிட்டுக் கொண்டே கூடத்தை நோக்கி ஓடினேன். பின்புறக் கதவைத் திறந்து பார்த்தால் தயாவதி கிணற்றை நோக்கி ஆவேசத்துடன் ஓடிக் கொண்டிருந்தாள். நானும் அந்தப் பக்கம் விரைந்து வருவதைக் கண்டதும், அவள், ''உங்களுக்குப் புண்ணியமுண்டு, அங்கேயே நில்லுங்கள், அங்கேயே நில்லுங்கள். உங்கள் முன்னா மேல் ஆணை'' என்று கெஞ்சிக் கதறினாள். மோகன்லால் என்னைத் தாண்டிப் பாய்ந்தோடி அவளை இறுகப் பிடித்து வீட்டுக்குள் இழுத்து வந்தார். நான் ஓரமாக நின்று, ''படுக்க வைத்து விட்டு, சற்று கூடவே இருங்கள்'' என்றேன்.

சுப்பராமனும் நானும் ரேழி அறையில் போய் உட்கார்ந்தோம். நான் தினசரியைப் படிக்கும் பாவனை செய்தேன். அவர் அசைவற்றிருந்தார். பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு, மோகன்லால் கையில் ஒரு காகிதத்துடன் வந்தார். ''இன்னும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வருகிறதுதானே?'' என்று யோசனை கூறினேன்.

''அவசியமில்லை. அந்த ஆவேசம் அடங்கி விட்டது. அலுப்புத் தீர வேண்டியதுதான் பாக்கி. தண்ணீர் குடித்தாள். பாலும் கூட வைத்துக் கொடுத்தேன்.—இந்தக் கடிதத்தைப் பாருங்கள்....பரவாயில்லை, சும்மா பாருங்கள்'' என்று மோகன் வற்புறுத்தினார்.

ஹிந்தியில் எழுதியிருந்தாள். பாஷை, பாணி எல்லாம் புது மலர்ச்சி நாவல்களின் நகல், சினிமாப் பேச்சின் நகல். சொற்களின் உள்ளேயும் கண்ணீர்; எழுத்துக்களின் மேலும் கண்ணீர்த்தாரை. படித்தேன் — ஆடையற்ற பரஸ்திரீயைப் பார்ப்பது போன்ற கூச்சத்துடன்.

''...மதராஸி பாபுவுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மதியீனத்தால் உங்களுடைய தவறுதலான சந்தேகத்தை ஆதியிலேயே திருப்பாமல் வளர விட்டேன். — பொறுப்பற்றவள் ஆகி, சுலபமாய்த் தப்பியோடும் வழியைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினேன். பண்டம் ஒருபுறம்; பழி ஒருபுறம். மகா பாபம். இவர் கோவிலில் வைத்துப் பூஜிக்கத் தக்க மகாத்மா. காந்திஜி நாடறிந்த மகாத்மா. இவர் எவரும் அறியாத, எவராலும் பாராட்டப்படாத, கீர்த்தி என்ற கூலி அல்லது பரிசுகூடப் பெறாத, எதிர் பாராத மகான் — ஸ்வாந்த: ஸுகாய, தன் உள்ளத்தின் அடக்கமான, ஆடம்பரமற்ற சுகத்துக்காக நல்வாழ்வு வாழும் மிகச் சிறந்த மகான். அந்தப் பாவி வேறு. ஆனால் அந்தப் பாவியின் பெயரைச் சந்தியில் இழுத்து ஆகவேண்டிய காரியம் என்ன? முக்கியமான குற்றவாளி, முக்கியமான முட்டாள், துரோகி, நானிருக்கும்போது, தண்டனைக்கு இன்னொருவரைத் தேடுவானேன்? ஆனால் தண்டனை எனக்கு நானே விதித்துக் கொள்கிறேன். அந்தச் சலுகை மாத்திரம் எனக்குக் காட்ட வேண்டும். மேலும் ஒரு வேண்டுகோள். குழந்தைகள் — ஐயோ, அந்த ஆதரவு இழக்கும் ஜீவன்களை, என் இருதயத்தின் இனிய அம்சங்களை, நம் புனித அன்பின் சின்னங்களை — பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். அவர்களுக்கு, ஆயுள் பரியந்தம் இந்த வெட்கக்கேடான விவரங்கள் ஒன்றும் தெரிய வேண்டாம். ஏதோ தெய்வச் செயல் என்று நினைத்திருக்கட்டும்....''

மோகன்லால் திருப்பித் திருப்பி விதம் விதமாய் சுப்பராமனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இந்தத் துக்க அத்தியாயத்தை மறந்து எப்போதும்போல் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்று கெஞ்சினார். அவருடைய வேதனையைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனால் சுப்பராமன் ஒப்புக் கொள்ள இயலவில்லை. தாம் சற்றுத் தொலைவில் வேறு இடத்துக்குப் போய்த் தலை மறைவாக இருந்தால் மோகன்லாலின் மனச்சாட்சியின் உறுத்தல் சற்று நிதானப்படும் என்றும், வேறு ஊருக்கே வேலை மாற்றம் கேட்டாலும் நல்லது என்றும், தாம் மனஸ்தாபத்தால் விலகிக் கொள்ளவில்லை என்றும், திடசித்தத்தோடும், அந்தரங்க அன்போடும் கூறினார். நானும் அந்த யோசனையை ஆமோதித்தேன்.



நண்பர்கள் புடை சூழ பருகி மகிழுங்கள் கோகா - கோலா. விறுவிறுப்பான அதன் சுவையே தனி. அதன் ஒவ்வொரு துளி-யிலும் உற்சாகம் துள்ளுவதை உணர்ந்து இன்புறுங்கள். எப்போதும் கேட்டு அருந்-துங்கள் கோகா – கோலா, ஐஸ்-குளிர் கோகா – கோலா!

புத்துணர்வூட்டிடும் அருமை, கோகா கோலாவின் பெருமை!

கோகா – கோலா, கோகா – கோலா கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

எத்தருணத்திலும்

இனிமை,

கோகா-கோலாவின்

மகிமை!

Coca-Cola

CHCC-9-162-TAM

புத்திசாலிப் பையன்!

குருஷேவ் பதவியிலிருந்த காலம். மாஸ்கோ கல்வி நிலைய இன்ஸ்பெக்டர் ஒரு வகுப்புக்குள் சென்று ஆசிரியரை வினவினார்: "உங்கள் வகுப்பில் மிகவும் புத்திசாலியான பையன்கள் உண்டா?"

"எங்கள் வகுப்பில் ஒருவன் இருக்கிறான்! அவன் அறிவாற்றலிலும் சிந்தனையிலும் மற்ற எல்லாரையும்விட ஒரு வருஷம் முந்தியிருக்கிறான்!" என்ற ஆசிரியர் சிறுவன் இவானை இன்ஸ்பெக்டர் முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்.

"சோவியத் யூனியன் சரித்திரத்தில் மூன்று மிகப் பெரிய துரோகிகள் யாரென்று கூற முடியுமா?"

"ஸ்டாலின்!"

"சரி!"

"மாலன்கோவ்!"

"சரி!"

"குருஷேவும்கூட!"

"ரொம்ப சரி!" என்று கூறிவிட்டு இன்ஸ்பெக்டர் ஆசிரியர் பக்கம் திரும்பி, "நீர் சொன்னது உண்மை! இவன் ஒரு வருஷத்துக்கு அப்பால் நிகழப் போவதையும் இப்போதே சிந்திக்கிறான்!" என்றார்.

ஆதாரம்: "டைம்"





- காளை மாடுகள் மாதிரி முதலைகளும் கனைக்கும்.
- ஒரு 'புறா'வின் வேகம் ஒரு நிமிடத்துக்கு 1210 கஜம்.
- சிலந்தி ஒரு நாளைக்கு அதன் எடையைப் போல் 27 மடங்கு எடையுள்ள உணவை உட்கொள்கிறது.
- உலகத்திலுள்ள புழு பூச்சிகளின் மொத்த எடையைக் கணக்கிட்டால் அது, உலகத்தில் உள்ள மனிதர்கள், மிருகங்கள் ஆகியவற்றின் எடையைவிட அதிகமாக இருக்கும்!
- எறும்புக்குக் காது கேட்காது; கண் தெரியாது. அதன் முன்புறம் இருக்கும் கொம்பு போன்ற இரண்டு உறுப்புக்களின் உதவியால்தான் அது எல்லா வேலைகளையும் செய்கிறது.

ஆதாரம்: "மிர்ரர்"
தகவல்:
சரோஜா ராமச்சந்திரன்

வராமல் வரவும்!

"உத்தரவன்றியில் உள்ளே பிரவேசிக்கக் கூடாது" என்ற கண்டிப்பான வாசகங்களைக் கண்டு கண்டு அலுத்துப் போன நமக்கு, கிழக்கரையில் உள்ள ஒரு தென்னந் தோப்பில் காணப்படும் "அனுமதி பெற்று வருக" என்னும் அழகான வாசகம் மகிழ்வை ஊட்டும். இரண்டு வாக்கியங்களுக்கும் பொருள் ஒன்றுதானும், பின்னது பண்போடு விளங்குகிறதல்லவா? ஏன் இந்த யோசனையை எல்லாருமே பின்பற்றக் கூடாது?

- ஆர். கல்யாணி

சில ஹோட்டல் மொழிகள்!

"'ஸ்வீட்'று வாயைப் பிளக்கிறது. பில் என்றால் கையை இழுத்துக்கிறதா?"

"என்ன சார், சாம்பாரில் தான் மாதிரி அபூர்வமா தலையைக் காட்டறீங்க!"

"பாதாம் ஹல்வா இருக்கிறது தெரியும், ஸ்பெஷல் போண்டா இருக்கிறது தெரியாதோ?"

"முதல் நாள் விற்காதது மூன்றும் மாதம் விற்குமா?"

"எண்ணெயிலே போட்டாப் பூரி; கல்லிலே போட்டாச் சப்பாத்தி!"

"ரவா முறுகிறுப் போச்சு; மாவு பிய்ந்தால் போச்சு."

"இன்றைய ஸ்பெஷல் நாளைய சாதா!"


"ஹோட்டல் பாயசத்தில் முந்திரிப் பருப்பா?"

- கு. க. ர.



ஜப்பானில் உள்ள ஒரு தொழிற்சாலையின் அறை ஒன்றில் முதலாளியின் முகத்தைப் பெரிய பலூன் ஒன்றின்மீது வரைந்து வைத்திருக்கிறார்கள். முதலாளிமீது கோபப்படும் தொழிலாளி அந்த அறைக்குள் வந்து பலூன்மீது உள்ள முதலாளியின் முகத்தில் நாலைந்து குத்துகள் குத்திக் கோபத்தைத் தணித்துக் கொள்வார். இது முதலாளியின் ஏற்பாடு. அங்கு வேலை நன்றாக நடக்கிறதாம்.

"ஸயன்ஸ் டைஜஸ்ட்" -- "நாயக்"





அலமேலுவுக்குப் 'படபட' என்று வந்தது.

சித்திரை மாதம். அக்கினி நட்சத்திரத்தின் உச்சமான காலம். வெய்யிலின் உக்கிரத்தைத் தாங்க முடியாமல் அந்தப் பலஹீனமான கால்கள் துவண்டன. இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் அவள் தன் வீட்டுக்குள் நுழைந்து விடுவாள்.

நல்ல வேளை. அன்று சனிக்கிழமை. கோமதிக்கும் பள்ளிக்கூடம் விடுமுறை. நிச்சயம் வீட்டில் இருப்பாள். அம்மா என்று அவள் ஒரு முறை வாய்விட்டு அழைத்தால் போதும்; அலமேலு அதுவரை பட்ட சிரமங்கள் அத்தனையும் இருந்த சுவடு தெரியாமல் போய்விடும்.

நெற்றியில் துளித்திருந்த வியர்வையை வழித்து உருகி ஓடிய வீதியில் விட்டாள் அலமேலு. திலகம் கலைந்துவிடும் என்ற கவலை அவளுக்கு இல்லை. கோமதி பிறந்த ஆறும் மாதம் அதை அழுத்தித் துடைத்து விட்டுப் போய் விட்டான் அவள் கணவன்.

அன்று முதல் இன்று வரை — இந்த இருபத்திரண்டு வருஷங்களாக — அவள் கோமதியை வளர்த்து ஆளாக்கி விட்டாள். கோமதியின் அப்பாவுக்குச் சொத்து இருந்தது. கோமதி ஒருத்திக்குப் போதுமான பணம் இருந்தது.

அவள் கணவன் மரணம் அடைந்த பதினைந்தாம் நாள் அவள் மைத்துனன் அவசரம் அவசரமாக வந்தான். ''மன்னி! அண்ணா கொடுத்த கடனை இல்லை என்கிறான் சோமு. உங்கள் பெயரில்தான் வழக்காட வேண்டும். இதில் வக்கீல் ஒரு கையெழுத்து வாங்கி வரச் சொன்னார்!'' என்று ஒரு காகிதத்தில் கையெழுத்து வாங்கிப் போனான்.

அண்ணனுக்காக அலறித் துடித்த அந்தத் தம்பியின் பேச்சை மெய்யென நம்பித்தான் கையெழுத்துப் போட்டாள் அலமேலு. அந்தப் பாவி அவளிடம் ஒரு 'விடுதலை'ப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி இருக்கிறான் என்பது பின்னர்தான் தெரிய வந்தது. சொத்து ஏதும் இல்லாமல் வஞ்சித்த உறவினனைத் தட்டிக் கேட்க வழி தெரியாதவளாய் நடுத் தெருவில் நின்றாள் அலமேலு.

பிறந்தகத்தில் அவளுக்கு அண்ணன் ஒருவன் இருந்தான். இப்படி அவள் ஏமாந்து வந்ததற்காகச் சொல்லிச் சொல்லிக் காட்டினான். தனக்குக் 'கொள்ளை' அடிக்கச் சந்தர்ப்பம் கிட்டாமல் போயிற்றே என்ற ஆதங்கமாகக்கூட இருக்கலாம். சம்பளமில்லாத

வேலைக்காரியாக அலமேலு அங்கு ஆறு மாதங்கள் உழைத்தாள். குடும்ப கௌரவம் என்பது ஒரு கானல் நீர். அதைச் சொல்லிக் கொண்டு நினைப்படித் தேவையை இருந்த இடத்திலிருந்து பூர்த்தி செய்து கொள்ள முடியுமா? அதை அவள் துறக்க நிச்சயித்தால்தான் நிம்மதியான வாழ்க்கை கிட்டும் என்பதை விரைவில் அலமேலு உணர்ந்து கொண்டாள்.

அப்படியே அவள் செய்யவும் தொடங்கினாள். அன்னதானம் அண்ணுசாமியின் பெண் அலமேலு கல்யாணத்துக்குக் காரியங்கள் செய்கிறாள் என்று கேள்விப்பட்ட பின், அவள் அண்ணா அவளுக்குத் தன் வீட்டில் இடம் கொடுக்கவில்லை. பெரிய பண்ணை பிரண்தார்த்தியின் பெண்டாட்டியா அப்பளம் இட்டு விற்கிறாள் என்று கேவலமாகப் பேசி ஒதுக்கிவிட அவள் புக்ககத்தில் உள்ளவர்கள் தயங்கவில்லை.

அலமேலு எதையும் லட்சியம் செய்யவில்லை. அவளுக்கு இருந்த ஒரே சொத்து அவள் பெண் கோமதி. மஞ்சளையும் குங்குமத்தையும் பறித்துக் கொண்ட தெய்வம் இந்த மட்டுமாவது அவளுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. அது அவள் அதிர்ஷ்டம்தான். அலமேலு அப்பளம் இட்டு விற்றாள். எடுபிடி வேலை செய்தாள். பிரசவம் பார்த்தாள். ஊரிலே நல்லது நடந்தாலும், ஆகாதது வந்தாலும் அலமேலுவின் உதவி தேவைப்பட்டது.

கோமதி வளர்ந்தாள். அலமேலுவின் வாழ்க்கைதான் வறண்டிருந்ததே தவிர, கோமதி பெரிய பண்ணையின் மிடுக்கையும், அன்னதானப் பரம்பரையின் அழகையும் கொண்டுதான் பிறந்திருந்தாள். தாயின் கஷ்டம் தெரிந்தவள். படிப்பில் நல்ல சூடிகை.

''நீ மட்டும் ஏன் அம்மா இப்படிச் சிரமப்பட வேண்டும்? நானும் உன் கூடமாட இருக்கிறேன்.... படித்து நான் என்ன உத்தியோகமா பார்க்கப் போகிறேன்?...'' என்று அடிக்கடி அவள் தன் தாயைக் கேட்பது உண்டு.

''அப்படி இல்லை, கோமதி! என் விதி என்னமோ இப்படி ஆகி விட்டது. அன்றுமட்டும் எனக்கு இரண்டு எழுத்து படிக்கத் தெரிந்திருந்தால், உன் சித்தப்பா இப்படி நடுத் தெருவில் நிறுத்தியிருக்க முடியுமா? உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ளத்தான் இந்தப் படிப்பு. உன் அப்பா ரொம்பவும் கெட்டிக்காரர் என்று சொல்வார்கள். நீயும் அப்படி இருப்பது எனக்கு எத்தனை ஆனந்தமாக இருக்கிறது. தெரியுமா?'' என்று கூறி, மறக்காமல் திருஷ்டி கழிப்பாள்.

எஸ். எஸ். எல். ஸி. படித்து முடிந்தவுடன், அலமேலு கோமதியைக் கல்லூரியில் சேரச் சொன்னாள். டாக்டருக்குப் படிக்க வைப்பதாகக்கூடக் கூறினாள். தாயாரின் நிலைமை புரிந்த பெண் திடமாக மறுத்து விட்டாள். ஊரிலேயே ஒரு பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பக்கத்துக் கிராமப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாக வேலைக்கும் சேர்ந்து விட்டாள்.

இப்போது அலமேலு வெளி வேலைக்குப் போவதில்லை. அவளால் முடியவும் இல்லை. நாளைக்கே கோமதிக்கு ஓர் இடத்தில் திருமணம் என்றால், அதற்குச் செய்யத் தனியாகக் கொஞ்சம் போட்டு வைக்க வேண்டி வந்தது. ஆகவே, நாள் முழுதும் அப்பளம் இட்டு, வாரம் ஒரு முறை பக்கத்து ஊர்களுக்குப் போய், குறிப்பிட்ட சில பெரிய மனிதர்களின் வீடுகளில் விற்று விட்டுத் திரும்பி வருவாள்.

அப்படித்தான் இன்றும் அவள் வீட்டிலிருந்து மூன்று மைல் நடந்து வந்தாகி விட்டது. மேலத் தெரு வீட்டில் 'சில்லறை மாற்றித் தருவதாக'ச் சொல்லி வெயில் ஏறும் வரை காக்க வைத்து விட்டார்கள். அவர்கள் வீட்டில் சில்லறை அப்போது இல்லாமல் இல்லை. அந்தச் சாக்கைச் சொல்லி அலமேலுவின் தலையில் சில சில்லறை வேலைகளைக் கட்டினார்கள்.

அம்மாவுக்காக அங்கே பெண் சாப்பிடாமல் காத்திருப்பாள். பஸ் போகும் பாதையும் இல்லை. சற்றே கூனிய இடுப்பு — எலும்பு தெரியும் மெலிந்த தேகம். கைப்பையில் கறிகாய்கள், மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருள்கள். கை கனத்தது. மூச்சு வாங்க அவள் தன்னால் இயன்ற அளவு வேகமாக நடந்தாள்.

அதோ, அந்தத் திருப்பத்தில்தான் அவள் வீடு. ஒரு பர்லாங் இருக்கும். இன்னும்



அடுத்த ஆண்டு எப்படி இருக்கும்?

75ம் பக்கம் பார்க்க

ஐந்து நிமிஷங்கள்தான். இதற்குப் பிறகு ஏழு நாட்களுக்கு அவள் வெளியே போகத் தேவை இல்லை. வயது வந்த பெண்ணை — அதுவும் படித்து உத்தியோகம் பார்ப்பவளை— நான்கு இடங்களுக்குப் போய் அப்பளம் விற்று வரச் சொல்வது அழகாக இருக்குமா? யார் கண்கள் எப்படியோ ? எந்தப் புற்றில் எந்தப் பாம்போ ? அவள்தான் போக வேண்டும்.

கோமதிக்கும் தன் நிலைமை தெரியும். அலமேலுவின் காதுகளில் விழும்படி பலர் கூறியிருக்கிறார்கள். கோமதி நெருப்பாம். குனிந்த தலை நிமிர மாட்டாளாம். இழுத்துப் போர்த்த புடவை இம்மியும் விலகாமல் பார்த்துக் கொள்வாளாம். பள்ளிக் கூடத்தில்கூட யாரிடமும் அதிகமாக ஒரு வார்த்தைகூடப் பேச மாட்டாளாம். அலமேலுவுக்கு இதெல்லாம் கேட்கப் பெருமையாக இருந்தது. ஒரு நிம்மதி தந்தது.

அலமேலுவின் மனம் கோமதியைச் சுற்றியே ஓடியது. இந்தப் பெண்ணுக்கு ஏற்றவன் யார் ? வரன் என்று யாரையும் அவள் பார்க்கவில்லை. எஸ். எஸ். எல்.ஸி. யாவது படித்து முடித்தவன் ஆனால் தேவலை. சொத்தும் வேண்டாம், அழகும் வேண்டாம்— ஆயுள் மட்டும் கெட்டியாக இருந்தால் போதும், என்று நினைத்தாள்.

பக்கத்து வீட்டில் புதிதாக ஒரு பிள்ளை வந்திருந்தான். பார்க்கக்கூட அத்தனை மோசமில்லை. பம்பாயில் நல்ல வேலையில் இருப்பதாகவும், அப்பாவுக்குப் பதில் அறுவடையைக் கண்காணிக்க வந்ததாகவும் தெரிய வந்தது.

அலமேலுவுக்கு அந்த ஊரைப் பற்றி அதிகம் தெரியாது. பக்கத்து நகரத்தில் இருந்தவள் கோமதியின் உத்தியோக நிமித்தம் இங்கு வந்திருந்தாள். மகள் பள்ளிக்கூடம் அருகில் இருக்கிறது என்ற ஒரு காரணத்துக்காகத் தன் சிரமத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் தன் ஜாகையை மாற்றிக் கொண்டாள். பட்டணத்திலேயே இருந்திருந்தால் இவ்வளவு சிரமப்படத் தேவையில்லை.

அந்தப் பையனும் நல்லவனாகத்தான் தெரிந்தது. இரக்க சுபாவம் உண்டு என்பதை அலமேலு புரிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம்கூட ஒன்று இருந்தது. போன வாரம் இப்படித்தான் அலமேலு திரும்பி வந்து கொண்டிருந்த சமயம், மேய்ச்சலுக்குப் போன மந்தையிலிருந்து ஒரு மாடு மிரண்டு ஓடி, அவளைப் புரட்டித் தள்ளியிருக்க வேண்டியது. அந்தப் பிள்ளை மட்டும் சமயத்தில் பாய்ந்து அவளைப் பத்திரமான இடத்துக்கு அழைத்துப் போயிருக்காவிட்டால், இன்று அலமேலு இப்படி நடந்து கொண்டு அவனைப் பற்றி இப்படி நினைத்துக் கொண்டிருக்க மாட்டாள். அவள் பெண் கோமதி தன்னந் தனி ஆளாக இருப்பாள்.

கோமதியின் தந்தைக்குத் திதி வந்தது. பரமாத்மாவுக்காகப் படைக்கப்பட்டதை ஒரு பிரம்மச்சாரி சாப்பிடுவது சம்பிரதாயம். அலமேலு தயங்கியபடிதான் அந்தப் பையனை அழைத்தாள். ஒப்புக் கொள்வானோ, மறுத்து உதறி விடுவானோ என்று கூடத் தோன்றிற்று. ஆனால் அவன் உடனே சரி என்று ஒப்புக் கொண்டான். சாப்பிட்டு விட்டு எழுந்து போகும் வரையில் தலை நிமிரக் கூட இல்லை. கோமதியும் அவன் எதிரில் ஒரு முறைகூட வரவில்லை.

அவன் திரும்பிப் போன பிறகு கோமதி தன் தாயாரிடம், ''ஏன் அம்மா, அடுத்த வீட்டு மாமி போய் விட்டாளா?'' என்று விசாரித்தாள். அலமேலு புரியாமல் விழித்தாள்.

''ஆமாம், அம்மா ! அவரைத்தான் அம்மா சொல்கிறேன். அவர்தான் கல்யாணப் பெண்ணைப் போல் தலையைக் குனிந்து கொண்டு போய் விட்டாளே!'' என்று சிரித்தாள் கோமதி.

அலமேலு தனக்குள் சிரித்துக் கொண்டாள். திதி செய்து வைத்த தீட்சிதரை அந்தப் பையனைப் பற்றி விசாரித்தாள். அவனுக்குத் தகப்பனார் மட்டும்தான் இருக்கிறார் என்றும், மிகவும் நல்ல குடும்பம் என்றும் அதிகம் எதிர்பார்க்க மாட்டார்கள் என்றும் சொன்னார். தீட்சிதரை அந்தப் பையனையும் ஜாடை மாடையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படி அவள் வேண்டிக் கொண்டாள். அவளுக்கு அந்தப் பையனைப் பிடித்திருந்தது. அவன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றுகூட மானசீகமாக வேண்டினாள்.

இதோ ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்து விட்டாள். நீண்ட ஒரு பெரிய மூச்சை உதிர்த்துவிட்டு வாசல் திண்ணையில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். எழுந்து மூடியிருந்த கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்படாத போதுதான், வாசலில் உயரே பூட்டு தொங்க விடப்பட்டிருந்தது தெரிந்தது. அங்கு தொங்கிய பெரிய பூட்டையே வெறித்துப் பார்த்தாள்.

கோமதி எங்கே போயிருப்பாள்? எந்த வேலையும் தனக்கு இருப்பதாக அவள் சொல்லவில்லையே ? அந்தப் பூட்டுக்கு இரண்டு சாவிகள் உண்டு. ஒன்று அலமேலுவிடமும் இன்னொன்று கோமதியினிடமும் இருக்கும். அலமேலு கதவைத் திறந்து கொண்டு உள்ளே போகும் போது, வாசலில் நிழலாடியது. ஒரு சிறு பையன் நின்று கொண்டிருந்தான். கோமதியின் பள்ளிக் கூடத்தில் படிப்பவன் அவன்.

''உங்க டீச்சர் இல்லே... வெளியே போயிருக்கா !'' என்றாள் அலமேலு.

''எனக்குத் தெரியுமே ! . நான் பார்த்தேனே.... டீச்சர் அம்மா அடுத்த வீட்டு ஐயாவோடு அவசரம் அவசரமா அரைமணி முன்னே புறப்பட்டுப் போனாங்களே!....'' என்று சொல்லிவிட்டு அவன் போனான். பெரிய கடமை ஒன்றை முடித்து விட்டுப்





லிப்டன்
ஹிமாலயன்
கோல்டன்
டஸ்ட் டீ

பருகியவர் மீண்டும் மீண்டும் விரும்பிக்
கேட்கும் பானம்! கோப்பைக்குக்
கோப்பை திருப்தி தரும் சிறந்த மணம்!
தரம் நிறைந்த கெட்டியான பானம்!
பருகுவதில் இன்பம்! விலையிலும் சிக்கனம்!

ஹிமாலயன் கோல்டன் டஸ்ட் தூள்வகை
தேயிலைகளில் ஏற்றமிக்கது.

LIPTON

லிப்டன் என்றாலே
நல்ல டீ

LHGC-8 TAB

உயர்ந்த பானங்கள், தின்பண்டங்களுக்கு

வின்ஸெண்ட்



- நாகரீக பார்ட்டிகளுக்கேற்றது பெப்பியோ & ஜூலா-கோலா
- உற்சாகத்துடன் சுவைக்க மாங்கோஸிப், விடோலா, வின்கோலா
- ஆரோக்கியமும், சந்துஷ்டியும் அளிக்க நான்கு வகை பழரச பானங்கள் ஆரஞ்சுவின், மாங்கோவின், பைனாவின், கிரேப்வின்
- மேலும் சுவைமிகுந்த ஜிஞ்சர், ஆரஞ்சு, லெமன் எல்லாம் உண்டு.

வின்ஸெண்ட்

சத்துள்ள ரொட்டி, கேக், பிஸ்கட் வகைகள் ஒவ்வொருவரையும் மகிழ்விக்கிறது

VC: 108

நினைவில் இருக்க வேண்டிய பெயர்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள்: ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங், மதுரை-1

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர் கோயமுத்தூர், கொச்சி, கோவில்பட்டி

போன திருப்தியுடன் அவன் பம்பரம் ஆடப் போய் விட்டான்.

அலமேலுவின் இதயம் பம்பரத்தைவிட வேகமாகச் சுழன்றது அவனுக்குத் தெரியாது. அலமேலுவுக்கு உடம்பெல்லாம் ஆடியது. கணவன் மறைந்த தினத்தன்றுகூட இப்படி ஓர் அதிர்ச்சி அவளுக்கு ஏற்படவில்லை. அப்படி இருக்குமோ... இருக்காது. நிச்சயம் இருக்கக் கூடாது.... இந்தப் பையன் பொய் சொல்கிறான். யாரையோ பார்த்து விட்டுக் கோமதி என்று அவன் சொல்கிறான்.

எப்படி யெல்லாமோ நினைத்து மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள முயன்று தோல்வியுற்றாள் அலமேலு. சூறாவளியால் அலைக்கழிக்கப்பட்ட தனி மரம் போல் உள்ளே நுழைந்த அலமேலுவின் கடைசி நம்பிக்கையும் அற்று விழுந்தது.

கோமதியின் மாற்றுப் புடவை உலர்த்தியிருந்த அந்தக் கொடி காலியாகி யிருந்தது.

அலமேலு சாப்பிடவில்லை. அப்படியே படுத்தவள்தான். முன்பின் அதிகம் தெரியாத ஊர். யாரிடம் போய் இந்த அவலத்தைச் சொல்ல?

யாருக்காக இனி அவள் உயிருடன் இருக்க வேண்டும்? யாருக்காக உழைக்க வேண்டும்? அன்று செத்துப் போன அவள் புருஷன் நல்லவர். தான் பிரிந்தாலும்கூட அவளுக்கு ஒரு பற்றுக்கோல் கொடுத்து விட்டுப் போனார். ஏமாற்றிய மைத்துனன் கூட அவள் அறியாமல் ஒரு நல்லது செய்து விட்டான். அவன் பணத்தை அபகரித்திருக்காவிட்டால், அலமேலு உலகத்தைப் புரிந்து கொள்ளும் ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருக்காது. அவள் அண்ணனைக்கூடக் கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும். அலமேலுவுக்கு உழைப்பின் பெருமையை அவள் அறியாமல் கற்றுக் கொடுத்த குருவாயிற்றே!

ஆனால் பெற்ற பெண் — அவள் தன் உயிரினும் மேலாக வளர்த்த பெண் — பாசத்தையும் உறவையும் மறந்து ஓடி ஏற்கனவே தொய்ந்து போன அந்த உள்ளத்தை இப்படி மிதித்திருக்க வேண்டாம்.

எத்தனை நேரம் அவள் அப்படிப் படுத்திருந்தாள் என்று அவளுக்குத் தெரியாது. பகல் மறைந்து இருள் கவ்வும் நேரம். வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது அவளுக்குப் புரிந்தது. தலையைத் தூக்கிப் பார்க்கவில்லை அலமேலு. அவளைத் தேடிக் கொண்டு யார் வரப் போகிறார்கள்?

வந்தவள் கோமதிதான். விளக்கேற்றும் சமயம் ஆகியும்கூட வீடு இருண்டு கிடப்பதைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள்.

கயிற்றுக் கட்டிலில் கிடந்த உருவத்தை மெல்லத் தட்டி எழுப்பினாள் கோமதி. நிதானமாக எழுந்து நிமிர்ந்து பார்த்தாள் அலமேலு.

அந்த மங்கிய ஒளியில் அவளுக்குத் தெரிந்தது கோமதி உடுத்தியிருந்த புதிய புடவை. தலையில் சூட்டியிருந்த பூ. அவள் விழிகளில் தெரிந்த மகிழ்ச்சி.

நிதானமாக எழுந்து நின்ற அலமேலுவுக்கு அத்தனை அசுர பலம் எங்கிருந்து வந்ததோ! மகள் மேல் பிள்ளையார் எறும்பு

இப்படித்தான் இருக்கும்

1970

- ''பாலி''

ஏறுவதைக்கூடச் சகிக்காத அவள் — கோமதியின் கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள். விலகி ஓடிய கோமதியை இழுத்துப் பிடித்து முதுகில் ஓங்கிக் குத்தினாள். தலையைப் பிடித்துக் குலுக்கினாள்.

முதல் இரண்டு விநாடிகள் கோமதி எதுவும் பேசவில்லை. அந்த அதிர்ச்சி அவளை ஊமையாக்கி விட்டது. பின்னித் தொங்கவிட்டிருந்த தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கோமதியை வாயிற்புறம் தள்ளியபோதுதான், ''அம்மா! அம்மா!'' என்று அலறினாள்.

''என்ன அம்மா! என்ன?.... ஏன் இப்படி? உனக்கு என்ன பைத்தியமா?'' என்று கேட்டாள் அவள்.

''ஆமாம்! பைத்தியம்தான்! இன்னும் நின்றால் கொன்று போட்டு விடுவேன்..... இந்தப் பக்கம் திரும்பாதே.... எந்தத் தைரியத்தில் வெளியே போனாயோ, அதே துணிவோடு போ!.... எவன் உன்னை அழைத்துப் போனானோ அவனுடன் ஓடு!''

அந்த 'அவன்' அப்போது வாசலில்தான் நின்று கொண்டிருந்தான். ''என்ன மாமி! என்ன சொல்கிறீர்கள்?'' என்று பதறினான் அவன்.

''ஓஹோ, மாப்பிள்ளையா? நீங்கள்கூட இங்கேதான் இருக்கிறீர்களா? உறவு கொண்டாட வந்தீர்களா?'' என்று ஏகத்தாளமாகக் கேட்டாள்.

அதிர்ச்சியும் துக்கமும் ஒருங்கே தாக்க விம்மியபடி நின்ற கோமதியின் குரல் அழுத்தத்துடனும் உறுதியுடனும் எழுந்தது. ''அம்மா!'' என்ற அதட்டலில் அசையாமல் நின்றாள் அலமேலு.

''என்ன நினைத்துக் கொண்டு நீ பேசுகிறாய்? நான் எங்கே போனேன் என்று நீ நினைக்கிறாய்? தலைமை ஆசிரியர் மனைவிக்குப் பிரசவ சமயம் என்று நான் சொல்லவில்லையா? நர்ஸ் தெரிஸா தன் பெண்ணுக்கு அசௌக்கியம் என்று ஊருக்குப் போயிருப்பதாகக்கூட நான் சொன்னேனே. தலைமை ஆசிரியர் வீட்டில் திடீரென்று வலி எடுத்திருக்கிறது. வீட்டில் வேறு பெண்களே இல்லை. அகஸ்மாத்தாக இவர் அங்கே போயிருக்கிறார். உனக்கு இதெல்லாம் தெரியும் என்று நான் தலைமை ஆசிரியரிடம் சொல்லியிருந்தேன். உன்னை அழைத்து வரச் சொல்லி இவரை அனுப்பினார்.''

அவள் நிறுத்தினாள். கட்டெரிக்கும் அந்த விழிகள் அலமேலுவைப் பஸ்மமாக்கின.

''ஆமாம்..... நான் வந்த போது நீங்கள் இல்லை....எப்போது வருவீர்கள் என்று தெரி

யாது என்று சொன்னார்கள் உங்கள் பெண்: அங்கே பெண் துணையில்லாமல் கஷ்டப் படுவதைச் சொன்னேன். மனசு இரங்கி என்னுடன் புறப்பட்டார்கள். மனிதாபிமானம் உந்தித் தள்ள, தன்னைப் போன்ற ஒரு பெண்ணின் தேவையை உணர்ந்து தெய்வம் போல் வந்தார்கள் அம்மா.... இரண்டு உயிர்களைச் சமயத்தில் போய்க் காப்பாற்றியிருக்கிறார்கள். கூடத் துணைக்குப் போனது குற்றமானால், அது ஒன்றுதான் நான் செய்த தவறு......'' என்றான் அவன்.

அலமேலு திகைத்துப் போய் நின்றாள். அவள் என்ன பேசுவாள் ? அடி வாங்கியதால் கலைந்து போன கேசமும், கலங்கிய விழிகளும் அவளுடைய கோபாவேசமும் பாண்டியனின் அவைக் களத்தில் நியாயம் கேட்ட கண்ணகி போலக் கோமதியைக் காட்டின.

''கோமதி.... கோமதி....! அப்படி என்னைப் பார்க்காதே ! அப்படி என்னைப் பார்க்காதே.... நான் என்ன செய்வேன் ? கொடியில் உன் புடவைகூட இல்லை....'' என்று தடுமாறினாள் அலமேலு.

''அதனால் என்ன அம்மா ? நீ போன பிறகு சலவைக்குத் துணி போட்டேன். இதையும் சேர்த்துப் போட்டேன். அத்தனை அழுக்காக இருந்தது.''

அலமேலு அப்படியே சாய்ந்து விடுவாள் போலிருந்தது. அவள் உடல் ஆடியது. தன் தாயை அணைத்தபடி கயிற்றுக் கட்டிலில் உட்கார வைத்த கோமதி, அவள் மடியில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''அம்மா ! நீ வளர்த்த பெண் இல்லையா அம்மா ? உன் கைச் சோறு சாப்பிட்டு வளர்ந்த நான் தப்பாக நடந்திருப்பேன் என்று எப்படி அம்மா உன்னால் ஒருகணம் கூட நினைக்க முடிந்தது ? என்னை எத்தனை மோசமாக எடை போட்டு விட்டாய் ?'' என்று விம்மினாள் அவள்.

''கோமதி ! உன்னைப் புதுப் புடவையில் தலை நிறையப் பூவுடன் பார்த்த போது நான்.... நான்.... !''

''நான் எத்தனையோ சொன்னேன், அம்மா ! வீட்டில் போய்க் குளித்துக் கொள்வதாகக் கெஞ்சினேன். மாற்றுப் புடவை இல்லை என்றுகூடத் தயங்கினேன். தலைமை ஆசிரியருக்கு ஒரே சந்தோஷம் ! அவர் மனைவிக்கு வாங்கி வைத்திருந்த புடவையை எடுத்துக் கொடுத்தார். எவ்வளவோ சொல்லியும் இத்தனை பூவையும் அள்ளிக் கொடுத்தார். அவருக்குச் சந்தோஷம். எனக்கு இது பிராணாவஸ்தையாகிவிட்டது..''

'' இங்கேயே யாரிடமாவது சொல்லி விட்டுப் போயிருக்கலாம்....'' என்று மகளைக் குற்றம் சாட்டினாள் தாயார்.

''யாரிடம் நான் சொல்வேன் ? இவர் அவசரப்படுத்தினார். பக்கத்து வீடு காலி. எனக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. எழுதி வைத்து விட்டுப் போயிருக்கலாம் என்றால்கூட....'' கோமதி முடிக்கவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு தான் சொல்ல வந்ததை விழுங்கி விட்டாள்.

ஆனால் அலமேலு புரிந்து கொண்டாள். அவள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

மகளைச் சந்தேகித்ததற்காக வருத்தப்பட்டுக் கண்ணீர் வடித்தாளோ ? இல்லை.... தான் நாலு எழுத்துப் படிக்காமல் போன அவலத்தை நினைத்துப் புலம்பினாளோ ?

ஆண்டவனுக்குத்தான் தெரியும் !

ஆறு யாருக்குச் சொந்தம்?

ஜமீன்தாரி முறை இப்போது கிடையாது. ஆனால் ஜமீன்தாரி ஒழிப்புக்கு முற்பட்ட காலத்தில் நாம் வாழ்வதாகச் சில விநாடிகளுக்கு நினைத்துக் கொள்ளுங்கள்.

வீரப்பா ஜமீன் நிலத்தில் வேலை விவசாயம் செய்து கொண்டிருந்தான். அரசாங்கம் ஆற்று நீரை



அவன் வயலுக்குப் பாய்ச்சியதற்காக ரூபாய் முப்பத்தைந்து தீர்வை கட்ட வேண்டும் என்றது. வீரப்பா பணம் கட்ட மறுத்தான். கோர்ட்டுக்குப் போய் வாதாடினான். ''இது ஜமீன் நிலம். ஜமீனுக்குச் சொந்தமான நிலப் பகுதியில் ஓடுகிறது ஆறு. ஜமீன்தாருக்கு நான் வரி கொடுக்கிறேன். அரசாங்கம் என்னிடம் பணம் கேட்கக் கூடாது'' என்றான்.

''நிலம்தான் ஜமீனுக்குச் சொந்தம். ஆறு ஜமீன் நிலத்துக்கு முன்பாகவே உற்பத்தியாகி அப்பகுதியில் ஓடுகிறது. அதில் நீர் எடுக்கச் சர்க்காருக்குப் பணம் கட்டித்தான் ஆக வேண்டும்'' என்றது அரசு.

நீங்கள் நீதிபதியாக இருந்தால் என்ன தீர்ப்பு அளிப்பீர்கள்?

- வி. எஸ். ஸங்டன்கர்

விடை: ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் உள்ளடங்கிய ஃபுல்பெஞ்சுத் தீர்ப்பு இது:

1865ம் வருஷத்திய சென்னை சட்டம் 7ன்படி ஜமீன் நிலத்தின் ஊடாகப் பாயும் நதியின் பகுதிகள் சர்க்காருக்குச் சொந்தமில்லை. ஆகவே வீரப்பா தண்ணீர்த் தீர்வை கட்ட வேண்டியதில்லை. அரசாங்கம் ரூ. 35 உடன் வழக்குச் செலவையும் வீரப்பாவுக்குத் திருப்பித் தந்து விட வேண்டும்.

மாணவர் திறனாய்வு

மதுரை தியாகராசர் கல்லூரியில் விலங்கியலை முக்கிய பாடமாக எடுத்துக் கொண்டு பட்டப் படிப்புப் படித்து வரும் திரு நா. ரா. மோகனுக்கு இலக்கியத்தில் பெரிதும் ஆர்வம். ஆங்கிலத்திலும் தமிழிலும் பட்டப் பின் படிப்பை - (Post Graduate) தொடர வேண்டும், அப்புறம் ஆய்வுப் பயிற்சியில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறார். அத்துறையில் ஆர்வம் இருக்கிறது என்பதை 'அவனும் அவளும்' கதையின் திறனாய்வே ருசுப்படுத்துகிறது.

22-4-69ல் பத்தொன்பதாம் வயதைக் கடக்கும் ஸ்ரீ மோகன் 'இறைவன்' என்ற பெயரில் கவிஞர்; 'பிருந்தா' என்னும் பெயரில் கதைஞர்.

சிறுகதைப் போட்டியொன்றில் வெற்றி பெற்றமைக்காக அமைச்சர் திரு மாதவன் கையால், திரு மு. வ.வின் அகல் விளக்கைப் பரிசாகப் பெற்று மகிழ்ந்தார். அவரது அம் மகிழ்ச்சி நீடூழி நிலைக்க நாமும் வாழ்த்துவோம். □



நா. ரா. மோகன்

முழு உரு :

சூற்பனைச் செழுமை; கருவில் புதுமை; படைப்பில் இனிமை; உணர்வில் செம்மை; உணர்ப்பில் எழுமை (உயர்ச்சி) — ஆகிய இவற்றின் முழு உருவே 'அவனும் அவளும்' எனும் சிறுகதை எனில் பொருந்தும். சிறுகதையின் வகைகளைப் பிரித்துப் போந்த அறிஞர், கருவின் அமைப்பால் சிறப்புறும் சிறுகதை, ஒருவரின் பண்பின் அமைப்பால் சிறப்புறும் சிறுகதை, உள்ளத்தில் பதியும் உணர்வின் சிறப்பால் அமையும் சிறுகதை எனப் பாகுபாடு செய்வர். இவற்றுள் உணர்வின் சிறப்பை ஒட்டிய சிறுகதையே சிறந்தது என்று சிறுகதையில் வல்லுநரான போ (Edgar Allen Poe) என்னும் அறிஞர் கருதினர். துணையிழந்த இரு மனங்கள் 'பழமை — புதுமை; சமூகம் — மரபு; ஒழுக்கம் — கற்பு என்னும் பெயர்களில் வளர்ந்துவிட்ட விடுதலைக் கோட்பாடு — அதைச் சீராக்க முனையும் சமத்துவ நெறி — அதற்கெல்லாம் மேலே என்றும் தெய்விக வடிவாய் யாவர்க்கும் பொதுவாய் இலங்க வேண்டிய 'நியாயம்' என்ற மகத்தான ஒரு தத்துவம் — இவை யெல்லாம் பொறி சிதறும் நட்சத்திரங்களாக ஒளி பாய்ச்ச' இணைகின்றன.

கதை சிறிது; கதை மாந்தர் 'அவனும் அவளு'மாய் இருவரே; கதை நிகழ்ச்சிகளும் குறைவே. ஆயினும், ஒரு முழுத் தன்மையை இச்சிறுகதை பெற்றிருக்கிறது. அவன்—அவள் நட்பு; அவன் மனத்தின் இருண்ட மூலையில் சிறுமை தலை தூக்கல்; மன அலைவு; பெண்மையின் மணிக் குரலில் அவளுடைய கூற்று; இருவரும் ஒன்றுதல் — என்று ஒரு முழுத் தன்மையை இக்கதையில் காண முடிகிறது.

உரையாடல் மிகுந்தும் குறைந்தும் அமையாமல் அளவாக அமைந்துள்ளது. 'அழகு என்பது வேறொதுவுமல்ல; முரணற்றதே அழகு: 'கண்ணுக்கு இதமும் நெஞ்சுக்கு லயமும் தருவது எதுவோ, அதுவே அழகு. பார்க்கும் பொருளில் ஒரு கோணல் இருந்தால் அது பார்வையில் இடறுகிறது. அங்கு அழகு சிதைகிறது; 'விகார உருவத்திலும் நயமான ஒரு தன்மை இருந்தால் அதில் மனம் இதமுறுவதால் அங்கு முரண் மறைந்து அழகு நிலைக்கிறது'; 'கண்ணைவிட மனம் தான் அதிக வலிமையுடன் இயங்குகிறது'; 'யாவுக்குமாகப் பெருகும் அன்பு தன்னோடு யாவற்றையும் இரண்டற இணைத்துக் கொண்டு விடும்போது அந்த மகத்தான இணைப்பிலே முரண்களெல்லாம் மறைகின்றன. ஆகவே, அன்பினும் பெரியதோர் அழகு வேறில்லை.... என்று அவன் — அவள் உரையாடலின் மூலம் 'அன்பெனும் ஒன்றும் அமரரும் அறிந்த ஒன்றின்' சிறப்பை விளக்குதல் மாண்புடைத்து.

'இரண்டாம் மனைவியாக என்னை மணக்க இருக்கும் உங்களைப் பற்றிய என்னுடைய எண்ணங்களின் மூலமாகவே என்னைப் பற்றிய உங்கள் எண்ணங்களை நான் ஊகிக்க முடியுமல்லவா?'. — என்று அவளது உணர்விலும் அறிவிலும் ஒளி கிளர்ந்திட, பெண்மையின் நீதிக் குரலில் கேட்கும் 'அவளு'டைய கூற்றே இச்சிறு கதையை — பிரச்னையை வெகு எளிமையாக உணர்த்துகிறது.

'பார்க்கப் போனால் அழகு என்ற சம்பிரதாய லட்சணம் ஏதும் அவளிடம் அமைந்திருக்க வில்லை. ஆயினும் உறுப்புக்களின் சேர்க்கையில் ஒருவித இணக்கம் தெரிந்தது. தராசுத் தட்டுக்களை ஈடாக நிறுவியது போன்றதொரு சமநிலைத் தன்மையின் ததும்பாத அமைதி அவளிடம் காணப்பட்டது' என்று அவளுடைய இயல்பை வருணிப்பதில் ஆசிரியையின் திறன் பளிச்சிடுகிறது.

'எல்லாமே அவளுக்கு அப்படித்தான்: படித்த கதையாக, தெரிந்த கலையாக' — என்பன போன்ற அவனுடைய மன அலைவுகள் நன்கு சித்திரிக்கப் பட்டுள்ளன.

உணர்வு நயம் :


சுருங்கச் சொல்வதாயினும், எடுத்த கதைப் பொருள் உணர்ச்சி புலப்பட விளக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூடுதலாக விளக்கி இருப்பினும் பயன் மிகுந்திருக்காது என்று சொல்லத் தக்கவாறு அளவான விளக்கம் அமைந்து கதையை அணி செய்கிறது. அவளைச் சந்திக்குமுன் இருந்த அவன் மன நிலையையும், அவளையும், அவளின் இருப்பைக் குறிக்கும் வருணனையையும், அவனுடைய மன அலைவையும்—சுருங்கிய வடிவிற்குள்' விளக்கம் போதும் என்ற நிறைவு தோன்றுமாறு அமைத்திருக்கும் திறன் போற்றுதற்குரியது:

போக்குவரத்துச் சிவப்பு விளக்கு 'இன்னும் நேரமிருக்கிறது, 'தப்பி ஓடு' என்பது போல் சிறிது நேரம் நிறுத்தி வைத்தது.

உள்ளே ஒரு தலை கீழ்ப் புரட்டல், ஒரு மின்வெட்டின் கண் கூசும் காந்தி, ஓர்

அவனும் அவளும்

ஆர். சூடாமணி





இதயத்தின் புதிய, பிறப்பு, ஒரு விசுவரூப தரிசனம்—ஆனால் வெளியே....

இவை உள்ளக் கிளர்ச்சிட்டும் பெற்றியவை!

ஒருமை (Unity)

ஒரு நோக்கம்: (துணையிழந்த இரு மனங்கள் உணர்வின் ஆளுகையால் சேர்தல் அதற்கு இடையூறாக வேறொன்றும் புகவில்லை; ஒரு குறிக்கோள்: (அவன் — அவள் கூடல்) அதை ஒரே போக்கில் புலப்பட உணர்த்தியிருக்கிறார்; ஒரே செயல்: (பதிவுக் காரியாலயத்தில் அவன் — அவள் வரைவு) அதைத் தெளிவுறக் காட்டியுள்ளார். ஒரே உணர்வு: (அவன் மனத்தில் எழுந்த சிறு உணர்வுகளும், அவளுடைய உணர்வும்) உள்ளத்தே பதியுமாறு உணர்த்தும் பாங்கு நன்று! இவற்றையே Unitys of motive; of purpose; of action and in addition (in regard to results) Unity of impression என்பர்.

கதையின் உட்பொருளும் (Subject) சிறுகதையின் சிறு வடிவிற்குள் தெளிவுடனும், திறமையுடனும் விளக்கப்படும் பாங்கும் உன்னுதற்குரியது. படைப்பு முறையும் (Characterization) சுவைபட அமைந்துளது.

போக்கில் புதுமை :

நோக்கில் புதுமையும் போக்கில் புரட்சியும் பொலிகிறது. 'அவன் — அவள்' என்றே கதை முழுவதும் (பெயரைச் சொல்லாமல்) நடாத்திச் செல்லும் நயம் சுவை பயக்கிறது.

அவன் — அவள் மன உணர்வுகளையும், போராட்டங்களையும் சித்திரிக்கும் இச்சிறு கதை வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே காட்டாமல், வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சித்திரிக்கிறது. மனைவி என்பவளை வெறும் உடைமையாக எண்ணுவதைச் சாடும் திறனும் போற்றுதற்குரியது.

குறிக்கோளின் ஒருமையும், பயன் அல்லது விளைவின் ஒருமையும் (Singleness of aim and singleness of effect) ஆகிய இவ்விரண்டே சிறுகதையை இலக்கிய வகையாக மதிப்பிடு செய்வதற்கு உறுதுணை செய்பவை என்பர் அறிஞர். இரு ஒருமைகளும் இச்சிறுகதையில் இலங்குகின்றன; இவையே கதையை இலக்கிய வகையாகும் தன்மைக்கு உயர்த்துகின்றன; இலக்கியச் சிறப்பும் நல்குகின்றன. அதோடு 'முருகியல் இன்பம்' (Aesthetic pleasure) எனும் இலக்கிய இன்பத்தையும் நல்குகின்றன.

உணர்வுச் செறிவு

'தனி வாழ்வு இன்றோடு தீர்ந்தது. பத்து மணிக்கு அவள் பதிவுக் காரியாலயம் செல்லும்போது! அங்கு தோழமையும் இன்பமும் வாழ்வுப் பங்கீடும் அவள் வடிவில் காத்துக் கொண்டிருக்கும்'

'கனவில் ஓர் இசையைக் கேட்டுவிட்டு நனவில் அதை மீண்டும் மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்ள முயன்று தோற்று, இழப் புணர்ச்சியில் தவிப்பது போன்ற ஒரு சோகம் அவனைக் கவிந்திருந்த காலம் அது...'

வெறும் பொழுது போக்குக்கு உரியதாக மட்டும் நிற்காமல், உள்ளத்து உணர்வும் விழுமிய நோக்கும் விரவி அமைந்துள்ளது. எங்கோ கற்பனை வானில் பறந்து பொழுது போகாமல் மனித மனத்தின் எல்லா இருண்ட மூலைகளையும் பார்த்து, பல்வேறு மாந்தரின் உணர்வுகளுக்கு எழுத்துருவம் தரும் நல்ல முயற்சியின் அடிப்படையில் முகிழ்த்துள்ள இச் சிறுகதை, உண்மைப் படைப்பாக — அனுபவப் பிடிப்பாக இலக்கியச் சுவை கொண்டு என்றும் பொன்றாது நின்று நிலவும் என்பது வெள்ளிடைமலை.

வட்ட மேஜை

புத்தாண்டு 'இதழில் 'அபர்ணா' வின் ரயில் கட்டுரை மிக நன்கு அமைந்திருந்தது.

எனினும், சங்கிலி நிறுத்தம் போன்ற 'போராட்டங்களை'த் தவிர வேறெந்த மொழியையும் புரிந்து கொள்ளத் தெரியாத நிர்வாகத்தின் போக்குக் குறித்து வருந்தவே செய்கிறோம்.

இதைப் பாருங்கள்: திருச்சியிலிருந்து தஞ்சைக்கும் இடையிலுள்ள நிலையங்களுக்கும், எல். ஐ. ஸி., ஸ்டேட் பாங்கு, சர்க்கார் ' அலுவலகங்கள், மருத்துவக் கல்லூரி இவற்றில் பணி புரிவோரும் மாணவருமாகச் சுமார் நூறு பேர் வருகிறோம், தினசரி காலை 7-50க்குத் திருச்சியிலிருந்து புறப்பட்டு 9-45க்குத் தஞ்சை வந்து சேர வேண்டிய வண்டியில். மாலையில் 5-10க்கும், 7-35க்கும் தஞ்சையிலிருந்து புறப்பட்டு 7-20, 9-20க்குத் திருச்சி போகும் வண்டிகளில் எங்கள் சங்க உறுப்பினர்கள் திருச்சி போகிறார்கள்.



வண்டிகள் தினசரி தாமதம் தான். இரவு வண்டிகளில் விளக்கு கிடையாது. விசிறி கிடையாது. நாங்கள் ஜனநாயக முறையில் கடிதம், புகார், மகஜர், முறையீடு, நேரடிப் பேட்டி ஆகிய முறைகளில் முயன்றுதான் வருகிறோம், கடந்த இரண்டு ஆண்டுகளாக. ''விஷயம் கவனிக்கப்பட்டு வருகிறது'' என்ற மாமூல் பதிலைத் தவிர வேறு நடவடிக்கை இல்லை. இந்த நிலை எங்களுக்கு ஜனநாயக முறைகளின் மீதுள்ள நம்பிக்கையைத் தளர்த்தி வைக்கிறது. எங்கள் பகுதியில் 'சங்கிலி இழுப்பு' கிடையவே கிடையாது. இருந்தால் ஒரு வேளை வண்டிகள் ஒழுங்காகப் போகுமோ, என்னவோ ?

தஞ்சை — பி. எஸ். ரங்கராஜன், செயலாளர்,
15-4-69 — ரயில் பிரயாணிகள் சங்கம்

சென்ற 13-4-69 தேதியிட்ட 'கல்கி'யில் 'பஞ்சாப் படுகொலை' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள கட்டுரையில், மக்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய உத்தரவு பிறப்பித்த ராணுவ அதிகாரியின் பெயர் ''ஓ'டயர்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரியின் பெயர் ஜெனரல் டயர் (Dyer) வெறும் டயர் தான். 'ஓ' கிடையாது! அப்பொழுது பஞ்சாப் லெஃப்டினண்ட் கவர்னராக இருந்தவர் பெயர் ஸர் மைகேல் ஓ'ட்வயர். அவர் பெயரில் 'ஓ' உண்டு. அதை ஜெனரல் டயர் பெயருக்கும் தொற்ற வைத்திருக்க வேண்டியதில்லை.

புதுதில்லி
14-4-69 — ரா. பார்த்தசாரதி

மாணவர்களுக்கான இலக்கியத் திறனாய்வுப் போட்டியில் பரிசு பெற்ற என் கட்டுரை 'கல்கி'யில் வெளியாகியிருந்ததைக் கண்டேன். அது பற்றி ஒரு வார்த்தை: 'கல்கி' காரியாலயத்துக்கு நான் எழுதியனுப்பிய அறிமுகக் குறிப்பில் என் தந்தை திரு 'வி. ஸ்ரீனிவாசராகவன் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் கல்கியில் என்னைப் பற்றிய அறிமுகப் பகுதியில் என் தந்தை ஸ்ரீ விஜயராகவன் என்று வெளியாகியிருக்கிறது.

குடந்தை
17-4-69 — வி. எஸ். ஸரோஜா

(தவறு நேர்ந்தமைக்கு வருந்துகிறோம்.
- ஆசிரியர்.)

ராஜாஜி அவர்கள் ராமாயண மகா காவியத்தை எழுதுமுன் எழுதியுள்ள முன்னுரை என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. இம்மாதிரி சிறப்புள்ள விஷய ஞானங்களை அவர் வாயிலாகப் படிக்கும் பாக்கியம் நம்மில் கிடைத்திருப்பது நாம் செய்த புண்ணியம்.

கீரனூர், 11-4-69
வை. சிவப்பிரகாசம்

அனுமன் துணையோடு அண்ணல் ராஜாஜி முனிவன் வால்மீகி மொழிந்ததை இனி வரும் 'கல்கி'யில் சுவையோடு சொல்வதைக் கேட்பதே சுகம்.

பொருளூர்
11-4-69 — வி. ஆர். பாலசுப்பிரமணியன்

ஜூனியர் 007 பாலு, சீனியர் ஜேம்ஸ் பாண்ட் ஆகும் நாளை எதிர்பார்க்கிறேன்.

காரைக்குடி — 1
11-4-69 — இலத்தூர் மணி

கல்கி புத்தாண்டு மலர் மிகவும் ரம்மியமாகவும், சுவையாகவும் இருந்தது. இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'அவள் என் மனைவி' ஓர் அற்புத சிருஷ்டி. தமிழ் நாட்டுக் கதாபாத்திரங்கள் இருவரைப் பிரச்னைகள் நிறைந்த 'தந்திர பூமி'யில் சந்திக்க வைத்து, 'ரூபாய் — பைசா'வுக்கு அப்பாற்பட்ட அவர்களது காதலை அற்புதமாகச் சித்திரித்து ஆசிரியர் வெற்றி கண்டுள்ளார்.

திருச்சி
11-4-69 — எம். ஜே. ராமன்

கிளிஞ்சல் கோபுரத்துக்குக் கும்பாபிஷேகம் செய்தபோது ஆசிரியர், எங்கள் கண்ணீரைத்தான் புனித நீர்த்தமாகப் பயன்படுத்தி யிருக்கிறார்.'

திருச்சி—1
14-4-69 — பத்மாமணி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



பூப்போட்ட துணி அணிந்து
அழகு மலராத் திகழுங்கள் !
நேர்த்தியான, பூப்போட்ட
'டெரீன்'/காட்டன் துணிகளிலி
ருந்து தயாரிக்கப்பட்ட ஸ்கர்ட்
அல்லது குர்த்தாவை அணிந்
தீர்களானல், உங்கள் அழகு
சிறந்து மிளிர்வதைக் காண்பீர்
கள் ! இந்த நேர்த்தியான துணி
கள் சுருக்கம் விழாதவை; மலர்
போன்ற மென்மையும் புதுமை
யும் கொண்டவை. ட்ரெஸ்ஸி
பெய்ஸ்லி, பாப் பிரிண்ட், லான்
மற்றும் பாப்ளின் வகைகளும்
உள்ளன. விரும்புவதை
வாங்குங்கள் !
பாம்பே டையிங்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon